Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50


දිනමුරසු වාරමලර් நவ.18-24, 2001

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 434

## சந்திரிக்காவின் சாமர்த்தியத்திற்கு ரணில் விடுக்கும் சவால்







தீப ஒளி விளக்கை
திசைதோறும் ஏற்றிவைத்து
தூய வளம் பெருகவரும்
தீபாவளித் திருநாளை
தூய்மையுடன் போற்றித் துதித்துக்கொண்டாடிடுவோம்

# ஆன்மீகம்

## நவரெத்தினங்கள் தரும் நன்மைகள்

இந்து மதத்தில் நவரத்தின மணிகளான மாணிக்கம், முத்து, பவளம், மரகதம், புஸ்பராகம், வைரம், நீலம், கோமேதகம், வைடூரியம் ஆகியவைகளை அணிவதால் உண்டாகும் பலாபலன்களைப் பற்றியும், அறிஞர்களால் கூறப்பட்டுள்ளதை சாஸ்திரங்கள் மூலம் அறியலாம். எல்லாம் வல்ல இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட மணிகளுக்குள்ள மகிமையை இப்படி கூறுவர்.

மாணிக்கம்: நிறைந்த செல்வம் பெருகும். பூதப் பிரேத பயம் விலகும்.
முத்து :- வறுமை விலகும், ஆயுள் விருத்தியடையும்.
பவளம் :- புத்திர பாக்கியமுண்டாகும்.
மரகதம் :- புகழைக் கொடுக்கும்.
புஷ்பராகம் :- வெற்றியைக் கொடுக்கும்.
வைரம் :- பகைவர் பயம் நீங்கும். துஷ்ட மிருகங்கள் அண்டாது.
நீலம் :- சனிதோஷம் விலகும்.
கோமேதகம் :- பாபங்கள் விலகும் அஞ்ஞானம் நீங்கும், ஞான மார்க்கம் பிறக்கும்.
வைடூரியம் :- அறிவு வளரும். சமுதாயத்தில் மதிப்பும் கௌரவமும் உயரும்.

நவரெத்தினங்களின் சிறப்பியல்புகளையறிந்து அவரவர் தேவைக்கேற்ப வசதிப்படி மோதிரங்களில் பதித்து வாழ்ந்து வரும்போது அதன் பயனை அறிந்து கொள்ளமுடியும். மனநம்பிக்கையுடன் மத அனுஸ்டானத்துடன் செய்யும் காரியங்கள் நிச்சயம் நல்ல பலனைத் தரும்.

அர்ச்சகர் அ.அரசரெத்தினம்-சேனையூர்-06.



## மாண்புறு ரமழான்

உலக முஸ்லிம்கள் உவகை கொள்ளும் மாண்புறு ரமழான் மனித குவத்தை வந்தடைந்து விட்டது.

இவ் மேன்மைமிகு மாதத்தில் ஒவ்வொரு முஸ்லிமும் நோன்பு நோற்பதை அல்லாஹ் அவன் சிருஷ்டிக்கு கடமையாக்கியுள்ளான்.

புனித ரமழான் மாதத்தின் ஒரு வினாடி நேரத்தைக் கூட வீணாகக் கழித்துவிடக் கூடாது என்று இறைதூதர் அவர்கள் எடுத்தியம்பியுள்ளார்கள்.

எந்த மனிதரேனும் யாராவது ஒரு நோன்பாளிக்கு நோன்பு திறக்க இந்த மாத்தில் உணவளிப்பாரானால் அது அவருடைய பாவங்கள் அல்லாஹ்வால் மன்னிக்கப்படுவதற்கும் நாளை மறுமையில் அவர் நரக நெருப்பிலிருந்து விடுதலை பெறுவதற்கும் காரணமாகி விடும் என நபி அவர்கள் நபின்றுள்ளார்கள்.

ஆதாரம்: ஜாமி உஸ் ஸகீர்.

ரமழான் பொறுமையின் மாதமாகும். பொறுமையின் பிரதி பலன்சொர்க்கமாகும். இன்னும் இம் மாதம் மனிதர்களுடன் கலந்துறவாடி அவர்களின் சுக துக்கங்களில் பங்கு கொள்கிற மாதமாகும்.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

## விசுவாசம் பலனளித்தது

இயேசு தெக்கப்பொலி நாட்டில் புதுமைகள் பல செய்த பின் படகேறி, கடலைக் கடந்து மறு கரையை அடைந்தபோது பெருந்திரளான மக்கள் கூட்டம் அவரை அணுகினர்.

அப்போது யாயிர் என்ற தொழுகைக் கூடத் தலைவன் இயேசுவின் காலில் விழுந்து என் மகள் சாகுந் தறுவாயில் இருக்கிறாள். நீர் வந்து உம் கைகளை அவள் மீது வையும். அப்போது அவள் நலம்பெற்று பிழைத்துக் கொள்வாள் என்று வருந்தி வேண்டினான். இயேசு சென்றபோது திரளான மக்கள் கூட்டம் அவரை பின்தொடர்ந்தனர்.


பன்னிரு வருடம் மருத்துவர்களால் குணப்படுத்த முடியாத இரத்தப் போக்கினால் வருந்திய பெண் ஒருவர் அங்கிருந்தார். அவர் நிலைமை வர வர கேடுற்றது. அவர் இயேசு வருவதை அறிந்து முண்டியடித்து மக்கள் கூட்டத்தினுள் நுழைந்து அவரது மேலுடையைத் தொட்டாள்.

நான் அவரது ஆடையைத் தொட்டாலே நலம் பெறுவேன் என்று அப்பெண் எண்ணிக் கொண்டார். (மாற்கு 5:28)

உடனே இரத்தப்போக்கு நின்று போயிற்று. தனது நோய் குணமடைந்ததை உடலில் உணர்ந்தாள். சகோதர சகோதரிகளே! பார்த்தீர்களா அவளது விசுவாசம் எப்படி பலனளித்தததென்று. நாமும் உண்மையான விசுவாசத்துடன் நம் நோய்களை மட்டுமல்ல. நம் பாவங்கள் யாவற்றையும் இயேசுவிடம் அறிக்கையிட்டு நலம் பெறுவோமாக!

ஜோசப் அருள்சாமி-திகனை.

## கவிதைப் போட்டி இல.434



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 18.11.2001

கவிதைப் போட்டி இல.434
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.431

### பரிசுக்குரிய கவிதை

### மறவாதே!

இலை விட்டு, கிளை விட்டு
காய் விட்டுக் கனி விட்டால்,
அழையாமலே பறவை எல்லாம்
வந்திடாதோ வழி கேட்டு-தேன்
சொட்டும் பழம் தின்ன வந்த
சொந்தம் எல்லாம் நீ யொரு
பட்ட மரம் என்றவுடன்-உனைக்
கைவிட்டுப் போகும் மறவாதே!

சீனக்குடா-க.தங்கராஜா.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### பட்ட ம(ர)னம்

பட்டமரம் தளிர்ப்பதில்லை
பாழ்ப்பட்ட போராலே.
மானிட மனங்களும்
இக்கதையாச்சே!

சோ.சங்கரலிங்கம்-திருப்பழுகாமம்-02.

### காத்திருப்பு

நாலாபுறமும் யுத்தத்தால்
பசுமையிழந்து பட்டமரமாய்
தனிமையில் காத்திருக்கின்றேன்
வெண்புறாவே! என்வேரை
கறையான் அரிக்குமுன்
விரைந்து வந்துவிடு
என் வாழ்வில் வசந்தம் மலர

ஆர்.எஸ்.மாலா-மடுக்கோவில்.

### நிலை கெட்டாரே உங்களுக்காக...

என் தலை போன இடம் தெரியவில்லை
உன் இலை போன நிலை புரியவில்லை
பட்ட மரமாய் வேரூன்றப் பட்ட நாம்,
நொந்து பட்ட இன்னல்களை..
வெட்ட வெளியில் வேடிக்கை பார்க்க,
வெறுமையாக்கப்பட்ட நாம்
நிலை கெட்டார்க்கு நற் காட்சிதான்!

லைலா அக்ஷியா அக்ரம்-குருணாகல்.

### பாரதி எதற்கு!

ஈழத்தின் துயரியம்ப
இங்கு ஒரு பாரதி தேவையில்லை.
இள வேனில் காலத்திலுள்
இலையுதிர்ந்து நிற்கும் மரமே போதும்

சீனிராசா எடிசன்-கொழும்பு-12.

### சோதனை

சிறகொடித்த கிள்ளையைப்போல்
இலை சொரிந்த பெருவிருட்சம்
சந்தித்த சோதனைகளை சிந்தித்து
சிந்தித்து-முடி
சிந்திய சென்னியின் உருவில்.

கணபதிப்பிள்ளை யாழினி-நீர்வேலி.

### பட்டுப்போகும் உயிர்களாய்...

தாண்டவமாடும் போரால்-மனிதன்
தான் பட்டுப் போகிறான் என்றால்
மனிதனைப் போன்று இருப்பதால்
மரமே உனக்கும் அதே கதிதானா?

ஜனனி தயாளன்- வெள்ளவத்தை.

### கொடை

ஆறறிவார் வீடுகட்ட,
ஐந்தறிவார் கூடு கட்ட
நானிலத்தில் வளர்ந்து நிற்கும்
நன்மரமே!
மூவேளை உணவில்லை;
இருவேளை உறக்கமில்லை!
ஒருவேளை இளைப்பாற
உன் மடியை தருவாயா..?

நா.ஜெயபாலன்-பிபிலை.

### எமக்கு எமன்

பார் உடைத்தே வேர் பதித்து
தாழ் பதித்தே நீர் குடித்தாய்
யார் கொடுத்தார் தோள் உனக்கு
நீ கொடுத்தாய் நிழல் எமக்கு
பரிதியின் பார் நம் உலகில்
போர் தொடுத்தோர் எமன் எமக்கு
வேரோடு சாய்க்கிறாரே.

வரதராஜன் சாருமதி-
கொக்குவில் கிழக்கு.

### மனிதத் தலை

இயற்கை
எங்கிருந்து
தோண்டி
எடுத்ததோ
இந்த மனிதத்
தலையை.

எஸ்.பி.கணேஷ்-
தண்டியடி.

### ஏக்கம்!

எனக்கு
இந்த நிலையிலும்,
நடப்பதற்கு கால்கள் மட்டும்
இருந்திருந்தால்,
இடம் பெயர்ந்தாவது.
இன்னொருவருக்காக
வாழ்ந்திடுவேன்.

த.கிருஷ்ணவேணி-
பண்டாரவளை.

### உரைத்திடல் வேண்டியோ?..

உருவழிந்த மரமிங்கே
உணர்வழிந்த மனிதத்தின்
முக மொத்திருப்பது...
மனிதனு மின்று
மரக்கட்டை யென்ற செய்தி
உரைத்திடல் வேண்டியோ?!

சி.மதியழகன்-அல்வாய்.

## வாசக[ர்] சாலை

**அன்பின் முரசே!**

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சுவையிலும் சுவையானது நீ வரும் வாரத்தில் ஒரு நாள் அன்று என் கரம் கிடைத்ததும், என் கரம் விட்டு செல்வதற்கு நான் விரும்பமாட்டேன். அனைத்து நெஞ்சங்களிலும் இடம் பிடித்த அன்பு முரசு என்றென்றும் பல கோடி ஆண்டுகள் வாழ்ந்திட வாழ்த்துகிறேன்.

பொ.வசந்தா-கரடியனாறு.

**முரசே என் சிரசே!**

வாரமொரு முறை வண்ணமலராய் மலர்ந்து எம் உள்ளத்தை கொள்ளை கொள்ளும் முரசே!

வாசகரெம் மனம் என்னும் சிம்மாசனத்தில் வீற்றிருந்து நாற்றிசையும் புகழ் பரப்பி நிற்கும் நீ, நித்தம் தாங்கி வரும் 'அரசியல் கட்டுரை'கள் தித்திக்கும் தேனான கவிதைகள் தாங்கிவரும் 'தேன் கிண்ணம்', 'சிறுகதைகள்', 'எஸ்.டி.எஸ்.' தொடர், 'தொடர்கதை', 'மன்னாதி மன்னன்' என்பன சூப்பரோ சூப்பர்!

முரசே பத்திரிகை உலகில் உனக்கென்று நீ வகுத்த பாதையில் சீராக உன் பயணம் தொடர வாழ்த்துகிறேன்.

என்றும் உன்னவன்
வதிரியூர்.த.அஜந்தகுமார்.

**என் முத்தான முரசே உனக்கு!**


மக்கள் அனைவரும் உனை ஆசையுடன் வடிக்கிறார்கள். ஒவ்வொரு வியாழனும் உன்னை போட்டி போட்டு வாங்குகிறார்கள். மேலும் நீ வாரந்தவறாமல் சுமந்து வருகின்ற 'பாப்பா முரசு' 'சிந்தியா பதில்கள்' 'தேன் கிண்ணம்' போன்றவை அருமையிலும் அருமை. மேலும் நீ தொடர்ந்து வருவாய். என்பதில் எந்த வித சந்தேகமுமில்லை என்றும் அன்புடன்

ஆர்.திவாகரன்-நெடுங்கேணி.

**அகிலம் போற்றும் இனிய முரசே!**

வாரா வாரம் நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். 'அதிரடி அய்யாத்துரை', 'அண்டை மண்டலத்தில்', 'எஸ்.டி.எஸ்' தொடர் ஆகியவையும் 'வாரம் ஒரு வார்த்தை'. 'கவிதைகள்', 'சிறுகதைகள்' 'தியைுலக மறுப்பக்கம்', 'தொடர்கதைகள்', 'பாப்பா முரசு' போன்றவையும் சூப்பர். உலகை உலுக்கிய சர்வாதிகாரி 'ஹிட்லர்' இம் முரசையும் உலுக்கி வருவது வரவேற்கத் தக்கதாகும். உனது நேர்மையுள்ள சிறப்பான பணி என்றும் தொடர வேண்டும். சூப்பர் முரசே உன் சேவை தொடர என்னிதய நல்வாழ்த்துக்கள்.

என்.பி.தனம்-நெடுந்தீவு-02.



கமலின் 'தெனாலி' படக்கதையை வெளியிட்ட முரசு, சில வாரங்களுக்கு முன் 'ஆளவந்தான்' படத்தின் கதையை வெளியிட்டது. முரசு-432ல் கமல் கௌரவ வேடத்தில் நடித்துள்ள 'பார்த்தாலே பரவசம்' படத்தில், கமல் நடிக்கும் வேடம் பற்றியும் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து கமல் படங்களின் கதையை வெளியிட்டு, கமலின் இரசிகையான என்னை மகிழ்விக்கும் முரசுக்குப் பாராட்டுக்கள் கோடி.

எஸ்.அபிலாஷா, சுவிஸ்.

முரசின் நீண்ட நாள் வாசகனாகிய நான் முரசுக்கு எழுதும் முதல் மடல் இது. கவிதைப்போட்டி-429க்கான படத்திற்கு வெளியான கவிதைகள் அத்தனையும் அருமையிலும் அருமை.

இப்படியான 'நச்' சென்ற குட்டிக்கவிதைகளை தொடர்ந்தும் எதிர்பார்க்கும்.

கே.இளங்குமரன், பம்பலப்பிட்டி.

கடந்த வார முரசில் 'உங்கள் பக்கம்' பகுதியில் இலங்கையில் வெளியாகும் ஆபாசப்படங்கள் பற்றி ஆசிரியர் ஒருவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார். என் கருத்தும் அதுதான். நல்லதொரு எதிர்கால சந்ததியை உருவாக்கும் பொறுப்பான அந்த ஆசிரியர் வழங்கிய நல்ல கருத்துக்கு நன்றி தெரிவிக்கிறேன். இதைப் போன்று சமுதாயத்தை சீரழிவுக்கு இட்டுச் செல்லும் விடயங்களை முரசு சுட்டிக் காட்ட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

எம்.நஸார்தீன், கிராண்ட்பாஸ்.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# உங்கள் பக்கம்

## மலையகம் விழிப்புற வேண்டும்!

மலையகத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவு தேர்தல் களம் களைகட்டியுள்ளது. "தோட்டத் தொழிலாளர்களுக்கு சலுகைகளை பெற்றுக் கொடுக்கவும்" "எமது மக்களுக்கு சேவை செய்யவும்" ஊர் பேர் தெரியாதவர்கள் எல்லாம் வந்து குவிந்துள்ளார்கள். முன்னைய காலங்களில் போலவே இம்முறையும் வாக்குறுதிகள் சர்வ தாராளமாக அள்ளி வீசப்படுகின்றன.

நூற்றாண்டு காலமாய்த் தொடரும் எங்கள் அடிமை வாழ்வின் அவலங்களும், கண்ணீரும்;... தேயிலைச் செடிகளுக்குள் எமது இரத்தமும் உயிரும் உரமாகும் துயரமும்; மூன்றாம் தலை முறையையும் தாண்டி இன்னும் தொடர்கின்றது... இந்த மீளமுடியாத அடிமை வாழ்வின் துயரமும், சோகமும் எமது உணர்வுகள் எல்லாம் அடக்கப்பட்ட லயத்து வாழ்க்கை, என்ற துன்பச் சகதிக்குள், தத்தளித்துக் கொண்டு இருப்பதை நாம் அறிந்தும், தெரிந்திருந்தும் தெளிவற்றவர்களாக அதிலிருந்து மீண்டு வர முடியாமல் பேரினவாதிகளின் அரசியல் சதி வலைக்குள் சிக்குண்டு தவிக்கிறோம்.

"அடிமை விலங்கொடித்து உங்களை மீட்போம்" என அறை கூவிய எங்கள் தலைவர்களும் பேரின வாதிகளின் அரசியல் சூட்சிகளால், அவர்களின் "எடுப்பார் கைப்பிள்ளையாகி" கட்சி மாறுவதொன்றையே தமது அரசியல் கொள்கையாக கடைபிடித்து வருகிறார்கள்.

எமக்கான கல்வியில்; பௌதீக வளங்களை வழங்குவதில் பாகுபாடு, கலை- விளையாட்டுத் துறைகளில் பராபட்சமும் புறக்கணிப்பும், ஆசிரியர் பற்றாகுறை, ஆசிரியர் தொழில் பான்மை விருத்தியில் பாகுபாடு, நாம் உயர் கல்வியைக் கற்பதற்கான வாய்ப்பின்மை; எமது தாய்மொழியாம்-தமிழை நிர்வாக மொழியாக நடைமுறைப்படுத்துவதில் அக்கறையின்மை, இவை எவையும் இன்று வரையும் தீர்க்கப்படாமல் பிரச்சனைகளாகவே எம்மைத் தொடர்கின்றது... இவற்றைத் தீர்ப்பவர்கள் யார்? எப்போது...?

கண்டி, பதுளை, நுவரெலியா போன்ற எம் மண்ணிலுள்ள தொழில் நுட்ப கல்லூரிகளில் தமிழ் மாணவர்களுக்கு இடமில்லையாம்..? தமிழில் கற்கை நெறிகளும் இல்லை. ஆனால் பெரும்பான்மை இன மாணவர்களுக்கோ, சகல கற்கை நெறி வசதிகளும் தாராளமாக வழங்கப்படுகின்றது... இந்தப் பராபட்சத்தைத் தட்டிக் கேட்பவர்கள் யார்?...

பாலியல் வல்லுறவுகளும், காரணமின்றி சந்தேகத்தின் பேரில் கைது செய்து சிறையில் அடைத்தல் சித்திரவதை செய்தல், போன்ற வன்முறை சம்பவங்களும் அராஜகங்களும், எம்மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது.

இதுவரைகாலமும் இவை பற்றி எதுவும் பேசாது 5 ரூபா சம்பளம் அதிகரிப்பதற்காக அரை தசாப்தம் பேச்சு வார்த்தை நடத்தியவர்கள் திடீரென விடிவு பிறக்கப்போவதாக கூறி மீண்டும் ஒரு தடவை மலையக மக்களின் காதுகளில் பூச்சுற்ற ஆரம்பித்திருக்கிறார்கள்.

எமது மக்களின் தீர்க்கப்படாத பிரச்சனைகளின் பட்டியல் மிக நீளமானது. ஆனால் அவற்றின் தீர்வு தொடர்பில் எமது தலைவர்கள் முன் வைக்கும் வாக்குறுதிகள் பிரச்சனைகளை முற்றிலும் திசை திருப்பும் விதத்திலேயே அமைந்துள்ளது.

தேர்தலில் கொடுக்கப்படும் வாக்குறுதிகளில் 10 சதவீதம் நிறை வேற்றப்பட்டிருந்தால் கூட இன்று மலையக மக்கள் அடிப்படை வசதிகளுடனாவது வாழ்வார்கள். ஆனால் தேர்தல் வருகிறது தலைவர்கள் வருகிறார்கள் பிரச்சனைகள் மாத்திரம் தீர்ந்தபாடில்லை.

தம்மை நாடி வரும் தலைவர்களிடம் மலையக மக்கள் தமது நெருக்கடி வாழ்வை அழுத்திச் சொல்ல வேண்டும். இதற்கு முன்னையை காலங்களில் போன்று ஏமாற்றி வாக்குகளை பெற்று பின்னர் அனைத்தையும் மறந்து விடும் போக்கிலிருந்து நமது தலைவர்களை திசை திருப்ப வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்கள் கள்ளுக்குடிக்க பணம் வாங்கிக் கொண்டு வாக்குப் போடுவார்கள் அதனால் என்ன செய்தாலும் பிரச்சனையில்லை. நாம் தான் ராஜாக்கள் என்ற நினைப்பு சிலரிடம் இருக்கின்றது.

அந்த அபிப்பிராயத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்கு மலையகத் தலைமைகளை உள்ளாக்க வேண்டியது தோட்டத் தொழிலாளர்களின் கடமையாகும்.

*எஸ்.பிரதீபன் ராமசாமி-டிக்கோயா.*

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266

# நீதியும் நேர்மையுமான தேர்தல் ஒன்றை உறுதிசெய்யுமாறு

# மதத் தலைவர்களும், புத்திஜீவிகளும் வேண்டுகோள்

நாடு முழுவதிலும் தேர்தல் வன்முறைகள் பரவலாக அதிகரித்துவரும் நிலையில் எதிர்வரும் பொதுத்தேர்தலை நீதியாகவும் நேர்மையாகவும் நடத்துவதற்கு அரசாங்க ஊழியர்களும் பாதுகாப்புத் தரப்பினரும் ஏனைய பொறுப்புள்ள சகலரும் அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு மதத் தலைவர்களும் புத்திஜீவிகளும் சிவில் அமைப்புக்களும் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளன.

இது தொடர்பாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் சிவில் அமைப்புக்களின் தலைவர்கள் உள்ளிட்ட சுமார் 50க்கு மேற்பட்ட புத்திஜீவிகள் கையொப்பமிட்ட அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இதில் தேர்தலுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அபேட்சகர்கள் கீழ்மட்ட அரசாங்க ஊழியர்கள் பொதுஜன தொடர்பு சாதனங்கள் உட்பட சகலரும் மக்களின் ஜனநாயக உரிமையைப் பாதுகாப்பதற்காக முடியுமானளவு அர்ப்பணிப்பு சிந்தையுடன் செயற்படுமாறு கேட்கப்பட்டுள்ளது.

நீதியானதும் நேர்மையானதுமான தேர்தல் ஒன்றை உறுதி செய்யவேண்டியது அரசாங்க ஊழியர்களின் பொறுப்பாகும். அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணியாது மக்களின் உரிமையை நிலைநாட்ட பாடுபட வேண்டும். ஜனநாயகத்தில் உயிர்நாடியாக கருதப்படும் மக்களின் வாக்களிப்பு உரிமையை பலாத்காரத்தின் மூலம் பெறுவதற்கு எவருக்கும் இடமளிக்கக்கூடாது.

முன்னைய காலங்களில் இடம்பெற்ற தேர்தல்களின் போது நடந்த வன்முறைகள், முறைகேடுகள் இம்முறை நிகழாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு சகல அரசாங்க ஊழியர்களுக்கும் இருக்கின்றதென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தேர்தல் நெருங்கும் தருணத்தில் நாளுக்கு நாள் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. புதன்கிழமையாகும்போது 700க்கும் மேற்பட்ட தேர்தல் வன்முறைகள் குறித்த முறைப்பாடுகள் பொலிஸ் தலைமையகத்தில் பதிவாகியிருந்தன.

வடமேல் மாகாணத்தில் குருநாகல், புத்தளம் மாவட்டங்களிலும் கேகாலை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களிலுமே அதிக அளவிலான வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த ஞாயிறன்று நாத்தாண்டிய என்ற இடத்தில் நடந்த கைகலப்பினால் ஏற்பட்ட பதற்றத்தையடுத்து நகரில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டது. இதன்போது பலர் காயமடைந்தனர். ■

## கிழக்கு தலைவர்களுக்கு
## பிரபாகரன் உத்தரவு!

கிழக்கிலுள்ள புலிகளின் உள்ளூர் தலைவர்களைக் குறிவைத்து புலிகளின் பகுதிகளில் பொது மக்களால் நடத்தப்பட்ட பல குண்டுத் தாக்குதல் சம்பவங்களுக்குப் பின்னர் கிழக்கிலுள்ள புலிகளின் உள்ளூர்த் தலைவர்களை வெளியே நடமாட வேண்டாமென பிரபாகரன் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த எச்சரிக்கையின் பின்னர் கிழக்கிலுள்ள புலித் தலைமைகள் பொதுமக்கள் கலந்து கொள்ளும் வைபவங்களில் பிரசன்னமாவதைத் தவிர்த்து வருகின்றனராம்.

கிழக்கில் கடந்த சில மாதங்களில் புலிகளின் பகுதிகளில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் ஐந்து பேர் கொல்லப்பட்டனர். அதனைத் தொடர்ந்து பல பொதுமக்கள் புலிகளால் கைது செய்யப்பட்டனர். சிலருக்கு மரண தண்டனையும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ■

## தென்பகுதிக் கடலில் 17ம் நூற்றாண்டில் மூழ்கிய
## டச்சுக் கப்பலை மீட்கத் திட்டம்

17ம் நூற்றாண்டில் வாசனைத் திரவியங்களுடன் தென்னிலங்கை கடற்பகுதியில் மூழ்கிய கப்பலின் சிதைவுகள் மீட்டெடுக்கப்பட உள்ளன. இதற்காக இலங்கைக்கு உதவப் போவதாக நெதர்லாந்து அறிவித்துள்ளது.

இந்தோனேஷியாவில் இருந்து ஐரோப்பாவுக்கு வாசனைத் திரவியம் ஏற்றிச் சென்ற 'அவொன்ஸ்டர்' எனும் கப்பல் 1659ல் காலிக்கு அருகில் உள்ள கடல் பகுதியில் மூழ்கியது. இக்கப்பல் டச்சு கிழக்கு இந்திய கம்பனிக்கு சொந்தமானதாகும்.

இக்கப்பலின் சிதைவுகளை மீட்டெடுக்க 1.8 மில்லியன் கில்டர்களை (7 இலட்சம் டொலர்) நெதர்லாந்து இலங்கைக்கு வழங்கவுள்ளது.

மணல் குன்றின் மீது மோதியே மேற்படி கப்பல் விபத்துக்குள்ளானது. கடலில் மூழ்கிய கிழக்கிந்திய கப்பனியின் கப்பல்களில் ஒன்றின் சிதைவுகள் சுழியோடிகளால் 1990களில் கண்டெடுக்கப்பட்டன. அதில் ஒன்றே அவொன்ஸ்டர் ஆகும்.

மீட்புப் பணியில் ஈடுபடுவதற்காக இலங்கையர்களுக்கு ஆழ்கடலில் சுழியோடுவது குறித்து பயிற்சி வழங்கப்படும் எனவும் இலங்கையில் உள்ள டச்சுத் தூதரகம் அறிவித்துள்ளது. இக்குழுவுடன் 4 அவுஸ்திரேலிய சுழியோடிகளும் இணைந்து கொள்வர். ■

## தென், வடமேல் மாகாணங்களில் கூடுதல் பாதுகாப்பு
## சட்டவிரோத ஆயுதங்களைத் தேடி பொலிஸார் வேட்டை

அரசியல்வாதிகளின் கையாட்கள் வசம் உள்ள அனுமதிப்பத்திரமற்ற துப்பாக்கிகளை உடனடியாகக் களையுமாறு பொலிஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு நாட்டில் உள்ள சகல பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

இவர்களில் சிலரிடம் அதிகமான சட்டவிரோத ஆயுதங்கள் இருப்பதாகப் பொலிஸாருக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளை அடுத்தே அந்த நடவடிக்கையை அவர் எடுத்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் நாட்டில் தேர்தல் மற்றும் அரசியல் வன்முறைகள் அதிகரித்துக் கொண்டு வருவதால் அவற்றைத் தடுப்பதற்கு ஒரு நடவடிக்கையாகவே பொலிஸ் மா அதிபர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதில் அரசியல் பாகுபாடின்றி பொலிஸார் செயற்பட வேண்டும் என்றும், அவ்வாறு செயற்படாவிட்டால் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தல் வன்முறைகள் கூடுதலாக இடம்பெறும் வடமேல் மாகாணத்திற்கும் தென்மாகாணத்திற்கும் விசேட பொலிஸ் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக தேர்தல் செயலக பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்தார்.

இவர்கள் வீதித்தடைகள் ஏற்படுத்தி சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் ரோந்து நடிவடிக்கையும் மேற்கொள்வர். திடீர் சோதனைகளும் மேற்கொள்ளப்படும்.

வடமேல் மற்றும் தென்மாகாணங்களில் உள்ள சில பொலிஸ் நிலையங்களையும் உஷார் நிலையில் வைத்திருக்கவும் பிரசாரக் கூட்டங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கவும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ■

## கடற்படையினர் சூட்டதில்
## இந்திய மீனவர் பலி!

தமிழகத்தில் கோடியக்கரை நாகைப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் மீனவர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் நாகபட்டினம் பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாகை கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதிக்கு வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்கள்மீது கடும் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.

இதனால், முத்துவேல் (35 வயது) என்பவர் சூடுபட்டு படகினுள் வீழ்ந்து இறந்துள்ளார். சிங்காரவேல் (38 வயது) என்பவர் பலத்த காயடைந்தார்.

இவ்வேளையில் அப்பகுதியில் மேலும் பல மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் மீதும் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்திய போதிலும் அவர்கள் படகினுள் வீழ்ந்து படுத்ததால் தாக்குதலிலிருந்து தப்பிக் கொண்டனர்.

இந்தச் சம்பவத்தில் இறந்தவரது சடலம் நாகைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது அங்கு பெரும் பதற்றம் நிலவியது.

## சமாதான முயற்சிக்கு உயிரளிக்க
## கதிர்காமர் முயற்சி

முடங்கிப் போயிருக்கும் நோர்வேயின் மத்தியஸ்தத்துக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கப்படவிருக்கிறது. வெளிநாடு சென்றிருக்கும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

மூன்று வார விஜயத்தை மேற்கொண்டு கடந்த திங்கட்கிழமை அமைச்சர் கதிர்காமர் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். நியூயோர்க்கில் அவர் நோர்வே வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராய்வார்.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண நோர்வே அளித்து வந்த பங்களிப்பு முடங்கிப் போயிருப்பது தெரிந்ததே. நோர்வேயின் பங்களிப்பு மீண்டும் ஆரம்பிக்கப்பட கதிர்காமர் முயற்சிகளை மேற்கொள்வார் என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அதே சமயம், ஐரோப்பிய ஒன்றியத்துக்கான வெளியுறவு ஆணையாளர் கிறிஸ்யட்டோன், பாதுகாப்பு தலைமை அதிகாரி ஜேவியர் சொலோனா ஆகியோரை அமைச்சர் கதிர்காமர் சந்தித்து உரையாடியுள்ளார். ■

## கந்தளாயில்
## விஷமிகளின் பிரசாரம்

திருக்கோணமலை-கந்தளாய் நகரிலுள்ள முஸ்லிம் மக்கள் அங்குள்ள பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஒரு சில விஷமிகளால் நெருக்கடிக்குள்ளாக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கந்தளாய் நகரில் முஸ்லிம்கள் கூடியளவு வர்த்தக நடவடிக்கைகளிலேயே காலாகாலமாக ஈடுபட்டு வருகின்றனர். இதனைச் சகிக்காத ஒரு சில விஷமிகள் முஸ்லிம்கள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த எவரும் தமது கடைத் தொகுதிகளை வாடகைக்கு விடக்கூடாது என்று இரகசியத் தீர்மானமெடுத்து செயற்படுத்தி வருகின்றனர்.

முஸ்லிம் வர்த்தகர்கள் எதுவித தொந்தரவும் இல்லாமல் தமது கடமைகளை மேற்கொண்டு வருவதால் இந்தத் தீர்மானத்தை நாம் கடைப்பிடிக்க மாட்டோம் என்று சில சிங்களப் பிரமுகர்கள் எதிர்த்துக் கூறிவிட்டனராம்.

எனினும் இந்த விஷமிகள் வேறு பல வழிகளைக் கையாண்டு நெருக்கடி கொடுத்து வருகின்றனராம். சிலவேளைகளில் படையினரின் உதவியையும் இவர்கள் நாடுகின்றனராம். இதற்கென இவர்களால் படையினர் விசேடமாக கவனிக்கப்படுகின்றனராம். ■

## குறிதவறிய தற்கொலைத்தாக்குதல்!

நீண்ட நாட்களின் பின்னர் மட்டக்களப்பு -வாழைச்சேனையில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலொன்று புலிகளினால் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 9ம் திகதி காலை 9.30 மணியளவில் கல்குடா வாழைச்சேனை வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றது. குண்டைக் கட்டிக்கொண்டு பொலிஸ் ஜீப் வண்டியை நோக்கிப் பாய்ந்த கரும்புலி உறுப்பினர் குண்டை வெடிக்க வைத்தார். எனினும் பொலிஸ் ஜீப் குண்டுதாரியை முந்திவிட்டது. குண்டுதாரி உடல் சிதறி மாண்டார். அவரது இரு கால்கள் மாத்திரம் எஞ்சியிருந்தன. எனினும் கரும்புலி உறுப்பினரை அடையாளம் காண முடியவில்லை.

பொலிஸ் ஜீப் வண்டியில் சென்று கொண்டிருந்த வாழைச்சேனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும், ஏனைய இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் சிறு காயங்களுக்குள்ளானார்கள்.

கரும்புலி உறுப்பினர் வேறு இலக்குகளை நோக்கியே ஊடுருவியிருக்கக் கூடுமென்றும் எனினும் தான் அகப்பட்டு விடுவோமென்ற பதற்ற நிலையிலேயே குண்டை வெடிக்கவைத்திருக்கலாமென்று கூறப்படுகிறது. ■

## 'தந்தை செல்வாவின் கொள்கைகள் அடகு வைக்கப்பட்டுள்ளன' - ஈ.பி.டி.பி. புஸ்பராசா

"அரசாங்கத்துடன் இணைந்து தீர்வுப் பொதியைத் தயாரித்தவர்கள் இத்தேர்தலில் வாக்குகளைக் கேட்கலாம் என்றால் மக்களோடு மக்களாக நின்று சேவை புரிபவர்களாகிய நாம் எவ்விதத்திலும் குறைந்துவிடவில்லை" என்று திருகோணமலை மாவட்டத்தில் ஈ.பி.டி.பி. தலைமை வேட்பாளராகப் போட்டியிடும் ஈ.பி.டி.பி. திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் த.புஷ்பராசா கப்பல் துறையில் நடந்த தேர்தல் கருத்தரங்கில் பேசும்போது குறிப்பிட்டார். "அவசரகாலச் சட்டத்திற்கு வாக்களித்தவர்கள் என்று எம்மைக் குறைகூறுகின்றனர். அதனை நாம் மறுக்கவில்லை. அரசுக்கும் எமக்கும் இடையே இருக்கும் உறவினால் தான் திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்காக எம்மால் 10 கோடி ரூபாவைப் பெற முடிந்து. அதற்காக எச் சந்தர்ப்பத்திலும் காட்டிக் கொடுத்தவர்கள், காட்டிக் கொடுப்பவர்கள் அல்லர் நாங்கள். அப்படிப்பட்டவர்கள் இக் கூட்டமைப்பிலேயே ஒளிந்திருக்கின்றார்கள். இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்த போது எமது இளைஞர்களைக் கொன்று குவித்தவர்களும் இவர்களே. மூத்த தலைவர்களான தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் ஆகியோரின் உயிரைப் பறித்தவர்களுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஏற்படுத்திக் கொண்ட கூட்டமைப்பினால் எமக்கு எல்லாம் தந்தையான அமரர் செல்வாவின் கொள்கைகள் அடகு வைக்கப்பட்டு உள்ளன" என்றும் தலைமை வேட்பாளர் புஷ்பராசா தெரிவித்தார்.

## அதிரடிப்படையினர் சூட்டதில்
## இரண்டு பேர் பலி!

மட்டக்களப்பு கல்லாறு பகுதியில் திங்கட்கிழமை பிற்பகல் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களை ஜீப்பொன்றில் துரத்திவந்த விசேட அதிரடிப் படையினர் சூட்டதில் அவ்விருவரும் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

மட்டக்களப்பிற்கு தெற்கே, மட்டக்களப்பு கல்முனைப் பிரதான வீதியில் மட்டக்களப்பிலிருந்து சுமார் 30 கி.மீ.தூரத்தில் கல்லாறு உள்ளது.

இப்பகுதியிலேயே மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த இரு இளைஞர்களை துரத்தி வந்த அதிரடிப்படையினர் சரமாரியாகச் சூட்டதில் மோட்டார் சைக்கிளிலிருந்து இருவரும் வீழ்ந்து இறந்துள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பு பாலமீன்மடு பொலிஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகள் கடந்த சனிக்கிழமை இரவு நடாத்திய தாக்குதலில் புலிகள் தரப்பில் இருவர் உயிரிழந்ததாக அறிவிக்கப்படுகின்றது.

இவர்களுள் ஒருவர் பெண். இத்தாக்குதலில் மற்றுமொருவர் காயடைந்துள்ளார்.

இதேநேரம் பாலமீன்மடு பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது தகவல் பரிமாற்றக் கருவி மற்றும் ஒரு சில ஆயுதங்கள், ரவைகள் என்பவற்றையும் விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலின்போது பொலிஸார் காவல் நிலையத்தை விட்டு பின்வாங்காது இருந்திருந்தால் பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கும் எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் சனிக்கிழமை அதிகாலை, ஏறாவூர் வாவிக் கரையோரம் அமைந்துள்ள பொலிஸ் காவலரண்மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலின் போது புலிகளால் பிடித்துச் செல்லப்பட்ட ஊர்காவல் படைவீரரின் சடலம் சர்வதேச செஞ்சிலுவை குழுவினூடாக ஞாயிற்றுக்கிழமை மாலை ஒப்படைக்கப்பட்டது.

ஏறாவூரைச் சேர்ந்த முகமட் சலீம் என்ற ஊர் காவற்படை வீரரின் சடலமே கையளிக்கப்பட்டது.

## கையொப்ப இயக்கம்

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மேற்கொண்டுள்ள இராணுவத் தாக்குதலை உடன் நிறுத்தக் கோரி கையொப்ப இயக்கம் ஒன்றினை நடத்துவதற்கும், ஆப்கான் மக்கள் ஒருமைப்பாட்டு ஆதரவு இயக்கம் ஒன்றை நாடளாவிய ரீதியில் நடத்துவதற்கும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை தலைமையிலான முஸ்லிம் இயக்கங்களின் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

கையொப்பமிடும் இயக்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு மருதானை ஒராபிபாசா வீதியிலுள்ள அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைமையகத்தில் நடைபெற்றது ■

## ஆறுமுகன் தொண்டமானின்
## வாகனம்மீது புசல்லாவையில் தாக்குதல்

புசல்லாவ, நியூபீக்கொக் தோட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையே இடம் பெற்ற மோதலில் இருவர் காயடைந்து புசல்லாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தின்போது இ.தொ.கா. பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமான் சென்ற வாகனமும் சேதத்துக்குள்ளானது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட இரு தொழிற்சங்கங்களும் புசல்லாவப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளன.

இ.தொ.கா. சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடும் துரை மதியுகராஜாவுக்கு ஆதரவு தெரிவித்து புசல்லாவ, நியூபீக்கொக் தோட்டத்தில் ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் பிரசாரக் கூட்டமொன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் துரை மதியுகராஜா, ஜெகதீஸ்வரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இவர்கள் கூட்டம் முடிந்து வாகனங்களில் திரும்புகையில் ஒல்ட்பீக்கொக் தோட்டத்தில் இடம்பெறும் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்ற இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் சார்பில் பொது ஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிடும் இராஜரட்ணமும் அவரது ஆதரவாளர்களும் வாகனங்களில் எதிர்ப்பட்டுள்ளனர்.

இவ்வேளை, இரு தொழிற்சங்கங்களின் ஆதரவாளர்களுக்கிடையே மோதல் இடம்பெற்றதுடன், வாகனங்களை நோக்கிக் கல்வீச்சும் இடம்பெற்றுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் ஆறுமுகம் தொண்டமானின் வாகனமும் தாக்குதலுக்குள்ளானது. ■

## மருத்துவர்கள்
## வேலை நிறுத்தும்

வடக்கு-கிழக்கு உட்பட நாடு முழுவதிலுமுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கடமை புரியும் துணை மருத்துவர்கள் நாளை மறுதினம் 15 ஆம் திகதி முதல் தொடர் வேலை நிறுத்தத்தை ஆரம்பிப்பதற்கு முடிவு செய்துள்ளனர்.

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கடமை புரியும் எக்ஸ்ரே படப்பிடிப்பாளர்கள், அரசாங்க மருத்துவ தொழில்நுட்பவியலாளர்கள் (எம்.எல்.டி) மருந்தாளர்கள் உட்பட ஐந்து பிரிவினரை உள்ளடக்கிய தொழில்சார் துணை மருந்துவர்களின் கூட்டு கவுன்ஸிலே இவ்வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளுவதற்குத் தீர்மானித்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை நடைமுறைப்படுத்தும்படி கோரி முன்னெடுக்கப்படவுள்ள இவ்வேலை நிறுத்ததிற்கு நான்கு அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாகக் கவுன்ஸிலின் பேச்சாளர் ரவிகுமுதேஷ் நேற்று திங்கட்கிழமை தெரிவித்தார். ■

# முரசம்

## அச்சமூட்டும் தேர்தல் வன்முறைகள்

***அன்புள்ள உங்களுக்கு,***
***வணக்கம்.***

தேர்தல் வன்முறைகள் அதிகரிக்கும் வேகம் அமைதியை விரும்பும் சகலரையும் அச்சம் கொள்ள வைக்கின்றது.

நாளாந்தப் பத்திரிகைகளில் பெரும்பாலும் அநேகமான முன்பக்கச் செய்திகள் தேர்தல் வன்முறையோடு தொடர்பு பட்டவையாகவே இருக்கின்றன.

சகல அரசியல் கட்சிகளும் பரஸ்பரம் மற்றைய தரப்பு மீது குற்றம் சுமத்தி அறிக்கை வெளியிடுகின்றன.

வன்முறைகள் எனும்போது தாக்குதல்கள், துப்பாக்கிப் பிரயோகம் என்று உயிரைக்குடிக்கும் செயல்களே தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

அரசியல் கட்சிகள் நடத்தும் கூட்டங்களுக்கு தேர்தல் அபேட்சகர்களுடன் கூடவே குண்டர்களும் வருகிறார்கள். வெறுங்கையோடு அல்ல. துப்பாக்கிகளும், கூரிய ஆயுதங்களும் கைக்குண்டுகளும் தாராளமாக இருக்கின்றன.

ஜனநாயக ரீதியில் மக்கள் அபிப்பிராயத்தை அறிய நடத்தப்படும் தேர்தலில் கைக்குண்டு அவசியமான ஒன்றல்ல ஆனால் வைத்திருக்கிறார்கள்.

இவர்கள் வெறுமனே குண்டர்களல்ல அரசியல் வாதிகளின் பூரண ஆசிர்வாதத்துடன் தேர்தல் பணிகளில் இறங்கியிருப்பவர்கள் ஜனநாயகம் என்ற சொல்லுக்கு அர்த்தம் தெரியாதவர்கள்.

தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து நாளாந்தம் அதிகரித்த வன்முறைகளின் எண்ணிக்கை 500த் தாண்டி ஆயிரத்தை நோக்கி வேகமாக நடைபோடுகிறது. இவ்வளவுக்கும் வாக்களிப்பு தினத்திற்கு இன்னும் சுமார் 20 நாட்கள் இருக்கின்றன.

இந்த நாட்டின் அரசியல் கலாசாரம் ஏன் இத்தனை தூரம் சிதைவடைந்து போனது என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். தமக்கு அதிகாரத்தைத் தந்தால் புத்துலகம் படைக்கப் போவதாக கூறுபவர்கள் இந்த வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவர எதுவும் செய்ததாகத் தெரியவில்லை.

பல இடங்களில் பொலிஸாரின் கைகள் அதிகார பலத்தினால் கட்டிப்போடப்பட்டுள்ளன. ஆனால் அந்த அரசியல் அழுத்தத்தையும் மீறி சமீப நாட்களில் பொலிஸாரினால் எடுக்கப்பட்ட துணிகரமான நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கன.

எவ்வாறெனினும் வன்முறைகள் அதிகரிப்பதற்கு பாதுகாப்பு தரப்பினரை மட்டுமே குறை கூறுவதில் அர்த்தமில்லை. அவர்களை நிருவகிப்பவர்களும், தேர்தலில் போட்டியிடும் சகலரும் அமைதியான தேர்தல் ஒன்றுக்காக திடசங்கற்பம் பூண்டாலே தவிர நிலைமையை சீர் செய்ய முடியாது!

தேர்தல் நெருங்கும் நாட்களில் மேலும் மோசமான சம்பவங்கள் நடக்காதிருக்க 'மக்கள் சேவகர்கள்' ஒவ்வொருவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

தேர்தல் என்பது ஆயுதங்களோடு சம்பந்தப்பட்ட ஒன்றல்ல என்ற அபிப்பிராயம் மாத்திரமாவது எஞ்சியிருக்குமாக!

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

---

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# சந்திரிக்காவின் சாமர்த்தியத்திற்கு ரணில் விடுக்கும் சவால்

சகல அரசியல் கட்சிகளும் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டுள்ளன. மிகப்பெரிய வலதுசாரிக்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தொடக்கம் தீவிர சிங்கள அடிப்படைவாதிகளான சிஹல உறுமய வரையில் எந்தவொரு கட்சிக்கும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் விடுதலைப் புலிகளின் பெயரைத் தவிர்க்க முடியவில்லை. யுத்தம், சமாதானம் என்று இருவேறு வகையான விடயங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இனப்பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலமான தீர்வு என்று சிலர் மேலோட்டமாக பூசி மெழுகி தமது வாக்குறுதிகளை வழங்குகின்றனர்.

பெரும்பாலும் தேசிய கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் புலிகள் தொடர்பில் ஒரேமாதிரியான கருத்துக்களே வலியுறுத்தப்பட்டுள்ளன. தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பும் கடந்தவாரம் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டது. இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக புலிகளுடன் மட்டுமே பேச வேண்டும். புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும். புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல நிபந்தனைகளை உள்ளடக்கியதாகவே இந்த தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்துள்ளது.

'நாம் ஆட்சிக்கு வந்தால் இதனைச் செய்வோம். இத்தகைய கொள்கையை கடைபிடிப்போம்' என்பதை மக்களுக்குச் சொல்வதே தேர்தல் விஞ்ஞாபனம். தமிழ்க் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சில நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் இவை யாரிடம் முன்வைக்கப்படுகின்றன என்ற கேள்விக்கு பதில் இல்லை. ஆட்சிக்கு வரும் அரசாங்கத்திடம் முன்வைக்கப்படுகின்றது என்ற பதிலைக் கூறமுடியாது. ஏனெனில் அரசாங்கம் என்பதை தமது எதிரியாக பார்த்துப் பழகியிருக்கும் தமிழ்க் கட்சிகள் ஐ.தே.க ஆட்சிக்கு வந்தாலும் சரி, பொதுஜன ஐக்கிய முன்னணியையாயினும் சரி எதிர்த்தே நிற்கப் போகின்றன. பொதுஜன ஐக்கிய முன்னணியை வீழ்த்துவதற்காக ஐ.தே.க.வுடன் இணைந்த தமிழ்க்கட்சிகள் தேர்தலில் ஐ.தே.க. வெற்றி பெற்று புலிகள் மீதான தடையை நீக்காதுவிட்டால் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்து மீண்டும் ஐ.தே.க.அரசை கவிழ்க்க முன்வருவார்களா என்பதை தெளிவுபடுத்த வேண்டும்! கவர்ச்சிகரமான நிபந்தனைகளை விதித்து வாக்குகளை அள்ளிக் கொண்டு, தேர்தலுக்கு முன்னர் சொன்ன எதைப் பற்றியும் கவலைப்படாமல் காலம் கடத்தும் அரசியல் செயல்முறை சிங்களக் கட்சிகளிடம் இருந்து தமிழ்க் கட்சிகளும் நன்கு கற்றுக் கொண்டுள்ளன.



இம்முறை தமிழ்க்கட்சிகளின் தேர்தல் வியூகத்துக்குள் புலிகளையும் இழுத்துப் போட்டிருப்பது ஒருவகையில் புலிகள் இயக்கத்தை சங்கடத்துக்கு உள்ளாக்கும் நிலையையும் தோற்றுவித்துள்ளது. தமிழ்க்கட்சிகளின் வேலையால் தாம் கலந்து கொள்ளாத போட்டி ஒன்றின் முடிவை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு புலிகள் தள்ளப்படுகின்றார்கள்.

தமிழ் மக்களை கவருவதற்காக தாம் புலிகளுக்கு ஆதரவானவர்கள் என்று இந்த தமிழ்க்கட்சிக் கூட்டணி கூறி வருகிறதே தவிர தாங்கள் தமிழ்க்கட்சிகளை ஆதரிப்பதாக புலிகள் எங்கேயும் தெரிவித்ததில்லை. அண்மையில் அன்டன் பாலசிங்கத்திடம் இதுபற்றி தமிழ்க் கட்சிப் பிரமுகர் ஒருவர் கேட்டபோதுகூட 'உங்களது கதிரை சண்டையில் பங்கெடுக்க நாம் வரப்போவதில்லை' என்ற தொனியில் பாலசிங்கம் பதில் சொன்னதாக கூறப்பட்டது.

அதைவிட இத்தனை பெரும் தியாகங்களின் பின்னர், தேர்தலில் போட்டியிடும் கட்சி ஒன்றை ஆதரிக்கும் நிலைக்கு புலிகள் ஒருபோதும் இறங்கிவர மாட்டார்கள். தமிழ்க்கட்சிகளை பாராளுமன்றம் அனுப்பித் தான் தமது செயற்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்ற நிலையில் புலிகள் இல்லை. போராட்டம் ஆரம்பித்த காலம் முதலே பாராளுமன்ற அரசியலில் ஈடுபடுபவர்களை துரோகிகளாகவே விடுதலைப் புலிகள் கணித்து வருகின்றனர்.

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் எம்.பி.களை சுட்டுத்தள்ளுகின்றனர். அப்படியிருக்க பாராளுமன்ற அரசியலை புலிகள் ஆதரிப்பதாகக் கூறுவது தமது பஜரோக்களுக்காக புலிகளின் பெயரை ஏலம் விடுவதைத் தவிர வேறென்ன?

தமிழ்க்கட்சிகளின் இந்த புலி ஆதரவக்கோஷத்தால் புலிகள் பலத்த தர்ம சங்கடத்துக்கு உள்ளாக வேண்டி ஏற்படலாம்.

தற்போதைய வடக்கு, கிழக்கு தேர்தல் களம், தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு ஈ.பி.டி.பி. என்ற பிரதான இரண்டு பிரிவுகளாக பிரிந்துள்ளன. புலிகள்தான் ஏக பிரதி நிதிகள், புலிகள் எம்மை ஆதரிக்கின்றார்கள். அதனால் எமக்கு வாக்களியுங்கள் என்பதே தமிழ்க்கட்சிகளின் சாராம்ச வேண்டுகோள். மறுபுறத்தில் தாம் மக்களுக்கு செய்த, செய்யவிருக்கும் சேவைகளைக்கூறி ஈ.பி.டி.பி. வாக்குக் கேட்கிறது. புலிகள் மௌனமாக இருக்கிறார்கள். தேர்தலில் தாம் யாரையும் ஆதரிக்கவோ எதிர்க்கவோ போவதில்லை என்ற நிலைப்பாட்டையே புலிகளின் மௌனம் உணர்த்துவதாகக் கொள்ளலாம்!

அப்படியிருக்கையில் தமிழ்க்கட்சிகள் புலிகளின் பெயரைக் கூறி வாக்குக் கேட்கின்றன. அதாவது வடக்குக் கிழக்கில் தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு தவிர்ந்த வேறு கட்சிகளுக்கும் சுயேட்சைக் குழுக்களுக்கும் விழும் ஒவ்வொரு வாக்கும் புலிகளுக்கு எதிரான வாக்குகள் என்ற நிலையை உருவாக்கிவிட முனைகின்றன. தேர்தலில் தமிழ்க்கட்சி கூட்டமைப்பு சாராத பிரதிநிதிகள் தெரிவாகாமல் விடப் போவதில்லை. அவ்வாறு ஒருவர் தெரிவாகினால்கூட அது புலிகளை சங்கடத்தில் ஆழ்த்தும் என்பதில் சந்தேகமில்லை. புலிகள் இயக்கம் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி தோல்வியை சந்திப்பது வேறு விடயம். இப்போது அவர்கள் பாராளுமன்ற அரசியலை நிராகரிக்கிறார்கள். கதிரைகளுக்கான ஆட்டத்தில் எந்தவிதமான பங்கும் தமக்கு வேண்டியதில்லை என்று கூறி வருகின்றார்கள். அப்படியிருக்கும் புலிகளை வலியப் போய் இதற்குள் இழுத்துப் போட்டு "பாருங்கள், புலிகள் தமிழ மக்களின் ஏக பிரதிநிதிகளல்ல. அவர்களுக்கு எதிராகவும் வாக்குகள் கிடைத்துள்ளன" என்று உலகுக்கு பறைசாட்டும் திட்டத்தையே தமிழ் கட்சிகள் இறுதியில் செய்யப் போகின்றன.

தாம் போட்டியிடாத தேர்தலில் தோல்வியை சந்திக்க புலிகள் விரும்ப மாட்டார்கள். அதனால் இறுதிவரை தமிழ்க் கட்சிகள் குறித்து புலிகள் எதனையும் கூறப்போவதில்லை. இந்த நிலையை பயன்படுத்தி பாராளுமன்றத்தில் சில ஆசனங்களை கைப்பற்றலாம் என்பதே தமிழ்க்கட்சிகளின் திட்டம். வடக்கு கிழக்கில் உள்ள 100 சத வீத தமிழ் மக்களும் தமிழ்க்கட்சிகூட்டணிக்கு சார்பாக வாக்களிக்காத விடத்து புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற கருத்து அடிபட்டுப் போகும் 'ஏக பிரதிநிதி' என்பதன் அர்த்தம் சகலரும் எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளும் ஒரே பிரதிநிதி என்பதாகும். இதனை வைத்து பார்க்கும் போது தமிழ்க்கட்சிகள் புலிகளுக்கு செய்யப்போகும் நன்மையை புரிந்து கொள்ளலாம்!

மறுபுறத்தில் தென்னிலங்கையின் இரண்டு பிரதான அரசியல் சக்திகளும்கூட புலிகள் குறித்த விடயங்களையே தமது பிரசாரங்களில் பெரிதும் முன் வைக்கின்றன. பொதுன ஐக்கிய முன்னணி இனப்பிரச்சனைக்கு சமாதானத்தீர்வு 'பயங்கர வாதத்தை' ஒழிக்க யுத்தம் என்று இரு முனைகளை பிடித்துக் கொண்டுள்ளது. இந்த நிலைப்பாட்டினால் சிறுபான்மை மக்களின் ஆதரவை ஓரளவும் சிங்கள மக்களின் ஆதரவை அதிக அளவிலும் பெறமுடியுமென அது கருதுகின்றது. ஐக்கியதேசியக் கட்சி ஆரம்பத்தில் 'பயங்கரவாதம்' யுத்தம் என்ற சொற்களை பாவிக்காமல் மேலோட்டமாகவே கருத்து வெளியிட்டு வந்தது. ஆனால் தற்போது ஆளும் தரப்பும், ஜே.வி.பி.யும் கூட்டாக முன்னெடுத்துச் செல்லும் 'ரணில்-புலி' கூட்டு பிரசாரத்தால் ஐ.தே.க.பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளது. ஆனால் தான் சந்திரிக்காவுக்கு சளைத்தவரல்ல என்பது போல அதனை முறியடிக்கும் பிரசாரத்தை ரணிலும் ஆரம்பித்திருக்கிறார். தாம் ஆட்சிக்கு வந்தால் இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுக்க தனியான அமைச்சொன்று நிறுவப்படும் என்றும் அரசியல் தலையீடு இன்றி இராணுவ செயற்பாடுகள் நடைபெறும் என்றும் இப்போது ரணில் கூறத் தொடங்கியிருக்கிறார். அதாவது "சந்திரிகாவின் காலத்தில் போர் ஒழுங்காக நடத்தப்படவில்லை. நாம் சிறப்பாக நடத்துவோம்" என்பதுதான் இதன் அர்த்தம். யுத்தம் குறித்து பிரதமர் உள்ளிட்ட ஆளும் தரப்பு உறுப்பினர்கள் உரத்த குரலில் பேசுகின்றனர். அது பாமர சிங்கள மக்கள் மத்தியில் ஓரளவு செல்வாக்குச் செலுத்தும் பிரசார தந்திரமாக மாறி வருகின்றது.

தொடர்ந்தும் 'சமாதானம்' 'தமிழ்க்கட்சிகளுடன் நட்புறவு' என்று கதைத்து வந்தால் பெருமளவு சிங்கள வாக்குகளை இழக்க வேண்டி ஏற்படலாம் என்ற பயம் ஐ.தே.க.வை பிடிக்கத் தொடங்கியுள்ளது. இதன் காரணமாகவே சந்திரிகாவையும் விஞ்சும் விதத்தில் ரணிலின் பிரசாரம் அமைந்துள்ளது. இனப்பிரச்சனை தீர்வு தொடர்பான நம்பிக்கையை கட்டியெழுப்பத் தவறியதால் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து தூரமாகிய வாக்காளர்களுக்குப் பதிலாக புதியவர்களை திரட்டும் பிரசார உத்தியை ஆட்சியாளர்கள் கையாளலில், யுத்தம் தொடர்பாக கதையைவிடக் கூடுதலாக முழங்கி பொதுஜன ஐக்கிய முன்னணியின் பால் செல்லும் சிங்கள வாக்காளர்களை தம்பக்கம் ஈர்க்கும் காரியத்தில் ஐ.தே.க. இறங்கியுள்ளது. ரணில்-பிரபாகரன் கூட்டை மையமாக வைத்து தேர்தல் பிரசாரத்தை திட்டமிட்ட ஆளும் தரப்புக்கு ஐ.தே.க.வின் புதிய வடிவம் பெரும் சவாலாக அமைந்துள்ளது.

அரசாங்கம் தீவிரமாக மேற்கொண்டு வரும் இந்த பிரசாரத்தினால் இதனை முறியடிப்பதைத் தவிர வேறு எதனைப் பற்றியும் கதைக்க முடியாத நிலைக்கு ஐ.தே.க. தள்ளப்பட்டுள்ளது. அன்றாடப் பிரச்சனைகள் தொடர்பில் சந்திரிகா அரசாங்கம் மீது மக்களுக்கு இருக்கும் அதிருப்தியை வளர்க்க ஐ.தே.க.வினால் முடியாமல் உள்ளது. தனக்கும் புலிகளுக்குமிடையில் இரகசிய உடன்பாடு எதுவும் இல்லை என்பதையே ரணில் ஒவ்வொரு கூட்டத்திலும் கூறிவருகிறார். ஐ.தே.க.வினால் பிரசுரிக்கப்படும் பத்திரிகை விளம்பரங்களிலும் இதே கருத்துதான் வலியுறுத்தப்படுகின்றது. அந்த வகையில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு இந்தப் பிரசாரத் தந்திரத்தினால் கிடைத்திருக்கும் இலாபங்களில் ஐ.தே.க.வுக்கு மக்களின் அன்றாடப் பிரச்சனைகள் தொடர்பில் வாய்திறக்க விடாமல் கட்டுப்படுத்தியிருப்பதும் ஒன்று எனக்கூறலாம்.

**எம்.பி.எம். பர்ஸான்**

எதிர்பாராத விதத்தில் கனேடிய அரசு அதன் பயங்கரவாதப்பட்டியலில் புலிகள் இயக்கத்தையும் சேர்த்துள்ளது. அமெரிக்காவினால் வெளியிடப்பட்ட பட்டியலுக்கு பெரும்பாலும் ஒத்ததாகவே கனேடிய அரசின் பயங்கரவாதப்பட்டியலும் அமைந்துள்ளது. இலங்கை அரசாங்கம் கூறுவது போன்று புலிகள் கனடாவில் தடை செய்யப்பட்டதற்கு கதிர்காமரின் இராஜதந்திரம் காரணமல்ல. அந்தப் பெருமை ஒசாமா பின்லேடனைத்தான் சேர வேண்டும். அவரது 'கெட்டித்தனங்களின்' பின்னர்தான் கனடா போன்ற நாடுகள் பயங்கரவாதம் குறித்து இந்தளவு தூரம் சிந்திக்க தலைப்பட்டன.

இந்த நேரத்தில் புலிகள் இயக்கம் மீதான தடையை கனடா அறிவித்திருப்பது தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஓரளவு சாதகமான அம்சமாக அமையலாம்.

"நாடு நாடாக நாம் சென்று பாடுபட்டு நாம் புலிகளை தடைசெய்து வருகிறோம். இந்த ரணில் தமிழ்க்கட்சிகளுடன் சேர்ந்துகொண்டு இலங்கையில் புலிகள் மீதான தடையை நீக்க ஆலோசிக்கிறார்" என்று பிரசாரம் செய்யப்படுகின்றது.

புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரையில் கனடாவில் ஏற்பட்ட தடை நிதி சேகரிப்பில் சில பிரச்சனைகளை ஏற்படுத்த வாய்ப்புண்டு. பகிரங்கமாக நிதியுதவி அளித்தவர்களும் புலிகளை ஆதரித்துப் பேசிய புத்திஜீவிகளும் இனிமேல் சற்று அடக்கி வாசிக்க வேண்டி வரலாம். பாரிய மண்டபங்களில் பெரும் எடுப்புக்களோடு நடத்தப்படும் கூட்டங்கள் ஊர்வலங்கள் போன்றவற்றில் பொலிஸாரின் தலையீடு ஏற்பட புதிய சட்டம் வழி செய்வதால் பிரசார ரீதியில் சில சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டி வரலாம்.

எவ்வாறெனினும்அமெரிக்காவிலும்பிரிட்டனிலும் தடை அமுலில் உள்ள போதிலும் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்கின்றன. அதே போன்று கனடாவிலும் செயற்படலாம். முன்பு போன்று பகிரங்கமாக முடியாது என்பதுதான் இதிலுள்ள சிக்கல். தங்கள் நிதிகளை முடக்க முன்னர் அவற்றை மீளப் பெற்றிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

# அண்டை மண்டலத்தில்...

கானகன்

# சென்னையில் நோம் சோம்ஸ்கி
## ஆப்கான் மக்களுக்கு அனுதாபம்

செப்டம்பர் 11ம் திகதி அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதலைவிடவும் கொடியது அமெரிக்கா இப்போது துவக்கியிருக்கும் ஆப்கானிஸ்தான்மீதான போர்.

உலக வர்த்தக மையம் தகர்க்கப்பட்டதன் விளைவாக ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் மரித்தது கொடுமைதான். போர் அல்லாத நேரங்களில் ஒரே சம்பவத்தில் இவ்வளவு அதிகம் பேர் இறந்ததில்லை என்பதும் உண்மைதான். ஆனால் அதே நேரம் அமெரிக்க அரசு பயங்கரவாதத்தையோ, அதன் கடந்தகால அக்கிரமங்களையோ மறக்கவும் இயலாது. மன்னிக்கவும் இயலாது.

மேலை நாடுகளின் தற்போதைய அணுகுமுறைகளின் காரணமாக விளையப்போகும் பேரழிவு செப்டம்பர் 11ம் திகதி தாக்குதலால் ஏற்பட்டதைவிட பல மடங்கு உக்கிரமாக இருக்கும். ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதலை உடனடியாக நிறுத்தவேண்டும். பசியிலிருந்தும், பட்டினியிலிருந்தும், பஞ்சத்திலிருந்தும், பெரும் நோய்களிலிருந்தும் ஆப்கானியர்கள் காப்பாற்றப்படவேண்டும். உலகம் பணமுதலைகளின் பிடியிலிருந்தும், சதிகாரர்களிடமிருந்தும் மீட்கப்படவேண்டும்.

இவ்வாறு சென்னையில் முழங்கியவர் அமெரிக்க அறிஞர் நோம் சோம்ஸ்கி. இந்தியா முழுமையும் சுற்றுப்பயணம் செய்து, மேற்கத்திய நாடுகளின் போலித்தனங்களை, கபடநாடகத்தை தோலுரித்துக்காட்டி, மனிதநேயம் வலுப்பெற வேண்டும் என வலியுறுத்தி வருகிறார் அவர்.

சென்னையில் அவர் இரண்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. பழமைவாதிகளின் கூடாரமாக, மேலைநாட்டு மோகத்தில் ஆழ்ந்திருப்போரின் புகலிடமாகக் கருதப்படும் சென்னை நகரில், அமெரிக்காவையும், பொதுவாக மேலை நாடுகளையும் கடுமையாகத் தாக்கிப் பேசும் சோம்ஸ்கியின் உரைகளைக் கேட்க அவ்வளவு மக்கள் திரண்டது பலருக்கும் வியப்பை அளித்தது.

மொழியியல் வல்லுநரான அவர், வியட்நாம் போர் காலந்தொட்டு இன்று வரை அமெரிக்காவின் யதேச்சாதிகார, முரண்பட்ட, அநீதியான, தடாலடியான நடவடிக்கைகளை சமரசமின்றி எதிர்த்து வந்திருக்கிறார்.

அந்த நாட்டில் முழு கருத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் நிலவுகிறது என்று நம்பிக்கொண்டிருப்போருக்கு சோம்ஸ்கியின் கதி தெளிவினை ஏற்படுத்தும். உலகெங்கும் அவருக்கு ரசிகர்கள் இருக்கிறார்கள். உலகின் பல பகுதிகளிலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போராடுபவர்களுக்கு, ஏகாதிபத்தியத் திற்கு எதிரான அவரது குரல் மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கிறது. ஆனால் அமெரிக்க நாட்டில் அவரை டி.வி. நிறுவனங்கள் பேட்டி காணாது, வானொலி நிலையங்கள் அவரது உரைகளை ஒலிபரப்பாது, பத்திரிகைகள் அவரது சர்ச்சைக்குரிய புத்தகங்களை விமர்சிக்காது, ஆக சோம்ஸ்கியைப் பொறுத்த வரை ஓர் இறுக்கமான மௌனமே ஒரு சதியாக.

பல்வேறு பத்திரிகைகளும், டி.வி. நிறுவனங்களும் இருந்தபோதிலும், அவற்றில் ஒன்றுகூட அமெரிக்க நலன்கள் என்று கருதப்படுவதற்கு எதிராக எதையும் பிரசுரிப்பதில்லை அல்லது ஒளிபரப்புவதில்லை. புஷ்ஷை கிண்டல் செய்யலாம்தான். ஆனால் அவரது ஆப்கானிய கொள்கைகள் தவறு என்ற விமர்சனத்திற்கு அங்கே தகவல் தொடர்பு சாதனங்களில் இடமில்லை.

ரீகன் அல்லது கிளின்டனின் உள்நாட்டுக் கொள்கைகள் பற்றி, அவர்கள் நடந்து கொள்வது பற்றி விலாவாரியாக எழுதமுடியும். ஆனால் கம்யூனிச எதிர்ப்பின் பெயரால் மேற்கொள்ளப்படும் எந்த அக்கிரமம் பற்றியும் ஒருவரும் மூச்சுவிடமாட்டார்கள். ஆளும் வர்க்க நலனை ஒட்டுமொத்த சமுதாயத்தின் நலன் என்று எல்லோரையும் நம்ப வைக்கும் முயற்சியில் அங்கிருக்கின்ற தகவல் தொடர்பு ஊடகங்கள் அனைத்தும் பெரும் வெற்றி பெற்றிருக்கின்றன என்பது கண்கூடு. அதைத்தான் சோம்ஸ்கி மேனுஃபாக்சர்ட் கன்சென்ட், உற்பத்தி செய்யப்படும் ஒப்புதல் என்று சாடுகிறார்.

அத்தகையதொரு அவலமான சூழலில்தான் அவர் இணையத்தளத்தின் மூலமாகவும், சிறு சிறு பதிப்பகங்கள், பத்திரிகைகள் வாயிலாகவும் ஆப்கானியப் போருக்கெதிராக கருத்துத்திரட்டும் பணியில் இறங்கியிருக்கிறார்.

பயங்கரவாதத்திற்கெதிரான போர் தொடங்கி ஒரு மாதமாகிவிட்டது. டன் கணக்கில் குண்டுகள் பொழியப்பட்டிருக்கின்றன. சில நூறு அப்பாவி ஆப்கானியர்கள் இறந்துவிட்டார்கள். எத்தனை கட்டடங்கள் சேதமடைந்திருக்கின்றன என்பது குறித்த தகவலே இல்லை.

இதைத்தவிர தலிபான் படைக்கோ, ஒசாமா பின்லாடனைச் சேர்ந்தவர்களுக்கோ எந்த இழப்பும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. குண்டுபோட்டால் எங்களால் திருப்பித்தாக்க இயலவில்லை. ஆனால் களத்தில் நேரடியாக உங்கள் தரைவழிப்படைகளுடன் வாருங்கள். திருப்பிக் கொடுக்கிறோம் என்கிறார்கள் தலிபான் தலைவர்கள்.

ஏற்கெனவே சோவியத் யூனியன் இறங்கி மூக்கை உடைத்துக்கொண்டது எல்லோருக்கும் நினைவிருக்கிறதே. நேரடி மோதலில் இறங்கி, திக்கு தெரியாத காட்டில் அகப்பட்டுக்கொண்டு, அதிகளவு உயிரிழப்பு ஏற்பட்டால், ஆப்கானியப் போருக்கு அமெரிக்காவில் எதிர்ப்பு கிளம்பும் என்று அஞ்சுகிறது புஷ் அரசு.

சோதனை முயற்சியாக ஒரு சில துருப்புக்களை இறக்க, அது தோல்வியிலேயே முடிந்ததாக செய்திகள் கூறுகின்றன.

இதுபோதாதென்று தலிபானுக்குள் பிளவை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கிய ஒரு ஆப்கான் தலைவர் தூக்கிலிடப்பட்டார். இன்னொருவர் தப்பியது தம்பிரான் புண்ணியம் என்றாகிவிட்டார்.

தங்களது ஆதரவைத் தெரிவிக்கும் மற்ற நாடுகள் கூட நேரடியாக தங்களது துருப்புக்களை களத்தில் இறக்கிவிட முன்வரவில்லை. பயங்கரவாதத்திற்கெதிரான போரில் யாரும் நடுநிலை வகிக்க முடியாது. ஒன்று எங்களுடன் அல்லது எதிரணியில் என்று கர்ஜிக்கிறார் புஷ். அனைவரும் தேவைப்பட்டால் நேரடியாக இறங்கவேண்டியதுதான் என்கிறார் அவர். ஆனால் இந்தியா, பிரிட்டனைத் தவிர மற்ற நாடுகள் அவ்வாறு செய்யத் தயங்குகின்றன. தலிபானுக்கு எதிரான வடக்குக்கூட்டணியினரை வைத்து தலிபான் அரசைக் கவிழ்த்துவிடலாம் என்றும் அமெரிக்கா கணக்குப்போடுகிறது.

அம்முயற்சியில் ஓரளவு வெற்றி கிடைத்திருக்கிறது என்றுதான் கூற வேண்டும். ஆப்கானிஸ்தானில் மிக அதிகமாக வாழும் புஷ்டூன் இனத்தைச் சார்ந்தவர்களின் ஆதரவைப்பெற்றது தலிபான் என்றால், உஸ்பெகியர்கள், தாஜிக்கியர்கள், ஷியாக்கள் மற்றும் ஹெராட்டிக்கள் என்ற பல்வேறு பிரிவினர்கள் வடக்குக் கூட்டணியினை இயக்குகிறார்கள்.

அவர்கள் இதுவரை ஆப்கானிஸ்தானில் மிகச்சிறிய ஒரு பகுதியில் இருந்து கொண்டு தலிபானுக்கு தலைவலியைக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். இந்தியா மற்றும் ரஷ்யா ராணுவ உதவியளித்தும் இவர்களால் பெரிதாக எதையும் சாதிக்கமுடியவில்லை.

இப்போது அமெரிக்கா இடையறாது குண்டுமாரி பொழிந்து, தலிபான் தளர்ந்துபோன நிலையில், வடக்குக் கூட்டணியினர் சில முக்கிய நகரங்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அவ்வாறு முன்னேறுவது பாகிஸ்தானுக்குப் பிடிக்கவில்லை. பாகிஸ்தானின் உதவி தேவைப்படுவதால் கூட்டணிக்கு அமெரிக்க பிரேக் போடவே விரும்புகிறது. ஆனால் அவர்களை விட்டால் வேறு வழியில்லை என்ற நிலையில் என்ன செய்வதென்பது தெரியாமல் விழிக்கிறது அமெரிக்கா.

முஷாரஃப், புஷ்ஷை சந்தித்துப் பேசிய பிறகு இரு அதிபர்களும் கூட்டணியினர் தலைநர் காபூலைக் கைப்பற்ற வேண்டாமென்று பரிதாபமாகக் கேட்டுக் கொண்டுள்ளனர். இவர்கள் சொல்லி அவர்கள் கேட்கப்போகிறார்களா என்ன?

கூட்டணியினரே பல்வேறு தாதாக்கள், குழுத்தலைவர்கள் இணைந்த ஒரு நெல்லிக்காய் மூட்டை, ஒருவரை ஒருவர் அடித்துக் கொல்வதிலேயே அதிக நேரம் கழித்தவர்கள், அவர்களது வீரர்கள் கொலை, கொள்ளை, வழிப்பறி, பாலியல் வல்லுறவுகள் என்று பல்வேறு அடாவடித் தனங்களுக்குப் பெயர் போனவர்கள். அவர்களிடமிருந்து ஒரு பெண்ணை மீட்கப் போய்த்தான் முல்லா ஓமரும், தலிபானும் உருவாயினர் என்பது வரலாறு.

ஒரு பக்கம் தலிபானின் சர்வாதிகாரம், ஒடுக்குமுறைகள், தீவிரவாதம். இன்னொரு புறம் வடக்குக்கூட்டணியினர் போன்று தறிகெட்டோடும் அடாவடிக் குழுக்கள். வேறொரு புறம் குண்டுகள் போட்டு அவர்களை வாட்டிக்கொண்டிருக்கும் அமெரிக்கா. பாகிஸ்தானுக்கும் போகமுடியாமல் எல்லையே மூடப்பட்டுவிட்டது. பஞ்சம், பசி, பிணி... பாவம் என்ன செய்வார்கள் அப்பாவி ஆப்கானியர்கள்?

குண்டுமழையினை தற்காலிகமாகவாவது நிறுத்துங்கள். கொஞ்சங்கொஞ்சமாக ஆப்கானியர்கள், குறிப்பாக சிறுவர்கள் மடிந்துகொண்டிருக்கிறார்கள். மனிதாபிமான ரீதியில் ஏதாவது உதவி செய்யவிடுங்கள் என்று செஞ்சிலுவைச் சங்கம் போன்ற நிறுவனத்தார் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஊஹூம். அமெரிக்கா கேட்டால்தானே.

இன்னொரு பக்கம் ஒசாமா கொக்கரிக்கிறார். தனது ஜிஹாத் தொடரும், நான் நினைத்தால் அணுகுண்டுகளையே கூட பயன்படுத்த முடியும். முஸ்லீம்கள் ஆயிரக்கணக்கில் மடியக்காரணமானவர்களை பழிவாங்கும்போது, குழந்தைகள் உட்பட அப்பாவி மக்கள் பலியானால் தவறில்லை என்று குர்ஆன் கூறியிருக்கிறது. இந்த ரீதியில் பேட்டிகள் கொடுத்துக் கொண்டு மேலை நாடுகளை உசுப்பிவிட்டுக் கொண்டிருக்கிறார். இவரது சண்டித்தனத்தின் காரணமாக பாதிக்கப்படுவது யார்? அப்பாவி முஸ்லீம்கள்தானே. ஆனால் அதுபற்றி யார் கவலைப்படுகிறார்கள்?

அத்தகைய கொக்கரிப்புக்கள், சாகசங்கள் காரணமாகவே சர்வாதிகார, ஊழல் மலிந்த அரசுகளினால் மனம் நொந்திருக்கும் பல்வேறு இஸ்லாமிய நாட்டு மக்கள் மத்தியில் ஒசாமா பிரபலமாகிக் கொண்டிருக்கிறார். இதன் விளைவுகள் அதி பயங்கரமாய் இருக்கும் என்று கூறத் தேவையில்லை.

ஆப்கானிஸ்தான் மீது போர் தொடுப்பதற்குப் பதிலாக, உலக இஸ்லாமியர்களின் நம்பிக்கையினைப்பெற அமெரிக்கா முயன்றிருக்கவேண்டும். பாலஸ்தீனத்தில் இஸ்ரேலை அடக்கிவாசிக்கச் சொல்லி, சவூதி அரேபியாவிலிருந்து தனது படைகளை விலக்கி, ஈராக் மீதான தடைகளை திரும்பப்பெற்று, உலக நீதிமன்றத்திற்குச் சென்று.... இப்படி எத்தனையோ வழிகள். ஆனால் அமெரிக்கா அவ்வாறு செய்ய மறுக்கிறது.

அதனுடைய மமதையின் காரணமாகவே மேலும் பல செப்டம்பர் 11கள் நிகழலாம் என்று எச்சரித்திருக்கிறார் சோம்ஸ்கி.

ராணுவ பலத்தின்மூலம், பயங்கரவாதத்தை வென்றுவிடமுடியாது. மாறாக மக்களை வென்றெடுக்க வேண்டும் என்பதுதான் தான் அறிய வேண்டிய பாடம். ஆனால் அமெரிக்கா கற்க மறுக்கிறது.

தற்போது அமெரிக்காவிற்கு ஆலவட்டம் சுற்றும் பாரதீய ஜனதா அரசும் அதே தவறுகளைத்தான் காஷ்மீரில் செய்கிறது. பேச்சுவார்த்தைக்கு வருகிறேன். ஏதாவது சமரசத்திற்கு வருகிறேன் என்று கெஞ்சுகிறார் முஷாரஃப். வாஜ்பேயி மசிவதாக இல்லை. அவரது துணிச்சலான நிலைப்பாட்டை இந்தியப்பத்திரிகைகள் புகழ்ந்து தள்ளிக் கொண்டிருக்கின்றன. இந்திய டி.வி. சானல்களில் நாள்தோறும் பாகிஸ்தானுக்கு அர்ச்சனைதானே. உற்பத்தி செய்யப்படும் ஒப்புதல் எல்லா ஜனநாயக நாடுகளிலும் அன்றாட நிகழ்வாகும்.

அமெரிக்காவிற்குச் சென்று இரு நாட்டுத்தலைவர்களும் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். மானம் சந்தி சிரிக்கிறது. ஆக காஷ்மீரிகளுக்கும் விடிவில்லை என்பதுதான் உண்மை.

மக்கள் அணிதிரளவேண்டும் என்று கோருகிறார் சோம்ஸ்கி. அவரது கனவு பலிக்கட்டும்.

# வடபகுதிக்கான போக்குவரத்து சீராவதால் தமிழ் மக்களின் தன்மானத்துக்கு இழுக்கு ஏற்படுமா?

புலிகள் இலங்கைத் தீவ என்பது சிறீலங்கா, தமிழ் ஈழம் என்னும் இரு நாடுகளைக் கொண்டது என்னும் கருத்துருவத்திலிருந்தே சகல விடயங்களையும் அணுகுகின்றனர். படையினரை மண்ணுக்கு அந்நியமான ஆக்கிரமிப்பாளர்கள் என்று வர்ணிப்பது முதல் அரசாங்க நிறுவன செயற்பாடுகளுக்கு தடைக்கல்லாக இருப்பது வரை அனைத்து விடயங்களிலும் இந்தக் கண்ணோட்டத்திலிருந்தே அவர்கள் அணுகுகின்றனர். இந்த அணுகுமுறை சரியானதா? தவறானதா? என்பதல்ல இன்றுள்ள பிரச்சனை. இந்தக் கண்ணோட்டம் இப்போதும் மக்களுக்கு ஏற்படையதாக இருக்கிறதா என்பதே பிரச்சனை. இதனாலேயே புலிகளின் பிரச்சனை என்பது வேறு. தமிழ் பேசும் மக்களின் பிரச்சனை வேறு என்பது வகை பிரிக்கப்பட வேண்டியதாக உள்ளது. ஆனால் தேர்தல் களத்தில் மக்கள் மத்தியில் வாக்குக் கேட்க வந்திருக்கும் கூட்டமைப்பினர் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் எனவும், உடனடியாக போர் நிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும் எனவும், வன்னிக்கு பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டுமெனவும், நிபந்தனையற்ற வகையில் புலிகளோடு பேச வேண்டும் எனவும், நோர்வேயின் மத்தியஸ்தம் மீண்டும் கொண்டுவரப்பட வேண்டும் எனவும், கோரி அதற்காக மக்கள் தமக்கு வாக்களிக்க வேண்டுமெனக் கோருகின்றனர்.

மக்களின் அறிவுக் கண்ணை மறைக்கும்வகையில் உணர்ச்சி ஊட்ட முற்பட்டுள்ளனர். மேலே சொன்ன ஐந்து கோரிக்கைகளில் ஏதாவது ஒன்றாவது யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சனைகளோடு தொடர்பு கொண்டதாக இருக்கிறதா? மக்களது நாளாந்த வாழ்க்கைத் தேவைகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் விடயங்களுக்காக மக்கள் வாக்களிக்க வேண்டுமா? இதுவே மக்கள் சிந்திக்கின்ற விடயம்.

இனி இவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் பற்றிப் பார்ப்போம். புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என்பது இவர்களது முதலாவது கோரிக்கை. புலிகள் மீதான தடையை சிறீலங்கா அரசாங்கம் நீக்க வேண்டும் என்பதில் எவருக்கும் ஆட்சேபனை இருக்காது. ஆனால் ஆயுதபாணிகளான புலிகளின் நடமாட்டம் மக்களை அச்சுறுத்துவது ஏற்புடையதா? சகோதரப் படுகொலைகள் தொடர்வது நீங்கள் ஏற்றுக் கொள்ளப்படலாமா? தியாகிகளாக செத்து மடிவதாலும், துரோகிகளாகச் சுட்டுச் சரிப்பதாலும் உயிர் இழந்து கொண்டு வருவது தமிழ் உயிர்கள் இல்லையா? சகோதரப்படுகொலைகள் நிறுத்தப்பட முடியும் என்னும் உத்தரவாதத்தை நிலைநாட்ட கூட்டமைப்பினருக்கு இருக்காது என்பது தெளிவு. இந்த நிலையில் புலிகள் மீதான தடையை நீக்கப்பட வேண்டும் என்பதன் மூலமாக கூட்டமைப்பினர் எதிர்பார்ப்பது என்ன? இந்தக் கேள்வியை மக்கள் எழுப்ப வேண்டியது தவிர்க்க முடியாதது ஏனெனில் மக்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டியவர்கள் மக்களே. சுருக்கமாகச் சொன்னால் தத்தம் அமைப்புக்கள், கட்சிகள் மீது புலிகள் விதித்திருக்கும் தடையை நீக்க வேண்டும் என்று பகிரங்கமாக கோரிக்கை விடுக்க முடியாதவர்கள் அரசாங்கம் புலிகள் மீது விதித்த தடையை மட்டும் நீக்க வேண்டும் எனக் கோருவதன் மர்மம் என்னவாக இருக்கும் என்பது மக்களின் சிந்தனைக்குரியதாகும்.

அடுத்ததாக உடனடியாக போர் நிறுத்தப்பட வேண்டும் என்பது கூட்டமைப்பினரின் கோரிக்கை. போர் நிறுத்தம் என்பது இடைக்கால இடைவெளிகள் அல்ல. போருக்கு முடிவு என்னும் நிலையிலே எட்டப்படவேண்டும். கொட்டிய உயிர்களும் போதும். கொடிய யுத்தமும் போதும் என்பதுவே பொது மக்களின் நிலை. உயிர், உடமை இழப்புக்கள் போதும். இடம் பெயரும் அவலங்கள் போதும். சொந்த மண்ணில் நிம்மதியான வாழ்வதான் தேவை. இதுவே பொது மக்களின் விருப்பம். எனவே போர் நிறுத்தம் என்னும் தற்காலிக இடைவெளி அல்ல. நிரந்தரமான போர் ஓய்வே தேவை.

மேலும் போர் என்பது ஒரு கை எழுப்பும் ஓசையல்ல. ஒரு தரப்பு மட்டும் சம்பந்தப்பட்டது அல்ல. படையினருக்கும், புலிகளுக்கும் இடையில் இடம்பெறும் மோதல்கள் மட்டும்தான் போர் அல்ல. போர் என்றால் ஆயுதபாணிகள் களத்தில் மோதி உயிர் இழப்பது தவிர்க்க முடியாததாக இருக்கலாம். ஆனால் போர்ச் சூழல் நீடிக்கும் போதும் சரி போர் நிறுத்தப்படும்போதும் சரி அப்பாவிகள், மற்றும் நிராயுதபாணிகள் உயிரிழப்பது கூடாது அத்தகைய நிலையைப் பேண புலிகள் முன்வருவார்கள் என்பதை எவர் உத்தரவாதப்படுத்தக் கூடும்.

இது தவிர போரை யார் ஆரம்பித்தார்கள்? போர் முனைப்புக்களை யார் தொடர்ந்து பேண விரும்புகிறார்கள்? பகைமையையும் வெறுப்புணர்வையும் தூண்டி வளர்ப்பவர்கள் யார்? என்பன போன்ற வினாக்களும் இச் சந்தர்ப்பத்தில் எழுப்பவேண்டியவையேயாகும். இது தொடர்பான கோழி முந்தியா? முட்டை முந்தியா? என்பது போல நீடிக்கப்படக்கூடியதுதான். ஆனால் ஒவ்வொருவரும் தத்தம் மனச்சாட்சியைத் தொட்டு இந்தக் கேள்விகளுக்கான விடைகளை காண முற்படுவதே சிறந்ததாகும்.

வன்னிக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தடை நீக்கப்பட வேண்டும் என்பது கூட்டமைப்பினரின் மற்றுமொரு கோரிக்கை. வன்னியில் இருக்கும் படையினரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பிரதேசங்களுக்கு பொருளாதாரத் தடை விதிக்கப்படவில்லை. என்பதும் தான் அரசாங்கத்தின் கூற்று. ஆனால் படையினரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பகுதிகளுக்கு பொருட்கள் அனுப்பப்படுவதில் தேவையற்ற தலையீடுகளும், முறையற்ற கட்டுப்பாடுகளும் இருக்கலாம் என்பதை மறுப்பதற்கில்லை. இருந்தபோதும் வன்னிக்கான பொருட்கள் விநியோகத்திற்கு படையினர் போடும் முட்டுக்கட்டைகள் பற்றிப் பிரஸ்தாபிக்கும் போது இந்தச் சக்திகள் குடாநாட்டில் வாழும் மக்களுக்கான விநியோக மார்க்கங்களுக்கு தடை விதிக்கும் கட்டுப்பாடுகள் போடும் புலிகளின் செயற்பாடுகள் பற்றிக் கண்களை இறுக்க மூடிக் கொள்வது ஏன்? குடாநாட்டுக்கான கப்பல் மற்றும் விமான மார்க்க போக்குவரத்தில் நிலவக்கூடிய இடர்பாடுகள் பற்றியும் குறைபாடுகள் பற்றியும் முறைகேடுகள் பற்றியும் அணு அணுவாகச் சுட்டிக்காட்டும் இப் பிரமுகர்கள் தரைவழிப் பாதையை மூடியிருப்பது குறித்து மௌனம் காப்பது ஏன்? தரைவழிப்பாதை திறக்கப்பட்டு பொதுமக்களுக்கான போக்குவரத்து சீராக இடம்பெறுமானால் அது தமிழனின் தன்மானத்திற்கும் ரோச உணர்வுகளுக்கும் எந்த வகையில் பாதிப்பானதாக இருக்கப்போகிறது. எனவேதான் உண்மையாகவே மக்களின் நலன் குறித்த அக்கறை இந்த வீரம் பேசும் பிரமுகர்களுக்கு இருக்குமானால் உண்மையான பிரச்சனைகள் என்ன என்பது குறித்து இனங்கண்டுகொள்ள வேண்டும். இவர்கள் இனங்கண்டு கொள்ளத் தவறினால் மக்கள் இவர்களுக்கு கற்பிக்க வேண்டும்.

இந்த மூன்று விடயங்களோடு இப்போதைக்கு நிறுத்திக் கொள்வோம். ஏனைய இரு கோரிக்கைகள் தொடர்பாகவும் பின்னர் ஆராயலாம். மக்கள் தங்களைத் தேடிவரும் வேட்பாளர்களுக்கு பாடம் கற்பிக்கக் காத்திருக்கிறார்கள். ஏனெனில் தேர்தல் என்பது வெறுமனே ஒருநாள்த் திருவிழா அல்ல. அரசியல் என்பது பொழுது போக்கானதோ, பகட்டு வாழ்வுக்குரியதோ, வியாபாரமானதோ அல்ல. மாறாக பல்லாயிரக்கணக்கான மக்களின் நாளாந்த வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தது. அந்த வகையில் பொறுப்புணர்ச்சியோடு நிதானமாக நடந்து கொள்ள வேண்டிய தேவையுள்ளது. வெறுமனே ஊரவர், அயலவர், நண்பர், உறவினர், அறிமுகமானவர் என்ற வட்டங்களுக்குள் மட்டும் சிக்குண்டு பிரதிநிதிகளைத் தெரிவு செய்வது என்பது முகத்துக்கு அஞ்சி என்னவோ செய்ய போய் குலத்துக்கு ஈனம் செய்யும் என்பதை தமிழ் பேசும் மக்கள் மிக நன்றாகவே புரிந்து கொண்டுள்ளனர்.

சுவிஸ் பேர்ண் மாநகரில்.

## Suji Jewellery Works

நங்கையர் மனதை கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் (22 கரட்) தங்க நகைகள் செய்து கொள்ள சுஜி ஜுவல்லரி வேர்க்ஸ் தொடர்புகட்கு:-

**K. Thurai**
Belpbergstrasse-10
3123. Belp Bern ,
Swiss.
T.P. 0041-31-8191837

**உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய புதிய டிசைன்களில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.**

# விளம்பரப் பகுதி

## அற்புத சித்தர் மாந்திரீகம்

உங்கள் பிரச்சனை எதுவானாலும் அதில் உடன் வெற்றிகாண மட்டக்களப்பு-மலையாள-சோதிட மாந்திரீகச் சித்தர். பேராசிரியர்-கலாநிதி. "சக்திசரவணா" வுடன் தொடர்பு கொள்ளுங்கள். காதல் விவகாரம், குடும்பப் பிணக்கு, தொழில் விருத்தி, திருமணத் தடங்கல், பிரயாணத்தடை, சத்துரு ஜெயம் முதலான சகல விடயங்களிலும் நிச்சயம் வெற்றி பெறலாம். ஏழு தலைமுறை பாரம்பரியமும், 30 வருட சுய அனுபவ ஆற்றலும் கொண்ட "சக்தி சரவணா"வினால் நினைத்த காரியம், ஜாதகபலன், சோதிட அருள்வாக்கு, எண்சோதிடம் முதலான பிற சோதிட சேவைகளும் பெறலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கு விசேட துரிதசேவை மேற்கொள்ளப்படுகிறது. தபால் மூலம் தொடர்பு கொள்ளும் உள்ளூர் அன்பர்கள் 20 ரூபா முத்திரையுடன் தொடர்பு கொண்டு பதில் பெறலாம். இரகசியங்கள் அந்தரங்க மாகப் பேணப்படும். காலதாமதம்-பணவிரயம் இன்றி உடன் பரிபூரண வெற்றி பெற தொடர்பு கொள்ளுங்கள். நேரில் சந்திக்க- காலை 8 மணி முதல் மாலை 3 மணிவரை.

**"மின்னுவதெல்லாம் பொன்னல்ல"**

தொடர்பு

HON.PROF.DR.SHAKTHY SARAVANA;
Majestic Inn, Room-203
49, Galle Road, Colombo-04.
*584686, 556322, 556323*

(வியாழன் விடுமுறை)

தொலைபேசி தொடர்பு காலை 9முதல் இரவு 9 வரை வெளிநாட்டினர் தொடர்பு கொள்ள
*0094-1 556322, 0094-1 556323, 0094-1 584686*

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



15.11.2001

**HARVEY**

ஹார்லி

திரு. திருமதி பெனடிக்ட்-மரியமலர் தம்பதிகளின் ஏகப் புதல்வன் செல்வன் Harvey (ஹார்லி) தனது 1வது பிறந்தநாளை Lebanon டவராவில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை கொழும்பிலுள்ள அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, அப்பப்பா, பூட்டிமார்கள், மாமன்மார், மாமிமார், சித்திமார், சித்தப்பாமார் அனைவரும் புனித அன்னம்மாள் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்.

## மலேசியா

**மலேசியாவில் பணிப்பெண் வேலைவாய்ப்புக்கள்**

மத்திய கிழக்கு நாடுகளில் பணிப்பெண்களாகக் கடமையாற்றிய உங்களுக்கு புதியதோர் நாட்டில் சேவையாற்றும் சந்தர்ப்பம்.

சம்பளம் 9,000/- முதல் RM 450

**நிபந்தனைகளும் விதிமுறைகளும்**

- வயது 25 முதல் 35 வரை.
- சேவைக்காலம் இரண்டு வருடங்கள்.
- இரு வழி விமான டிக்கட், உணவு, தங்குமிட வசதி, வைத்திய வசதி இலவசம்.
- உங்களது பாஸ்போட், பாஸ்போட் அளவிலான 4 கறுப்பு வெள்ளை புகைப்படங்கள், இரண்டு வர்ண புகைப்படங்கள், போஸ்ட்காட் அளவிலான 3 வர்ண புகைப்படங்கள் சகிதம் நேரடியாக வரவும்.

**நேர்முகப் பரீட்சை**
கிழமை நாட்களில் காலை 9.00 – மாலை 5.00 வரை
சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களில்
காலை 10.00 – பகல் 2.00 வரை

**ட்ரான்ஸ் கல்ப் பிரைவேட் லிமிட்டட்**

TRANS GULF TGL GROUP

இலக்கம் 47, இரண்டாம் மாடி,
ஹொஸ்பிடல் வீதி, கொழும்பு 01.
தொலைபேசி இலக்கங்கள்: 321133, 329258.
(ஹில்டன் ஹோட்டலுக்கு அருகாமையில்)

App: No.AL/742/Advt:/32/2001

WAZ

## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் நவம்பர் 18-24 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் நவம்பர் 25,26 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் டிசம்பர்08, 09 திகதிகள்**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் நவம்பர் 10, 11 திகதிகள்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



முகிழ்வு 17 - 09 - 1921

நெகிழ்வு 22 - 11 - 2000

**திரு. அருணாசலம் ஆறுமுகம்**

அதிபர் அவர்கள் சமாதான நீதவான் சமுகத் தொண்டன் (மார்க்கண்டு உபாத்தியாயர்)


திதி. அபர பக்க ஏகாதசி
தெய்வமே திருவுருவே
உங்களை நினையாத நேரமில்லை
நீங்காத கவலையிங்கே நினைத்துக் கலங்குகின்றோம்
ஆசானாய் அதிபனாய் அறிஞனாய் அரிய குடும்பத் தலைவனாய்
அரசியலிற் சிறந்தோனாய் அனைவரும் போற்ற
வாழ்வாங்கு வாழ்ந்த வள்ளலே
ஆண்டொன்று போய் பல்லாண்டு சென்றிடினும்
பூண்டவுங்கள் அன்பைப் போற்றிடுவோம்
உங்கள் பொற்பாதம் பின்பற்றி
வேண்டும் நற்றொண்டுகளை விரும்புவோம்.

தற்போதைய முகவரி
"ஜெயமலர் அகம்"
கப்புது, கரவெட்டி.
தொ.பே.இல:-
070 212787

தங்கள் பிரிவாற் துயருறும்
மனைவி, மக்கள், மரு மக்கள்
பேரப்பிள்ளைகள், சுற்றத்தார்.

நிரந்தர முகவரி
தாமோதரம் பிள்ளை வீதி
சாவகச்சேரி.

## நவசித்தர் மாந்திரீகம்



ஆவிகளின் தொல்லை. எதிரி தொல்லை, கிரக தோஷங்கள் விரும்பியவரை வசப்படுத்த, வேண்டாதவரை விலக்க கல்வி, தொழில் முன்னேற்றமடைய, வீடு வளவு காவல் செய்ய, குடும்பப் பிரச்சனை தீர, திருமணத்தடை, மனக்கவலை, காதலன் காதலி பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் நடைபெற இன்னும் அநேக பிரச்சனைகளுக்கு சித்தர்கள் கையாண்ட மாந்திரீகத்தின் மூலம் நிவர்த்தி செய்வதோடு, வாதம், பித்தப் பைத்தியம், சுவாதம் பார்வைக்குறைவு, முடியுதிர்தல் போன்ற நோய்களுக்கும் வைத்தியம் செய்யப்படும். மட்டக்களப்பு பரம்பரை சித்த, ஆயுள்வேத, மாந்திரீக மருத்துவர்.

P.T.M.PILLAI (S.A.M.P)
YOHANANTHA VAITHIYASALAI
118/B MAIN STREET
PANDIRUPPU-01, KALMUNAI,
SRILANKA.

## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் வந்து திருமணப்பதிவு செய்து, திருமணம் செய்ய வருபவர்களுக்கு சகல வசதியுடன் தங்குமிடவசதியும், திருமணம் இலங்கை முறைப்படியோ அல்லது வீடியோ போட்டோவைப் பார்த்து வசதிக்கேற்பவோ தீர்மானிக்கலாம். விபரத்திற்கு:-

**அப்புலிங்கம்**

சிங்கப்பூர் கைதொலைபேசி எண்:-

Tel:- 00 65 9 7514941
Tel. Fax:- 0065 2857494


**LINGAM WEDDING SERVICE**

TELE: (65) 4533308

## மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவையாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாப்பின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**

"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**

"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"**

"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**

"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**

"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**

"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**

"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**

"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**

"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச் சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**

"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"**

"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா."

**கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"**

"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**

"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N)JP

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka.com/drpksami

# வடக்கு-கிழக்குப் பிரச்சனை குறித்து

# நிதானம் தவறாத கருத்துக்கள் அவசியம்

## அலசுவது - இராஜதந்திரி



ஒருவருடகாலத்தில் பதினோராவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, பன்னிரெண்டாவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் நடத்தப்படுவதற்கு எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சி ஆளுங்கட்சி மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டவரத் தயாரானதும், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சிக்குத் தாவியதுமே முக்கிய காரணங்களாக இருக்கின்றன.

ஆனால் தென்னிலங்கையில் தற்போது மேற் கொள்ளப்பட்டுவரும் தேர்தல் பிரசாரங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் பாராளுமன்றிலிருந்து கட்சித்தாவலை மேற்கொண்ட ஒரு அரசியல் கட்சியைப்போலவே அரசியல் ரீதியான கடுந்தாக்குதலுக்குள்ளாகி வருவதை அவதானிக்க முடிகின்றது.

வடக்கு-கிழக்கின் யுத்தப்பிரதேசங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக இராணுவ ரீதியான தாக்குதல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேசமயம் தற்போது தேர்தல் காலங்களிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக அரசியல் ரீதியாக ஆளுந்தரப்பும், மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சிறிய இனவாதக் கட்சிகள் என்பவை கடுந்தாக்குதல்களில் குதித்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலும் புலிகள் மீதான தடை இருந்து வருகின்றது. பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளும் புலிகளைத் தடை செய்துள்ளன. கனடாவும் கடந்தவாரம் புலிகளைத் தடைசெய்திருந்தது.

புலிகள் மீது அவர்களது தீவிரவாதப் போக்குக்காரணமாக தடைகள் போடப்பட்டிருக்கலாம். ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளது அரசியல் பிரிவான தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி இலங்கையில் ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாகவே இருக்கின்றது. இந்த அரசியல் பிரிவு மீது தடை போடப்படவோ அல்லது அப் பிரிவ தேர்தல் திணைக்களத்தினால் நிராகரிக்கப்படவோ இல்லை என்பது குறிப்படத்தக்கதாகும்.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாகவும் இருக்கின்றதென்ற ரீதியில் மாற்றுக் கட்சிகளினால் விமர்சிக்கப்படுவதில் தவறில்லை.

இருப்பினும் தென்னிலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியோடு தமிழீழ விடுதலைப் புலிகளையும் பெரிதும் சம்பந்தப்படுத்திப் பேசி வருவது இனப் பிரச்சனை குறித்த வடக்கு-கிழக்கு அரசியல் நிலபரத்தைப் பெரிதும் கங்கடத்துக்குள்ளாக்குவதாகவே இருக்கின்றது.

இலங்கையின் இன்றைய அரசியல் நிலபரத்தை எடுத்து நோக்குகையில் வடக்கு-கிழக்கு விவகாரம் மிகவும் அவதானமான முறையில், மிகுந்த அரசியல் சாணக்கியத்தோடு அணுகப் பட வேண்டியதாகவே இருக்கின்றது.

பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரமடைந்த காலம் முதல் இலங்கையில் படிப்படியாகத் தோற்றம் பெற்ற இனவாத அரசியலே தற்போது வடக்கு-கிழக்கில் பெரும் உள்நாட்டு யுத்தத்தை உருவாக்கியுள்ளது.

இந்த உள்நாட்டு யுத்தமே முழு நாட்டையும் பெருமளவு பாதிப்பக்குள்ளாக்கியும் விட்டுள்ளது.

வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணப்படவேண்டியதன் அவசியத்தை இலங்கையின் அனைத்து அரசியல் தரப்புமே நன்கு அறிந்து வைத்துள்ளபோதிலும், தேர்தல் போட்டிகளின் நிமிர்த்தம் அப்பிரச்சனை பற்றி மனம் போன போக்கில் விமர்சிப்பது எவ்விதத்திலும் ஆரோக்கியமான அரசியல் நடவடிக்கையாக இருக்கமுடியாது.

அண்மைக்காலங்களில் ஜனாதிபதி சந்திரிகா வெளிநாட்டுப் பயணங்கள் பலவற்றை மேற்கொண்டிருந்தார். அப்போதெல்லாம் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதன் மூலமே தீர்வொன்றைக் காண முடியுமென்று கூறியிருந்தார்.

வெளிநாட்டுத் தலைவர்களிடம் மட்டுமல்ல. செய்திஸ்தாபனங்களுக்கு வழங்கிய பேட்டிகளின்போது கூட தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமரசப் பேச்சுக்களின் அவசியத்தை ஜனாதிபதி சந்திரிகா வலியுறுத்தியிருந்தார்.

1983ம் ஆண்டு இனக்கலவரத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியே மூலகாரணமாகும். அதனைத் தொடர்ந்து வடக்கு-கிழக்கில் உள்நாட்டு யுத்தம் விரிவடைவதற்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவறான அரசியல் கொள்கைகளே உடந்தையாக இருந்தன.

1977ம் ஆண்டு முதல் 1994ம் ஆண்டுவரை நீடித்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி முடிவக்கு வரவேண்டும். ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான புதிய ஆட்சி ஏற்படும்போது இனப் பிரச்சனைக்கும் ஆரோக்கியமான அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென்றே வடக்கு-கிழக்கு மக்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால் 1994ம் ஆண்டு முதல் கடந்த ஏழுவருடகால பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கான தீர்வு காணப்படாமலேயே இருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி வடக்கு-கிழக்குப் பிரச்சனையைத் தவறாகக் கையாண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளைக் கைகழுவிவிட்டிருந்த தருணத்திலேயே ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணி ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றாகத் தென்பட்டிருந்தது.

நேரடியாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமைத்துவத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி, பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா முன்வந்திருந்தார்.

அத்துடன் ஐ.தே.க. ஆட்சியில் வடக்கு-கிழக்கில் மிகக் கடுமையாகவே அமுலிலிருந்த பொருளாதாரத் தடை, போக்குவரத்துத்தடை என்பவற்றை அகற்றவும் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணி முன்வந்திருந்தது.

இருந்தபோதிலும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட தொடர்புகள் மிகக்குறுகிய காலமே நீடித்ததுடன், மீளவும் யுத்தம் வடக்கு-கிழக்கில் தொடரலாயிற்று.

இந்த யுத்தத்தின் மத்தியில்கூட வடக்கு-கிழக்கு விவகாரத்துக்கான அரசியல் தீர்வு குறித்த நம்பிக்கை முற்றிலுமாக மறைந்துவிடவில்லை.

இதன் காரணமாகவே 1999ம் ஆண்டில் நோர்வே அரசின் அனுசரணையுடனான தீர்வு முயற்சி மீளவும் தோற்றம் பெற்றிருந்தது.

ஆனால் அத்தீர்வு முயற்சிகூட எதிர்பார்த்தவகையில் முன்னேற்றம் கண்டிருக்கவில்லை. தென்னிலங்கையின் தீவிரவாரத சக்திகள் நோர்வேயின் சமரச முயற்சிகளை கடுமையாகவே எதிர்த்தன.

இது தவிர யுத்த நிறுத்தம் மற்றும் பேச்சுவார்த்தைகள் தொடர்பான உடன்பாடுகளில் ஏற்பட்ட முரண்பாடுகள் நோர்வேயின் சமரச முயற்சியை பெரிதும் பாதித்துவிட்டிருந்தன.

இருப்பினும் வடக்கே தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையில் ஏற்பட்ட இழப்புகயைடுத்து மீளவும் அரசியல் ரீதியான சமரச முயற்சிகளை நோர்வேயின் அனுசரணையுடன் ஆரம்பிப்பது பற்றி அரச தரப்பு பரிசீலித்தது.

பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு சில தினங்கள் முன்பதாகக்கூட வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிகாமர் புலிகளுடன் பேச்சுவார்த்தை மீளவும் ஆரம்பிக்கப்படுமெனவும், இதற்கான வழிவகைகளைத் தாம் ஆராய்ந்து வருவதாகவும் கூறியிருந்தார்.

கடந்த வாரம் ஆரம்பமான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இந்த வருடத்துக்கான பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற்றும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், நியயோர்க் வருகின்ற நோர்வே பிரதிநிதிகளைச் சந்தித்து இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சி பற்றிப் பேசவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையில் பன்னிரெண்டாவது பாராளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரங்கள் சூடுபிடித்துள்ள நிலையில் மிகவும் அவதானமாகக் கையாளப்பட வேண்டிய பிரச்சனையாகவிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் குறித்து பொறுப்பற்ற பேச்சுக்கள் அனைத்துத் தரப்பினராலுமே தவிர்க்கப்பட வேண்டியது அவசியமானதாகின்றது.

வடக்கு-கிழக்கில் தேர்தலில் குதித்துள்ள தமிழ் அரசியல் கட்சிகளிடையே பல்வேறு விடயங்களில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம்.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்துமே வலியுறுத்துபவையாக இருக்கின்றன.

நான்கு தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்த கூட்டமைப்பு மட்டுமல்ல. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி.) கூட வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் பேச்சுக்கள் நடத்தப்படவேண்டுமென்பதை வலியுறுத்தியுள்ளது.

திரு. டக்ளஸ் தேவானந்தா அண்மையில் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்துப் பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளித்தபோது தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுக்களுக்கு முன்வரும் பட்சத்தில் அரசியல் ரீதியாகத் தம்மாமல் வேண்டிய ஒத்துழைப்பை வழங்க முடியுமெனவும் குறிப்பிட்டிருந்தார்.

வடக்கு-கிழக்குப் பிரச்சனை என்பது லடசோப லட்சம் மக்களின் அரசியல் உரிமைகள் சார்ந்ததாக மட்டுமல்ல. மனிதாபிமானம், அடிப்படை உரிமைகள் சார்ந்ததாகவும் இருக்கின்றது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி பாராளுமன்றப் பொதுத்தேர்தல் முடிவற்று, புதிய பன்னிரெண்டாவது பாராளுமன்றம் கூட்டப்படலாம்.

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகியவை புதிதாகத் தோற்றம் பெற்ற நிலையில் பாராளுமன்றில் பல புதிய முகங்கள் கூட பிரதிநிதித்துவங்களைப் பெறலாம்.

இதன் பின்னர் புதிய அரசாங்கம் முகங்கொடுக்கவேண்டிய முக்கிய பிரச்சனையாக வடக்கு-கிழக்கு விவகாரமே இடம்பிடிக்குமெனவும் எதிர்பார்க்க முடியும்.

எனவே இவ்விவகாரத்தை கையாளுவது குறித்து தேர்தல் பிரசாரமேடைகளில் வெளிவரும் கருத்துக்கள் நாட்டு மக்கள் மத்தியில் சஞ்சலத்தையோ அல்லது தப்பான அபிப்பிராயங்களையோ ஏற்படுத்தாதவையாக இருக்கவேண்டும்.

நாடளாவிய தேர்தல் பிரசார கூட்டங்களை அவதானிக்கும்போது, பிரதான கட்சிகள் ஏற்பாடுசெய்கின்ற கூட்டங்களிலெல்லாம் காலநிலை மாற்றங்களைக்கூடப் பொருட்படுத்தாது கால்கடுக்க பெருந்திரளான மக்கள் திரண்டுநின்று பேச்சுக்களைச் செவிமடுப்பதைக்காண முடிகின்றது.

ஆயிரம் வாக்குறுதிகளை வழங்கலாம். மக்களைக் கரகோஷம் செய்யுமளவுக்கு வார்த்தை ஜாலங்களையும் வெளிப்படுத்தலாம்.

ஆனால் நாட்டின் மிக நெருக்கடியான, பிரச்சனையான வடக்கு-கிழக்கு நிலபரம் குறித்து வெளியிடப்படும் வாக்குறுதிகளோ அல்லது பேச்சுக்களோ உண்மையானதாகவும் அமைதியையே கருத்திற் கொண்டதாகவும் இருக்கவேண்டும்.

இதன் மூலமே புதிய பாராளுமன்றில் ஒரு முற்று முழுதான சமாதான-சகவாழ்வு குறித்த ஆக்கபூர்வமான அணுகுமுறைகளை எதிர்பார்க்க முடியும். ●

## அதிரடி அய்யாத்துரை



***கட்சி ஆதரவாளர்*** ஒருத்தர் இந்த நேரத்துல சாகுறதும் இலாபம்தான் பார்த்தியளோ.... அநியாயமா 'கொண்டிட்டாங்கள்' கொன்றவர்களை நாம் தோற்கடிப்போம். என்றெல்லாம் அறிக்கை விட்டு போஸ்டர் ஒட்டி கொஞ்சம் வாக்குகளையாவது கவரலாமல்லோ... பச்சை சுட்டு நீலம் செத்ததா ஒரு கூட்டம் அலறுது. நீலம் சுட்டு பச்சை செத்ததா இன்னொரு கூட்டம் கண்ணீர் வடிக்குது. உந்த ரெண்டு தரப்பும் தாக்கி தங்களின்ர ஆள் செத்துப் போனதா ஜே.வி.பி. ஊர் முழுக்க போஸ்டர் ஒட்டியிருக்கு. இவ்வளவுக்கும் உந்த ஆள் சைக்கிளால விழுந்துதான் செத்தவரெண்டு மருத்துவ அறிக்கை சொல்லுது. எப்படிச் செத்தால் என்ன இந்த சீசனில தொண்டர்களின்ர சாவு தலைவர்களுக்கு பிரயோசனமானதுதானே!

***கப்பல் வாங்கி பிஸினஸ் செய்தது*** மாதிரியல்ல வாக்குக் கேட்கிறது என்ற சங்கதி எங்கட யூ.பி. யாருக்கு இப்பதான் விளங்கியிருக்கெண்டு நினைக்கிறன். தமிழ்க்கட்சிகள் ஒரு பக்கமும் ஜனநாயகக் கட்சி மறுபக்கமுமா நசுக்கேக்க தன்ரபாடு கஷ்டமாய்ப் போயிடுமோவென்ற பயம் மகேஸ்வரரை வாட்ட ஆரம்பிச்சிருக்குது. எல்லாவற்றிலும் மண்ணை அள்ளிப் போட்டுடுவினமோ தெரியாதெண்டு நெருக்கமானவர்களிட்ட புலம்பியிருக்கிறார்!

***சேவல் கூவியோ பொழுது விடியுதுதென்று*** சும்மா ஒரு பகிடிக்கு கேட்கிறதெண்டாலும் பாருங்கோ தமிழ்க் கட்சிகளின்ர கூத்தை... வாகரைப் பகுதியை இணைச்சு புதிய பிரதேச செயலகம் அமைக்கிறது சம்பந்தமா ஒரு பிரச்சனை இருந்தது தெரியுமல்லோ... உந்தத்திட்டம் மக்களுக்கு பிடிக்கயில்லை என்றதும் 'கான்சலாகிப்' போனது! அப்படி யொரு பிரதேச செயலாளர் பிரிவு அமையாது என்று அரசாங்கம் அறிவிச்சதும் வழமைபோலவே தமிழ்க்கட்சிகள் 'டிமான்ட் க்ளைம்' பண்ணுற காரியத்தில இறங்கிட்டினம். திட்டம் கைவிடப்பட்ட செய்தி வெளியானதும் தமிழ்க் கட்சிகளின்ர கூட்டணியினர் அவசரமா ஆர்ப்பாட்டம் நடத்தி, அறிக்கை விட்டு அசத்திப் போட்டினம். இப்போ சொல்லுங்கோ... சேவல் கூவியே பொழுது விடிஞ்சது?

***'இன்று காலை*** 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்தில்' என்று செய்தி தொடங்கியது. என்னப்பா உது வானிலை அறிக்கையை தலைப்புச் செய்தியா வாசிக்கப்போகினமோ எண்டு பயந்து போனன்! அது அப்படியில்ல 'இன்று காலை 8.30 மணியோடு முடிவடைந்த 24 மணி நேரத்தில நாடுமுழுவதிலும் 76 தேர்தல் வன்முறைகள் பதிவாகியுள்ளன' என்று செய்தி தொடர்ந்தது. இந்த நாட்டின்ர அரசியல் கலாசாரம் மழையை விட ஸ்பீட் பார்த்தியளே...!

***கிரிக்கெட்டில் உலகக் கிண்ணம்*** வென்று அது போதாதென்று மக்கள் சேவைக்கு வந்திருக்கும் முன்னாள் கப்டன் தன்ர சேவையை ஆரம்பிக்கும் முன்னரே அரசாங்க செலவில சகல சௌபாக்கியங்களுடனும் வாழுறார். ஜி.எல்.பீரிஸ் இருந்த விசும்பாய மாளிகை அர்ஜுனாவுக்கு கிடைத்திருக்கிறது. எம்.பி.யாக வரமுன்னரே அமைச்சருக்கான சலுகை! கொடுத்து வைத்த மக்கள் சேவகர்!

# உண்மைத் தொடர் 32

குளித்துவிட்டு வெளியே வந்த ஈவா பிரௌனை கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான் ஹிட்லர். அவளது பொன்நிற மேனியில் தங்கிக்கிடந்த நீர்த்துளிகள் ஒவ்வொன்றாய் உதிர்ந்து கொண்டிருந்தன. டவல் ஒன்றை மாத்திரம் போர்த்தியிருந்தாள் அது பாதி நனைந்திருந்தது. ஈரம் கசியும் உடலை இறுக்கமாக அணைத்து முத்தமிட்டான் ஹிட்லர். உடலை போர்த்தியிருந்த டவல் நழுவி விடாமல் பாதுகாக்க அவள் பலத்த முயற்சி மேற்கொண்ட போதும் அது பலனளிக்கவில்லை. அவனது இறுக்கம் அதிகரிக்கும் போது அவளது தடுப்பு இயல்பாக விலகியது. அந்த ஈர உடலின் அணைப்பு இனிமையாக இருந்தது. சர்வதிகாரியின் பிடிக்குள் அவள் திணறினாள். விட்டு விலக விரும்பாத மனம் ஈவாவை அப்படியே அலாக்காகத் தூக்கிக் கொண்டு முன்அறை சோபாவில் கிடத்தினான் ஹிட்லர். அவளது உடலில் எஞ்சியிருந்த ஒவ்வொரு நீர்த்துளியாய் தேடி முத்தமிட்டான். சினுங்கல் அதிகரித்தது. இதுவரை இருவரும் எதுவும் பேசவில்லை. இதற்கு மேல் பேசும் நிலைமையிலும் இல்லை. ஈவாவின் அடிவயிற்றில் பூப்பூக்க ஆரம்பித்தது. அவனது செய்கையை ஆமோதித்து கண்களை மூடிக்கொண்டாள்.

★★★

ஜெர்மன் போலந்து யுத்தம் போலந்து பட்டார்கள்.

ஆக்கிரமிக்கப்பட்ட போலந்தின் ஒரு பகுதி நேரடியாக ஹிட்லரின் நிருவாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. மற்றப் பகுதி 'ஜெர்மன் பேரரசின் கவர்னர் ஜெனரல் மாகாணம்' என பிரகடனம் செய்தான் ஹிட்லர். 1940ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் இம்மாகாணத்துக்கென தனியான ஆளுநர் ஒருவரை நியமித்தான் ஹிட்லர்.

ஃபிரான்க் என்ற படுபாதகன் ஹிட்லரின் பிரதிநிதியாக போலந்துக்கு அனுப்பி வைக்கப்பட்டான். முதல் நாளன்று அவன் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையே போலந்து மக்களை அச்சம் கொள்ள வைக்கப் போதுமாக இருந்தது "வெற்றி கொள்ளப்பட்ட கிழக்குப் பகுதிகளை ஆளும் அதிகாரம் எனக்கு வழங்கப்பட்டிருக்கிறது. யுத்தப் பிரதேசம் என்ற வகையில் ஈவிரக்கமின்றி அனைத்தையும் அழித்து நாசப்படுத்தும் அசாதாரண கட்டளையுடன்தான் நான் இங்கு வந்திருக்கிறேன். சிலவற்றை நான் அழித்து மலைபோல் குவிப்பேன். ஆனால் போலந்து மக்களை அவ்வாறு செய்யமாட்டேன். நீங்கள் ஜெர்மன் பேரரசின் மான்புக்குரிய தலைவர் அடோல்ஃப் ஹிட்லர்

குறிப்பிடத்தக்க பிரச்சனைகள் எதுவமின்றி போலந்தை ஆக்கிரமித்து கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து விட்டதால் ஹிட்லரின் சிந்தனை விரைவாகவே உலக வரைபடத்தைச் சுற்றி சூழல ஆரம்பித்தது. அடுத்த குறி எதுவாக இருக்கும் என்ற கேள்வி எழும்ப ஆரம்பித்தது. ஐரோப்பாவுக்குள் ஒருவகை பதற்றம் குடி கொண்டது.

போலந்தில் இருந்து பிடித்துவரப்பட்டவர்களில் யூதர்களும் அடங்குவர். யூதப் பழங்குடியினர் வாழும் ஊர் ஒன்றில் இருந்த சகலரும் ஜெர்மன் படையினரால் சிறைபிடிக்கப்பட்டு ரயில் ஒன்றில் ஏற்றப்பட்டார்கள். அவுட்ஸ்விக் என்ற இடத்தில் உள்ள சித்திரவதை முகாமுக்கு கொண்டு வரப்பட்ட அவர்கள் ஒரு நாள்கூட சிறையில் அடைத்து வைக்கப்படவில்லை. நேராக பாரிய நெருப்பு உலைகளுக்குள் திணிக்கப்பட்டார்கள்.

அந்தக் கிராமத்தில் இருந்த 2 ஆயிரம் பேர் வரையில் ரயிலில் ஏற்றப்பட்டு அவுட்ஸ்விக்கிற்கு கொண்டுவரப்பட்டார்கள். ரயில் முகாம் வாசலை அடைந்து கதவுகள் திறக்கப்பட்ட போதும் எவரும் அதிலிருந்து இறங்கவில்லை.

20 நாட்கள் வரை ஒரு துளி நீர்கூட

## உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடோல்ஃப் ஹிட்லர்



மக்களுக்கு மிகப்பெரும் அழிவாகவும் துன்பமாகவும் அமைந்தது.

போர் முடிவடைந்ததோடு எஸ்.எஸ். படையணிகளை போலந்துக்கு அனுப்பி வைத்தான் ஹிட்லர். கிராமங்களுக்குள் புகும் ஜெர்மனியப்படைகள் சிறுவர்கள், வயது முதிர்ந்தவர்கள் என்ற பாகுபாடின்றி ஆயிரக்கணக்கானவர்களை கொன்று குவித்தன. மேலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் சிறை பிடிக்கப்பட்டார்கள். அவ்வாறு கைது செய்யப்படுபவர்கள் இரவோடு இரவாக ட்றக் வண்டிகளிலும், ரயில்களிலும் ஜெர்மன் சிறைச்சாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டார்கள் அவர்களில் அநேகமானவர்கள் மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே கொல்லப்

### ஷானு

அவர்களுக்கு கீழ்ப்படிவுள்ள மக்களாக இருக்கும் வரை உங்களுக்கு உயிர்வாழ அனுமதியுண்டு" என்றும் ஃபிரான்க் என்ற அந்தத் தளபதி கர்ஜித்தான். ஆனால் அவன் ஏனையவற்றை விடவும் மக்களை அழிப்பதில்தான் கூடுதல் அக்கறை காண்பித்தான். ஜெர்மனுக்கு வெளியில் தனது பிரதிநிதிகள் செய்யும் சகல அட்டூளியங்களை ஹிட்லர் அறிந்தே இருந்தான். மக்களுக்கு தன்மீது பயம் ஏற்பட வேண்டும் என்ற காரணத்துக்காக அயல் மாகாணங்களில் நடக்கும் கொடுமைகளை அவ்வப்போது வெளியில் சொல்லவும் செய்தான்.

இன்றி ரயிலில் வந்திருந்ததால் அவர்களில் அநேகமானவர்கள் ரயில் பெட்டிகளுக்குள்ளேயே செத்துக்கிடந்தனர். கொஞ்ச நஞ்சம் உயிரிழந்தவர்கள் குதிரை வண்டிகளில் போட்டு இழுத்து வரப்பட்டு நெருப்பு உலைகளில் போடப்பட்டார்கள். இவ்வாறு நெருப்பில் போடுவதற்கு முன்னர் நோயாளிகள் முதலில் தெரிவு செய்யப்படுவதுண்டு. இம்முறை அப்படி எதுவும் இல்லாமல் சிறுவர்களும் அடங்களாக அனைவரும் போடப்பட்டனர்.

அன்று இரவு முழுவதும் அந்த நெருப்புச் சூளைகள் வேகமாக செயல்பட்டன. சித்திரவதைக்கூட முன்றில் அந்த அப்பாவிகளில் இருந்து களையப்பட்ட ஆடைகள் மலைபோல் குவிந்து காணப்பட்டன.

**வருவான்...**

# மூண்டது போர் 6

**தருவது ~ தண்டாயுதன்**

▶ இதுவரை காலமும் தலிபான்களின் கட்டுப்பாட்டிலிருந்த ஆப்கானிஸ்தான் தலைநகரமான காபுல், வடக்கு கூட்டணிப் படையிடம் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு முன்னர் மஸார்-ஈஷெரீப் என்ற ஆப்கானிஸ்தான் நகரத்தை வடக்கு கூட்டணி கைப்பற்றியிருந்தது. தலைநகர் காபுலின்



வடக்கு கூட்டணி படையினர் காபுல் நகரைக் கைப்பற்றியுள்ளனர். யுத்தப்பிரதேசத்தில் டிரக் வண்டியொன்றில் அமர்ந்து செல்லும் வடக்கு கூட்டணி போராளிகள்.

வீழ்ச்சி ஆப்கானிஸ்தான் யுத்தத்தில் ஒரு முக்கிய திருப்பமாகும். அடுத்து அரசியல் ரீதியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகியவை ஆராய்ந்து வருகின்றன.

▶ மூன்று பத்திரிகையாளர்கள் ஆப்கானிஸ்தானில் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் பிரெஞ்சு வானொலிச் செய்தியாளர்கள். ஒருவர் ஜெர்மன் படப் பிடிப்பாளர். வடக்கு கூட்டணிப்படையினரோடு யுத்த டாங்கியொன்றில் இம்மூவரும் சென்றுள்ளனர். அச்சமயம் தலிபான் போராளிகள் பதுங்கியிருந்து தாக்கியதில் இவர்கள் பலியானார்கள்.

▶ ரஷ்யா பத்து வருடங்களுக்கு முன்னர் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தபோது ஏராளமான யுத்த டாங்கிகளைப் பாவித்திருந்தது. அந்த யுத்த டாங்கிகள் பின்னர் ஆப்கானிஸ்தானிலேயே கைவிடப்பட்டன. இந்த யுத்த டாங்கிகளையே தற்போது தலிபான்களும், அவர்களை எதிர்த்துப் போரிடும் வடக்கு கூட்டணிப்படையினரும் பாவிக்கின்றனர். பழையவையாக இருக்கின்ற போதிலும், நல்ல நிலையில் இந்த யுத்த டாங்கிகள் பாவிப்பிலுள்ளன. காபுலுக்குள் பிரவேசித்துள்ள வடக்கு கூட்டணிப்படைகளும் ரி-72 ரகத்தைச் சேர்ந்த இந்த யுத்த டாங்கிகளையே தாக்குதலுக்காகவும், போக்குவரத்துக்காகவும் பாவித்து வருகின்றன.

▶ தலிபான்கள் கடந்த ஐந்து வருடகாலம் ஆப்கானிஸ்தானை ஆட்சி செய்தனர். இந்த ஆட்சியில் பெண்களின் உரிமைகள் முற்றிலுமாக மறுக்கப்பட்டன. தலிபான்களுக்கு ஏற்பட்டுவரும் வீழ்ச்சியையடுத்து தமது உரிமைகளை மீளவும் நிலைநாட்டுமாறு ஆப்கானிஸ்தான் பெண்கள் குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளனர். தலிபான்கள் இஸ்லாமியச் சட்டத்தை மிகக் கடுமையாகப் பயன்படுத்தி பெண்கள் பாடசாலை செல்வதையும், வேலைத்தளங்களுக்குச் செல்வதையும் தடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

▶ ஜப்பான் மூன்று யுத்தக்கப்பல்களை இந்து சமுத்திரப் பகுதிக்கு அனுப்பிவைத்துள்ளது. ஆப்கானிஸ்தானில் இடம் பெற்றுவரும் யுத்தத்தில் அமெரிக்கப் படைகளுக்கு உதவும் விதத்திலேயே இந்த மூன்று யுத்தக் கப்பல்களும் ஜப்பானினால் அனுப்பப்பட்டுள்ளன. இந்த மூன்று கப்பல்களும் நவீன வசதிகளைக் கொண்டவை. நான்கு நவீன கருவிகளைக் கொண்டிருப்பதோடு, ஹெலிகப்டர்களையும் சுமக்கக்கூடியவையாக இக்கப்பல்கள் இருக்கின்றன.

▶ தலிபான்களுக்கு உதவும் விதத்தில் 200 பிரிட்டிஷ் முஸ்லிம்கள் ஆப்கானிஸ்தானுக்குப் போரிடச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இப் பிரித்தானிய குடியுரிமை பெற்ற முஸ்லிம்கள் ஆப்கானிஸ்தானில் யுத்தத்தில் குதிக்கும் பட்சத்தில் தலிபான்களை எதிர்த்துப் போரிட்டு வரும் பிரிட்டிஷ் துருப்புகளையும் எதிர்த்துப் போரிட நேரிடும். இதன் மூலம் பிரிட்டனைச் சேர்ந்த இருசாரார் ஒருவரையொருவர் மோதும் துரதிர்ஷ்டம் ஏற்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



▶ விமானத்தாக்குதல்களுடன் அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் நிலை கொள்வதில் வெற்றி காணலாம். ஆனால் பின்வாங்கிச் செல்லும் தலிபான்கள், தரைமார்க்கமான யுத்தத்தில் ஈடுபடும்போது நிலைமை மோசமாகும். அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படைகள் தலிபான்களுக்குத் தாக்குப் பிடிக்கலாம். ஆனால் அமெரிக்க துணையோடு, 'வாலாட்டும்' வடக்கு முன்னணி படையினர் தலிபான்களின் தாக்குதல்களை எதிர்கொள்வது கடினம். 'பாம்பின் கால் பாம்பறியும்'.

**(தொடரும்)**



## மீனுக்குள் மீன்

'நொதர்ன் பைக்' என்னும் மீனினத்தை வீடுகளில் வளர்க்க அமெரிக்க அரசாங்கம் தடைவிதித்துள்ளது. அண்மையில் இந்தத் தடையை நீக்கி அமெரிக்காவின் அலாஸ்கா மீன் மற்றும் விளையாட்டுத்துறை அனுமதி அளித்துள்ளது.

இதையடுத்து அங்கு மீன் கண்காட்சி ஒன்று நடந்தது. மீன் காட்சியகத்தில் 'நொதர்ன் பைக்' என்ற மீன் வாய்க்குள் மீன் குஞ்சு ஒன்று வெளியே வருவதற்காக எட்டிப் பார்க்கும் காட்சிதான் இது.

# தகவல் பெட்டி

## சோளப் பொரிச் சாதனை

படத்தில் அழகி ஒருத்தி படுத்திருப்பது பொப்கோர்ன் எனப்படும் சோளப் பொரிக்கு மத்தியில். அதிவேகமாகத் தொட்டி ஒன்றில் சோளப் பொரியை நிரப்பி கின்னஸ் சாதனை படைக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட புகைப்படம் தான் இது.

12 அடி உயரமான மரத்தொட்டி ஒன்றில் 150 கிலோ நிறையுள்ள சோளப்பொரியை வேகமாக நிரப்பி அண்மையில் சாதனை படைத்திருந்தார்கள்.

அந்தச் சாதனையின்போது இங்கிலாந்து நாட்டின் மொடல் அழகி ரெல்மக் அன்ட்ரூ, சோளப் பொரிக்கு மத்தியில் படுத்திருந்து ஒய்யாரப் போஸ் கொடுத்திருந்தாள்.

## காய்ச்சலுக்கு லேசர் சிகிச்சை


உடலுக்குள் அயற்பொருட்கள் நுழைந்தால் சிலருக்கு ஒவ்வாமை ஏற்படும். படத்தில் இருக்கும் இந்தப் 19 வயது ஜப்பானிய மாணவிக்கு பூக்களின் மகரந்தச் சேர்க்கை காலங்களில் தும்மல், சதா மூக்கு ஒழுகுதல் ஏற்பட்டுக் கொண்டிருக்கும்.

இது பின்னர் காய்ச்சல் வரை போகுமாம். இந்தக் காய்ச்சலைக் குணப்படுத்த டோக்கியோ பல்கலைக்கழகம் லேசர் முறையைப் பயன்படுத்துகிறது.

மூக்குப் பகுதியில், ஒவ்வாமையை ஏற்படுத்தும் நோய் நுண்மங்கள் இருந்தால், அவற்றை இந்த லேசர் மூலம் அழித்துவிடலாம். அந்த நுண்மங்கள் உள்ளே நுழைய முடியாதபடி சிகிச்சை அளித்து லேசர் கதிர்களால் குணப்படுத்த முடியும்.







## கோபமோ?

பயங்கர மிருகம் ஒன்று கோபப் பார்வையை வீசுவது போல் தோன்றுகிறதா?

அதுதான் இல்லை. அமெரிக்காவின் போர்ட் வோல்டன் கடற்கரையில் வசிக்கும் நாரை இனம்தான் இது. தனது உணவை உண்டு முடித்தபின் திருப்தியோடு பார்க்கும் சாதாரண பார்வையே இப்படித்தான்.

## செயற்கை மரம்

பிரேஸிலில் உள்ள சாவோ பெர்னார்டோ நகரில் அமைக்கப்பட்டுள்ள கிறிஸ்மஸ் மரம் தான் இது. இதன் உயரம் 15 மீட்டர்.

இந்தச் செயற்கை மரத்தை உருவாக்க 15 ஆயிரம் பிளாஸ்டிக் போத்தல்கள், 5 ஆயிரம் தகரப் பேணிகள் மற்றும் நூற்றுக்கணக்கான பிளாஸ்டிக் கப்கள் பயன்படுத்தப்பட்டன.



திரையுலக மறுபக்கம் 217

# இயக்குநர்-நடிகை நெருக்கமும் அலைக்கழிக்கப்பட்ட தயாரிப்பு நிர்வாகியும்

தமிழ்நாட்டிலிருந்து மயன்

'கனவு' பட நிறுவனம் தயாரிப்பில் அண்மையில் வெளியான 'ஐந்துபேர் பூமி' படத்தை இயக்கிய மூவேந்தர்களில் ஒருவரது பெயர் கொண்ட இயக்குநருக்கும் அப்படத்தின் அறிமுக நாயகிக்கும் இடையே பிரிக்க முடியாத 'நெருக்கம்' பற்றிக் கோடம்பாக்கத்தில் பலமாகக் கிசுகிசுக்கப்படுகிறது.

இயக்குநரது இரண்டாவது படத்தில் இந்த அறிமுக நாயகியின் அக்காவான 'வரி' நடிகை நடித்திருந்தார். அப்படத்தில் நாயகனின் தங்கை வேடத்தில் அக்காவை நிறம் மாற்றி நடிக்க வைத்தார் இயக்குநர். அக்கா கூட படப்பிடிப்புக்கு தங்கை வர, இயக்குநரது பார்வை தங்கை மேல் விழுந்தது.

தனது அடுத்த படமொன்றில் தங்கைக்கு நாயகி வாய்ப்புத் தருவதாக வாக்குறுதி கொடுத்த இயக்குநர், தங்கையுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தார்.

சொன்னபடியே தனது புதிய படத்தில் தங்கையை நாயகியாக்கினார். 'காதல் இளவரசன்' என்னும் இளம் நடிகருக்கு ஜோடியாக படப்பூஜை அமர்க்களமாக ஆரம்பமானது. பின் அப்படத்தின் தயாரிப்பாளர் செய்த குளறுபடியால் படம் நிறுத்தப்பட்டுவிட்டது.

நாயகியாக அறிவிக்கப்பட்ட தங்கையின் கதி அதோகதியானது. இருப்பினும் இயக்குநர் கொடுத்த தைரியத்தாலும் அவர் மீதுள்ள நம்பிக்கையாலும் மனந்தளராமல் இருந்தார்.

இந்நேரத்தில் 'கனவு' படத்தயாரிப்பு நிறுவனம் அந்த இயக்குநரை அணுகியது. கதை சொன்னார் இயக்குநர். தயாரிப்பு நிறுவனத்திற்குக் கதை பிடித்துப்போக, பட வேலைகளில் இறங்க அனுமதி கொடுத்தது.

இயக்குநர் இந்தப்படத்தில் தங்கை நடிகையை நாயகியாக்கினார். இது கனவு நிறுவனத்திற்கு அறவே பிடிக்கவில்லை. இருப்பினும் இயக்குநரது இஷ்டத்திற்கு விட்டுவிட்டது.

இந்தப் படப்பிடிப்பின்போது இயக்குநருக்கும் அறிமுக நாயகிக்கும் இடையில் நடந்த 'நெருக்கம்' பற்றிப் படத்தில் பணிபுரிந்த அனைவரும் நன்கறிவர். இவர்களது 'நெருக்கம்' எத்தகையது என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு சின்ன உதாரணம்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு, நகரத்து வாசனையையே அறியாத கர்நாடக மாநிலம் ஒன்றின் குக்கிராமத்தில் நடந்தது. சட்டென்று வெளியே சென்று எதையும் வாங்கிவர முடியாத ஓரிடம் அது.

இந்த நிலையில் படத்தின் அறிமுக நாயகி ஹொர்லிக்ஸ் போன்ற 'பூஸ்ட்' என்னும் பானம்போத்தல் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அந்தக் குக்கிராமத்தில் இது கிடைக்காது என்பதால், எடுத்த எடுப்பிலேயே இல்லை என்று மறுத்து விட்டார் தயாரிப்பு நிர்வாகி.

இந்தப் பதிலால் ஆத்திரமடைந்த நாயகி, கோபரேகையை முகத்தில் பரவவிட்டார். அடுத்த காட்சிக்கான ஆயத்த வேலைகளை முடித்துவிட்டு, நாயகியை அழைக்க வந்தார் அந்த இயக்குநர்.

நாயகியின் முகமாற்றத்தைக் கண்டு என்னவென்று கேட்டார் அவர்.

அதற்கு நாயகி, தான் பூஸ்ட் கேட்டதையும் தயாரிப்பு நிர்வாகி மறுத்த விவரத்தையும் கூறினார்.

'இவ்வளவு தானா?' என்பது போன்ற பார்வையை வீசிய இயக்குநர், அந்த தயாரிப்பு நிர்வாகியை அழைத்தார். அடுத்து எடுக்கவிருக்கும் காட்சிக்கு ஐந்து பூஸ்ட் போத்தல்கள் தேவைப்படுவதாகவும் அவற்றை உடனே வாங்கி வரவும் உத்தரவிட்டார்.

கிட்டத்தட்ட அரைநாள் அலைச்சலுக்குப் பின் பூஸ்ட் போத்தல்களோடு படப்பிடிப்புத் தளத்திற்கு வந்து சேர்ந்தார் தயாரிப்பு நிர்வாகி.

ஒரு போத்தலை எடுத்து அந்த நாயகியிடம் கொடுத்து விட்டு மற்றவைகளை படப்பிடிப்பு தளத்தில் இருந்தவர்களுக்குக் கொடுத்தார் இயக்குநர்.



விக்ரம்-காவேரி
படம்: காசி

# சினி விசிட்

## தலைக்கதை

ஜீ.வி.பிரமாண்டமாகத் தயாரிக்க விஜய்-முன்னாள் பிரபஞ்ச அழகி பிரியங்கா சோப்ரா இணைந்து நடிக்கும் 'தமிழன்' படத்தை மஜீத் என்ற புதியவர் இயக்குகிறார்.

இவர் எஸ்.ஏ.சந்திரசேகரனிடம் நீண்ட காலமாக உதவியாளராகப் பணிபுரிந்தவர். ஷங்கரைப் போல் எஸ்.ஏ. சந்திரசேகரனிடம் உதவியாளராகப் பணிபுரிந்த இவரும் அவரைப்போல் பேசப்படுவார் என்கிறது கோடம்பாக்க வட்டாரம்.

காரணம் இல்லாமல் இல்லை. தயாரிப்பாளர் ஜீவி. மற்றும் விஜய் ஆகியோரிடம் கதை சொல்லி அசர வைத்து விட்டார் மஜீத்.

'தறுதலை ஒருவன் வாழ்க்கையில் உயர்ந்து தபால் தலை இடம் பிடிக்கிறான்' என்ற ஒற்றைவரி மையக் கருவைக் கொண்ட இப்பட பூஜைக்காக விஜய் படம் பொறித்த தபால் தலையை உருவாக்கி அசத்தியிருக்கிறார் மஜீத்.

## பாண்டியராஜன்-லிவிங்ஸ்டன் நடிக்கும் 'சினிமா பார்க்கலாம்'

பல தெலுங்குப் படங்களைத் தயாரித்த அன்னபூரணேஸ்வரி என்ற நிறுவனம், தமிழில் தமது முதல் தயாரிப்பாகத் தயாரிக்கும் படம் 'சினிமா பார்க்கலாம்'.

பாக்யராஜின் சிஷ்யர்களான பாண்டியராஜன்-லிவிங்ஸ்டன் இணைந்து நடிக்கும் இதில் விவேக், வடிவேலு, அலெக்ஸ் உட்பட பலர் நடிக்கின்றனர்.

கதாநாயகிகள் தேர்வு நடந்து வருகின்றது.

நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தயாராகும் இப்படத்தை பிரபல இயக்குநர்கள் பலரிடம் உதவியாளராகப் பணியாற்றிய ஏ.ஆர்.எஸ்.ஆனந்தன் என்ற புதியவர் இயக்குகிறார்.



மம்முட்டி-மீனா
படம்: கமிஷனர் ஈஸ்வரபாண்டியன்

## முரளி-மீனா இணையும் 'லவ்வர்ஸ்'

தெலுங்கில் வெற்றி பெற்ற கதை ஒன்றை வாங்கித் தமிழில் எடுக்கிறார் புதிய இயக்குநரான ரவி கேசாமி. எஸ்.தாணு, ஜி.சேகரன் ஆகியோரிடம் உதவியாளராக இருந்த இவர் இயக்கும் இந்தப் படத்திற்கு 'லவ்வர்ஸ்' என்று பெயரிட்டுள்ளார்.

இதில் முரளி, மீனா ஜோடியாக நடிக்கிறார்கள். மற்றும் மணிவண்ணன், வடிவேலு, மனோரமா, வெண்ணிற ஆடை மூர்த்தி, ராம்ஜி, யுகேந்திரன் ஆகியோரும் நடிக்கிறார்கள்.

வாலியின் பாடல்களுக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். திரைக்கதை-இயக்கம் ரவி கேசாமி.

## மினிசினி

- கமல தற்போது நடித்து வரும் 'பம்மல் கே.சம்பந்தம்' படத்தை அடுத்து கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும் படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்திற்கு 'நரன்' என்று பெயரிடப்பட்டுள்ளது.
- தொழிலதிபர் ஒருவரைக் கைப்பிடித்த கௌதமி இப்போது அவரைக் கைவிட்டு விட்டு படங்களில் நடிக்க ஆரம்பித்துள்ளார். 'தமிழன்' படத்தில் இவர் விஜய்க்கு அம்மாவாக நடிக்கிறார்.
- அண்மையில் வெளியாகி தோல்விப்பட வரிசையில் சேர்ந்திருக்கும் 'மாயன்' படத்தை இயக்கி நடித்த நாசர் அடுத்து மோகன்லால்-சிம்ரான் நடிக்க 'தீம்தரிகிட' என்ற படத்தை இயக்கவுள்ளார்.
- பிரபுதேவா ஜோடியாக 'மனதைத் திருடி விட்டாய்' படத்தில் அறிமுகமாகும் காயத்ரி ஜெயராம், 'சார்லி சாப்ளின்' படத்திலும் பிரபுதேவா ஜோடியாக ஒப்பந்தம் செய்யப்பட்டார். இப்போது இதில் காயத்ரி ஜெயராம் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக காயத்ரி ரகுராம் சேர்க்கிறார்.
- சசி இயக்கத்தில் ஸ்ரீகாந்த்-பூமிகா ஜோடியாக நடிக்கும் 'ரோஜாக் கூட்டம்' படத்தில் சிறிய வேடமொன்றில் நடிக்கிறார் ராதிகா.
- தெலுங்கில் வெற்றிகரமாக ஓடிய 'ராஷ்ட்ரீய கீதம்' என்ற படம் தமிழில் 'ஆர்யா ஐ.பி.எஸ்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. இதில் சாய்குமார்-சொர்ணா ஜோடியாக நடித்துள்ளனர்.
- விக்ரம் நடித்த 'தில்' வெற்றிப்படத்தை இயக்கிய தரணி அடுத்து '12பி' ஷாம் நடிக்கும் படத்தை இயக்கவுள்ளார். இப்படத்தை 'குஷி' படத்தைத் தயாரித்த ஏ.எம்.ரத்னம் தயாரிக்கிறார்.
- விஜயகாந்த் நடிக்கும் 'ராஜ்ஜியம்' படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்க வைக்க இந்தி நடிகை ராணி முகர்ஜியை அணுகியுள்ளார் படத்தின் இயக்குநர் மனோஜ்குமார்.

முகப்பில் // அஜித்-ஜோதிகா



ஸ்ரீகாந்த்-பூமிகா
படம்: ரோஜாக் கூட்டம்

## ஆசை

தமிழில் அதிகப் படங்களில் நடிக்க வேண்டும் என்ற ஆசையில் கௌரவ வேடம், துண்டு துக்கடா வேடம் என்று எந்த வேடமென்றாலும் இழுத்துப் போட்டுக் கொண்டு நடித்து வருகிறார் பிரதியுஷா.



## அவர் தான் இவர்

விஜய் கதாநாயகனாக [illegible] பிரிவதில்லை' என்ற பட[illegible] புதிய இயக்குநர் ஒருவர் [illegible] களுக்கு முன் ஓர் அறிவி[illegible]
ஏனோ அந்த அறிவி[illegible] அந்த செந்தில்தான் [illegible] இயக்கி வருகிறார்.

## காதோடு சொல்லுகிறோம்

**த**மிழில் கஷ்டப்பட்டு முன்னணிக்கு வந்திருக்கும் கன்னக்குழி நடிகையான சிந்துபாத்தின் காதலி பெயரைக் கொண்டவரை, தமது காதலியாக்கி விட, பலர் காதல் அம்புடன் வளைய வருகிறார்களாம். தமிழ்ப் படங்களில் பிஸியாக நடித்து வரும் இந்த நடிகை இந்தத் தொல்லையில் இருந்து தப்பிக்க ஓய்வு கிடைத்தால் பட்டென்று சொந்த ஊருக்குப் பறந்து விடுவாராம்.

**கா**ந்தமான கறுப்பு நடிகரின் மூன்றெழுத்துப்படத்தில் தான் மட்டும் தான் தனிக்கதாநாயகி என்று நினைத்திருந் 'சௌந்தர' நடிகை இப்போது கோபத்தின் உச்சத்தில் இருக்கிறாராம். காரணம், படத்தில் இன்னொரு ஐந்தெழுத் நடிகையைப் 'பிரத்)தியேகமாக நுழைத்து தனக்கு வரவேண்டிய சில பாடல் காட்சிகளையும் இந் நடிகையை வைத்து எடுத்து விட்டதுதானாம்.

**ம**லையாளப் படவுலகின் மூன்றெழுத்து 'செக்ஸ் குயின்' பலான படங்களின் வசூ சக்கரவர்த்தினியாகத் திகழ்ந்து வருகிறார். உடம்பைக் காட்டி நடித்து நடித்து போரடித்து விட்டதாகக் கூறிவரும் இந்த நடிகை, நடிப்புக்கு முழுக்கு போட்டு விட்டு திருமணம் செய்து கொள்ளப் போகிறாராம். இதனா புதிதாக வரும் எந்தவொரு 'வாய்ப்பை'யும் உடனே மறுத் விடுகிறாராம்.


பிரசாந்த்-ரிங்கி
படம்: மஜ்னு

**க**றுப்புக் கலரை விரும்பும் 'மா' நடிகை அறிமுகப்படத்தில் அப்பட நாயகனுடன் ஏற்பட் காதலால், திரையுலக வாழ்க்கையைக் கோட்டை வி டார். பின் காதலரும் கைவிட, மறுபடி திரையுலகி இடம்பெற முயற்சித்தார். இந்த நடிகைக்கு மூன்றெ ழுத்துக் கறுப்பு நடிகர் ஆதரவுக் கரம் நீட்ட, ஏனோ அதை மறுத்த நடிகை, தமிழ்த்திரையுலகைப் புறக்கணித் விட்டுத் தெலுங்குதேசத்தில் 'திறமை' காட்ட முயற்சித் வருகிறாராம்.

## மும்தாஜ் ரசிகன்

தமிழ்த் திரையுலகில் கதாநாயகர்களுக்காகத் தனிப் பத்திரிகை வருவது சகஜமான ஒன்று. ரஜினி, கமல், விஜயகாந்த், பிரபு விஜய், அஜித் போன்ற ஹீரோக்களுக்காக சில பத்திரிகைக ஆரம்பிக்கப்பட்டன. சில நின்றுவிட, சில தொடர்ந்தும் வருகின்றன.

தமிழ்த் திரையுலகில் முதல் முறையாக நடிகை ஒருவருக்காக பிரத்தியேகமாக வரும் பத்திரிகை என்ற பெருமை மும்தாஜிற்கு கிடைத்திருக்கிறது. 'மும்தாஜ் ரசிகன்' என்ற பெயரில் இவருக்கா பத்திரிகை ஒன்று வருகிறது.

## சோனியாவுடன் விஜய் நடனம்

மணிரத்னத்தின் 'அலைபாயுதே' படத்தில் இடம்பெற்ற 'செப்டெம்ப மாதம்..' பாடலுக்கு நடனமாடிய மும்பை அழகி சோனியா, மணிரத்னத்தின் உதவியாளர் அழகப்பெருமாள் இயக்கும் 'உதயா' படத்தில் விஜயுடன் இணைந்து ஒரு பாடலுக்கு நடனமாடியுள்ளார்.

'திருவல்லிக் கேணி ராணி
தெரியாதா எங்க பாணி
மனசெல்லாம் சுத்த வெள்ளை
அதனால இல்ல தொல்லை...'

என்று கங்கை அமரன் எழுதிய பாடலுக்கு ரஹ்மான் இசையமைத்துள்ளார். இந்தப் பாடலுக்கு சோனியா குலுக்கல் நடனமாடியுள்ளார்.

## பெரியாராக வேலு

தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை வைத்து ஆங்கிலப் படம் ஒன்றை இயக்கவிருக்கும் இயக்குநரும் ஒளிப்பதிவாளருமான வேலு பிரபாகரன். இப்போது சொந்தமாகப் படமொன்றைத் தயாரிக்கிறார்.

'என் மக்கள்' என்று பெயரிடப்பட்டிருக்கும் இப்படத்தில் நாசர், ரகுவரன், ரோஜா உட்பட பலர் நடிக்கின்றனர். வேலு பிரபாகரனின் நண்பரான அருண்மொழி என்பவர் இயக்கும் இப்படத்தில் தந்தை பெரியார் வேடத்தில் நடிக்கவுள்ளார் வேலு.

## மீண்டும் தொடங்கிய 'பஞ்சு' படப்பிடிப்பு

விவேக் கதாநாயகனாக நடிக்க தொடங்கப்பட்ட 'பஞ்சு' படத்தின் படப்பிடிப்புக்கள் சில நாட்கள் நடந்த பின் நிறுத்தப்பட்டிருந்தன. இப்போது மீண்டும் இப்படத்தின் படப்பிடிப்புக்கள் தொடங்கப்பட்டுள்ளன. விவேக் கதாநாயகனாக நடிக்கும் இதில் காவேரி, மணிவண்ணன், ரகுவரன், விஜயகுமார், வெண்ணிற ஆடை மூர்த்தி, டெல்லி கணேஷ், ஸ்ரீவித்யா, வையாபுரி, பாலாஜி, அஞ்சு, சந்தியா உட்பட பலர் நடிக்கின்றனர். இப்படத்தின் திரைக் கதை அமைத்து இயக்குகிறார் அண்ணா கண்ணா தாசன்.

## வாய்ப்பு

ராசியில்லாத நடிகை என்று முத்திரை குத்தப்பட்ட சாக்ஷிக்கு தமிழில் வாய்ப்புக்கள் வந்து கொண்டுதான் உள்ளன. 'வாஞ்சிநாதன்', 'வேதம்' ஆகிய படங்களை அடுத்து 'மானஸ்தன்' படத்தில் நடித்து வருகிறார் சாக்ஷி.


திவ்யா உன்னி
படம்: மிஸ்டர் நாரதர்

## அசத்தல் வில்லன்

விஜயகாந்தின் படங்களில் ஆஜானுபாகுவான தோற்றத்தில் அசத்தல்வில்லன்கள் வந்து அதிரடி சண்டை போடுவது வழக்கம். தீபாவளி வெளியீடான 'தவசி' படத்திலும் அசத்தலான வில்லன் அறிமுகமாகியுள்ளார்.

ஜீவி என்ற இந்த வில்லன் தெலுங்குப் படவுலகைச் சேர்ந்தவர். 50க்கும் மேற்பட்ட தெலுங்குப் படங்களில் வில்லனாக நடித்திருக்கும் இவர் 'தவசி' மூலம் தமிழில் கால் பதித்துள்ளார்.

## புதுப்புயல்

சிம்ரான், பூமிகா ஆகியோரை அடுத்து பஞ்சாப்பில் இருந்து வந்திருக்கும் புதுப் புயல் ஆஷிமா. பிரபுதேவா ஜோடியாக 'அலாவுதீன்' படத்தில் ஜோடியாக நடிக்கத்தான் தமிழகத்தில் மையம் கொள்கிறது இந்தப் புதுப்புயல்.

'மிஸ்.சண்டிக்கார்' அழகியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஆஷிமா, சிரஞ்சீவி ஜோடியாக தெலுங்குப்படம் ஒன்றில் நாயகியாக நடித்துள்ளார்.

## லைலாவுடன் காதலா?


இயக்குநர்கள் நடிகைகளைக் காதலிக்கும் பட்டியலில் கடைசியாக 'சேது'பாலா-லைலா விவகாரம் சூட்டைக் கிளப்பி விட்டது.

"லைலாவோ அழகைப்பாருங்க. என்னோட மூஞ்சியப்பாருங்க. இதெல்லாம் நடக்கிற கதையா? அவா ஒரு நடிகை நான் ஒரு இயக்குநர். எங்கள் உறவு 'நந்தா' படத்தோடு முடிந்தது. மற்றப்படி ஒன்றுமில்லை" என்று புன்னகையுடன் மறுத்து வருகிறார் பாலா.

நடிக்க 'இனி
தை செந்தில் என்ற
இயக்குவதாக சில வருடங்
ய வெளியானது.
அப்படியே தொடராமல் நின்று விட்டது.
போது பிரகாஷ்ராஜ் நடிக்கும் 'தயா' படத்தை



ரிச்சா பலோட்
படம்: அல்லி அர்ஜுனா

# என்ன செய்யப்போகிறார்?



அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் பதவிக்கு வந்த பின் அவருக்கு ஆதரவை விட அதிருப்தியே அதிகம் இருந்தது.
இப்போது ஆப்கான் யுத்தத்தினால் புஷ்ஷிற்கு அமெரிக்காவில் கொஞ்சம் ஆதரவு கூடியிருக்கிறது. இருப்பினும் யுத்தத்தை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டுவர கடும் பிரயத்தனம் எடுத்து வருகிறார்.
புஷ், ஆப்கான் யுத்தத்தில் தோற்றால் அதன் பின் என்ன செய்வார் என்று வெப்தளம் ஒன்றில் வெளியான படம் இது.

## பேனா நண்பர்கள்



பெயர்: கே.சுதர்சன்
வயது: 26
முகவரி: P.O.Box: 70-1135 Antelias, Lebanon.
பொழுது போக்கு: பத்திரிகை.



பெயர்: கே.ஆயிஷா
வயது: 25
முகவரி: P.O.Box: 10644, Makkah, K.S.A.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனாநட்பு.



பெயர்: என்.நாஸர்
வயது: 22
முகவரி: P.O.Box: 2023 Ajman, U.A.E.
பொழுது போக்கு: பேனாநட்பு.

## ஊமையாகிப் போனவன்...?

சிதைந்த இதயத்தில்
சிதவல்களுக்கிடையில்
கட்டுண்டு போன
உனது நினைவுகள்
ரணமிக்க வலியினையே
மீதமாக்கிச் செல்கின்றது?
***
உனக்குளெழுந்த
அத்தனை யுணர்வுகளையும்
கொஞ்சமும் மீதமில்லாமல்
புதைத்து விட்டு
ஓடி ஒளிந்த போதெல்லாம்
விழியுடைத்துப் பாய்ந்த
துயரருவிதான்
களமமைத்துக் கவிதை பாடின!
***
ஆலம் விழுதுகளாக
துயரங்கள் வேரூன்றி,
விடை தேடியும்
முடியாத வாழ்க்கைக்கு
இன்னுமேன்
உரமூன்றிச் செல்கின்றாய்?
***
பாதி வாழ்க்கையின்
சுமைகளை
சுமக்க முடியாத-என்
நெஞ்சிலின்னுமேன்
உன் வாழ்த்திதழினை,
நெடுந் துயரினை
கொட்டிவிட்டுச் செல்கின்றாய்?
***
மலர் மாலையணிந்த
உனது
வாழ்க்கையின் நந்தவனத்திற்குள்,
பிரிக்க முடியாத
துயரங்களை,
அர்த்தமிழந்த தடயங்களை,
***
சேற்றினுள் புதையுண்ட
இலட்சியங்களையெல்லாம்
வாரிச் சுருட்டிக் கொண்டு
சம்மதமில்லாத,
என்பாதமறியாத
புதிய தேசமொன்றிற்குள்
அவகாசமில்லாமல்
பயணிக்கச் சொல்கின்றாய்!
***
ஏமாற்றமாகி
ஏக்கங்கள் கூடிய
மீதமான கொஞ்ச வாழ்க்கைக்கு
மரணத்தின் தாலாட்டுதல்கள்
மண மேடையமைக்கின்றன!
***
விடியாத இரவுகளில்
தவமிருந்து
கட்டி யெழுப்பிய
பாசமென்ற
புதிய அத்தியாயம்
சிதைக்கப்படுமுன்னர்
சிறகொடிந்து
பறக்க முடியாது
ஊமையாகிப் போனவன்!
***
சிதைந்த இதயத்தில்
சிதவல்களுக்கிடையில்
கட்டுண்டு போன
உனது நினைவுகள்
ரணமிக்க வலியினையே
மீதமாக்கிச் செல்கின்றது!

முகம்மது ஹாரித்-
அட்டாளைச்சேனை-11.

## எங்களுக்கே நீங்கள் ஓட்டுப்போட வேண்டும்!

கடந்த காலங்களில்
உங்களுக்காக நாங்கள்
என்ன செய்தோமென்று
எங்களுக்கே தெரியாது
என்பதை
சிந்திக்காமல்
எங்களுக்கே நீங்கள்
ஓட்டுப் போட வேண்டும்!
***
அன்புள்ள மகாஜனங்களே!
சொகுசு கார்களில்
நாங்கள் வலம் வர
இடம் பெயர்ந்து
நீங்கள் ஓடித் திரிய
ஆடம்பர பங்களாவில்
நாங்கள் வாழ
அகதி முகாமிலே நீங்கள்
காலம் கழிக்க
இதைப் பற்றியெல்லாம்
கவலைப்படாத
எங்களுக்கே நீங்கள்
ஓட்டுப் போட வேண்டும்!
***
உங்கள் நலனன்றி
ஓட்டுக்காகவே
கூட்டுச் சேர்ந்த
எங்களுக்கே நீங்கள்
ஓட்டுப் போட வேண்டும்!

த. நகுலேஸ்வரன்-கல்லடி-
மட்டக்களப்பு.

## உன்னோடுதான்...

என்
கனவுகளும்
கவிதைகளும்
உன்னோடுதான்...
***
நிகழ்கால தேடலில்
காசு பார்க்க,
கடல் கடந்ததில்
தொலைத்தது,
காதலும்
காமமும்தான்...
***
சாலையில்
பாவைகள் பார்த்தால்,
மௌனமாய்,
மனதுக்குள் ஒரு
சலனம்...
***
உரிமைகள்
ஒடுக்கி
அவமானம் தின்று
நித்தம் கழியும்
நாட்களில்...
***
ஓடி ஓடி களைத்து
ஓய்ந்திருக்கும்
போது
விழித்திருக்கும்
உணர்வுகளில்...
***
என்,
கனவுகளும்
கவிதைகளும்
உன்னோடுதான்...

ஸ்ரீ கலா-கத்தார்.

## அறியவே இல்லையா

அலைபாயும் உன்
கருங்கூந்தல் கண்டு
அலைபாயும் என்
மனதை நீ அறியாயோ...
***
நித்தம் நித்தம்
உனை நினைந்து
மணிகள் நிமிடங்களாக
நிமிடங்கள் வினாடிகளாகக்
கரைந்து விட
உன் நினைவில்நான்
தத்தளிக்கிறேன்!
***
உனைக்காண்கையில்
என்னிதயம்
வேகமாகத் துடிப்பதைக்
கண்டுமேன்
அறியாதவளென நீ
பாவனை செய்கிறாய்!
***
பாவனையே செய்கிறாயா
அன்றேல்
அறியவேதான்
இல்லையா!!
***

என் சுந்தா-
கிழக்குவளாகம்.

## மரணத்தை விதைத்தவள் நீ!

என்னை சுவாசித்திருந்தவளே!
நீ சம்மதித்துவிட்டாய்
அவனுக்கென்று
நான்-உன்
நினைவு நெருப்பை
அணிந்துகொண்டு
அவஸ்தைப்படுகிறேன்.
***
நீ ஏன்
அக்கரைப்பச்சைக்கு
ஆசை கொண்டாய்?
ஓ!.. தூரத்துப்பச்சை
கண்ணுக்கு குளிர்ச்சியல்லோ!
***
ஒவ்வொரு நாளுமே
உன் ஞாபகத்தலையணையில்
தூங்குவதால்
தூக்கம் எனக்கில்லை
***
இப்படியே...
ஒவ்வொரு பொழுதுகளிலும்
ஒடிந்து விழும் என்னை
தூக்கி நிமிர்த்தக்கூட
ஒரு துணையுமில்லாமல் நான்.
***
"யாருக்குச் சொல்லி ஆற??
பூக்களையே புகழ்பாடும்
சமூகத்தில்,
வேர்களின் வேதனை
விளங்கவா செய்யும்?"
***
நீ-என் வாழ்க்கை வயலில்
விதைத்துவிட்டு போய்விட்டாய்
மரணவிதைகளை
அதைத்தான் இப்போது
அறுவடை
செய்துகொண்டிருக்கிறேன்
அழுதபடி!
***
ஓ பெண்ணே!
உன்னால் புரிகிறது
காதல் என்பது
மரணத்தின் மறுவடிவமென்று

என். தனுசுஜன்-
யாழ். சண்டிலிப்பாய்.

## தேன் கிண்ணம்

## தனித்தன்மையே வெற்றி




நம்மைப் போலவே மனிதனாக இருப்பது, நாம் ஒருவராகத்தான் இருக்க முடியும். நாம் ஒவ்வொருவரும் படைப்பின் பெருமையாக விளங்குகிறோம். நாம், நாமாகவே இருக்க வேண்டுமே தவிர நமக்குள்ளே இருக்கும் இயல்பான திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டுமே தவிர அடுத்தவரைப் போல இருக்க ஆசைப்படுவது சரியான முறையல்ல!

சார்லி சாப்ளின் முதல் முறையாக நடிக்கச் சென்றபோது, அன்றைய நாளில் புகழ்பெற்று விளங்கிய ஒரு நகைச்சுவை நடிகர் மாதிரியே நடிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்.

அவரும் அதன்படியே நடித்தார். வெற்றி பெற முடியவில்லை. காப்பி அடிப்பது போலவே இருந்தது சார்லி சாப்ளினுக்கு உடனே யோசித்தார்.

தன்னுடைய இயல்புக்கு ஏற்றபடி இயல்பாகவே நடிக்க ஆரம்பித்தார். வெற்றி பெற்றார். சிறந்த நகைச் சுவை நடிகர் என்று உலகப் புகழ் பெற்றார்.

இன்டர்வியூக்குப் போகும் பலர் வெற்றி பெறமுடியாமல் போவதற்குக் காரணம் தங்களுக்குத் தெரிந்தபதிலைச் சொல்லாமல் கேள்வி கேட்பவர்களுக்கு பிடித்தமான பதிலைக் கூறுவதுதான்.

நம்முடைய உண்மையான இயல்பை மறைத்து செயற்கையானத் தோற்றத்தைத் அளிப்பது என்றைக்கும் வெற்றியைத் தராது. போலியானத் தோற்றம் ஒருநாள் வெளிப்பட்டு விடும்.

நம்முடைய இயல்பை உணர்ந்து உள்ளே புதைந்து கிடக்கும் ஆற்றலை உணர்ந்து அதனை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் நம்மால் உலகத்திற்கு ஒரு நல்ல திறமையாளன் கிடைக்க முடியும்.

எமர்சன் கூறுகிறார் "உன்னிடம் மறைந்து கிடக்கும் திறமை, இயற்கை உனக்கு மட்டுமே அளித்த வரப்பிரசாதம். அது என்ன என்பது நீயே முயற்சி செய்து வெளியே கொண்டுவர வேண்டும்."

நம்மை நாமே அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். மற்றவர் பாணியை நம் மீது திணித்துக் கொள்வதில் ஆர்வம் காட்ட வேண்டாம்.

ஒவ்வொருவருக்கும் தனிக்குணம், திறமை, ஆற்றல், ஊக்கம் தோற்றம் என்பது இயற்கையால் அளிக்கப்பட்டவை. அதனை உணர்ந்து செயல்படுவது தான் வெற்றிக்கு ஆதாரமாகும். உலகில் பெயர் பெற்ற தோல் அறுவ சிகிச்சை நிபுணர் டாக்டர் ஜேம்ஸ் கார்டன் சொல்வதைக் கவனிக்க வேண்டும்.

"எவன் ஒருவன் குணத்திலும்,தோற்றத்திலும், தன்னிலும் மாறான ஒருவனைப் போல ஆக வேண்டும் என்று ஆசைப்படுகிறானோ அவனைப் போல துரதிருஷ்டக்காரன் உலகத்தில் இருக்க முடியாது."

மற்றவர்களைப் பார்த்த உடனேயே நம்மிடம் இல்லாத ஒன்றை இருப்பதாக நினைத்துக் கொள்ளும் தன்மையோ, அல்லது அப்படி ஆகிவிட வேண்டும் என்ற நினைப்போ இருந்தால்-

உடனடியாக அதனைக் களைந்து விட வேண்டும். நம்முடைய திறமையை நாம் அறிந்து கொள்ளாத படியினால் பிறரைப் பார்த்து மோகம் கொள்கிறோம்.

நம்மை நாம் நன்றாக உணர்ந்து கொண்டு விட்டால் மற்றவர்களைப் பற்றிய எண்ணமோ, எண்ணிப் பார்க்கவோ அவசியமே ஏற்படாது.

நம்மை நாமே அடையாளம் கண்டு திருப்தி அடைய வேண்டும். நம் கையில் உள்ளதைக் கொண்டு நல்லதைச் செய்யப் பழகுவது மிகவும் அவசியமாகும். நம்முடைய ஊக்கத்தின் படியே செயல்பட்டு, தனித் தன்மையுடன் வெற்றி பெறுவோம்.

## இந்தவாரம் உங்கள் பலன்

**18.11.2001 தொடங்கி 24.11.2001வரை**

**மேடம்:**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில்சிறப்பும் காரியானுகூலமும் இடம் பெறும் பொருள்வரவு சிறந்து விளங்கும். பெரியோர்கள் அனுகூலம் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.
அதிஷ்ட நாள் : புதன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

**இடபம்:**
(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருக சீரிடத்து முன்னரை,) தொழில் கஷ்டங்கள் நிவர்த்தியாகும். காரியச் சிறப்புடன் பொருள் வரவுண்டாகும். உத்தியோகஸ்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள் : திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 05.

**மிதுனம்:**
(மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை புனர்பூசத்து முன்முக்கால்,) எடுத்த காரியங்களில் சிறு தடைகள் ஏற்படும். பொருள் வரவு, காரியானுகூலம் சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் உள்ளோர் விழிப்புடன் நடந்து கொள்வது நல்லது. மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் எதிலும் கவனமுடன் செயற்படுவது நல்லது.
அதிஷ்ட நாள் : வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 03.

**கர்க்கடகம்:**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழில் கஷ்டங்கள் நீங்கும். பெரியோர்களின் உதவியும் ஒத்தாசையும் கிடைக்கும். பணவரவு சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கஷ்டநிலை நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள் : வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 06.

**சிங்கம்:**
(மகம், பூரம் உத்தரத்து முதற்கால்) தொழிலில் நன்னிலை தோன்றும். பெரியோர்கள் உதவியாக இருப்பர். பொருள்வரவு சுமாராக அமையும். உத்தியோகஸ்தர்கள் மறைமுக எதிர்ப்புக்களுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள் : திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 07.

**கன்னி:**
(உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) காரியங்களில் தேக்க நிலையும், பொருள் வரவில் மந்தமும் தோன்றும். வெளியிடப் பிரயாணங்களில் அவதானத்துடன் நடந்து கொள்ளவும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபடைவர்.
அதிஷ்ட நாள் : செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம் : 04.

### சோதிட மாமணி தில்லை

**துலாம்:**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்,) தொழிலில் சிறு பிரச்சனைகள் தோன்றும். உடல் நிலையில் அவதானத்துடன் செயற்படவும். குடும்பத்தில் சிறு பிரச்சனைக்கு இடமுண்டு. உத்தியோகத்தில் உள்ளோர் தமது கருமத்தில் கவனமுடன் செயற்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் சிறப்புண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபடைவர்.
அதிஷ்ட நாள் : வியாழன்.
அதிஷ்ட இலக்கம் : 05.

**விருட்சிகம்:**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம் கேட்டை,) தொழிலில் நன்நிலையும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் உண்டாகும். பொருள்வரவு சிறந்து விளங்கும். உத்தியோக ரீதியாக இருந்து வந்த எதிர்ப்புக்கள் நீங்கும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபடைவர்.
அதிஷ்ட நாள் : வியாழன்.
அதிஷ்ட இலக்கம் : 03.

### கிரக நிலை

| | |
|---|---|
| விருட்சிகம் | - சூரியன் |
| தனு | - கேது |
| மகரம் | - செவ்வாய் |
| இடபம் | - சனி |
| மிதுனம் | - வியாழன், இராகு. |
| துலாம் | - புதன், வெள்ளி. |

சந்திரன், தனு, மகரம், கும்பம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**தனு:**
மூலம், பூராடம், உத்தாரடத்து முதற்கால், எதிர்பார்த்த விடயங்களில் நன்னிலை தோன்றும். பொருள்வரவு குடும்ப சுகம் சிறந்து விளங்கும். உத்தியோக ரீதியாக நன்மைகள் சேரும். மாணவர்கள் பரீட்சைகளில் நற்சிறப்பு பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள் : புதன்.
அதிஷ்ட இலக்கம் : 01.

**மகரம்:**
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை,) தொழில் நிலையில் நன்மையும் குடும்பத்தில் மகிழ்ச்சியும் உண்டாகும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளாமலிருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் உயர்வு கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபடைவர்.
அதிஷ்ட நாள் : செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம் : 02.

**கும்பம்:**
அவிட்டத்துப் பின்னரை, சதயம் பூரட்டாதி முன்முக்கால், தொழிலில் முன்னேற்றமும், பொருளாதார நன்மையும் உண்டாகும். எதிர்பார்த்த கருமங்கள் வெற்றியளிக்கும். உத்தியோகஸ்தர்கள் பொறுமையுடன் நடந்து கொள்ளவும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி தரும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள் : திங்கள்.
அதிஷ்ட இலக்கம் : 04.

**மீனம்:**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி) தொழில் நிலையில் அலைச்சலும், பொருள் வரவில் மந்தமும் உண்டாகும். குடும்பத்தில் சிறிது பிரச்சனைகள் தோன்றும். உத்தியோகஸ்தர்கள் விழிப்புடனும், பொறுமையுடனும் நடந்து கொள்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 04.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## அழகுக்கு என்ன குறை?



★ குளிக்கப் போகும் முன் தினமும் கால் பெருவிரலில் கடுகு எண்ணெயைத் தேய்த்துக் குளித்து வந்தால் முதுமையில் கண்ணில் வரும் 'காட்ராக்ட்' என்னும் நோய் வராது. அத்தோடு கண்ணாடி அணிய வேண்டிய அவசியமும் வராது.

★ ஒரு மேசைக்கரண்டி தேன், முட்டை மற்றும் ஒரு தேக்கரண்டி கிளிசரினைக் கலந்து தடிமனான தோல்களில் தேய்த்து வந்தால் உடல் மிருதுவாகவும், பளபளப்பாகவும் மாறும்.

★ முகம் பளபளப்பாக மாற வெள்ளரிக்காய், ரோஸ் வோட்டர் மற்றும் தேன் கலந்து தேய்த்து வந்தால் பலன் கிடைக்கும்.

★ ஏதாவதொரு விழாவுக்கு போகிறீர்களா? பிறரிடம் பேசும்போது வாயில் இருந்து கம... கம... வென மணம்வீச வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களா? எலுமிச்சம் பழச்சாற்றுடன் உப்புக் கலந்து சிறிது வெந்நீர் கலந்து வாயை அலம்புங்கள்?

★ தோலில் வரும் நோய்களைத் தடுக்க, தினமும் குளிக்கும் தண்ணீரில் கொஞ்சம் உப்பு மற்றும் ஏழு அல்லது எட்டு துளி தோடம்பழச்சாறு கலந்து குளிக்க வேண்டும்.

★ தலைமுடி கொட்டுகிறதா? தேங்காய் எண்ணெயைக் கொஞ்சம் சூடுபடுத்தி தலையில் தேய்த்து அரை மணிநேரம் இருக்க வேண்டும். பிறகு குளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் தலைமுடி கொட்டாது; நன்கு வளரும்.

★ கண்ணில் கருவளையமா? நான்கு தேக்கரண்டி பாலை நன்றாகக் காய்ச்சி ஒரு பருத்தித் துணியில் அது குளிர்ந்ததும் அதைக் கண்ணின் மேல் வைத்திருக்க வேண்டும். படுக்கைக்குச் செல்லும்முன் தினமும் இப்படி 15 நிமிடம் செய்து வந்தால் பலன் கிடைக்கும்.

★ முகப்பருவை ஒழிக்கத் துடிக்கிறீர்களா? சந்தனப் பொடியையும் சில துளி எலுமிச்சம் பழச் சாற்றையும் கலந்து இரவு தூங்கச் செல்லுமுன் தேய்த்து வந்தால் முகப்பருவை ஒழித்துவிடலாம்.

★ வெள்ளரிக்காயைச் சாறாக்கி ஒரு தேக்கரண்டி எடுத்து, அதனுடன் ஒரு தேக்கரண்டி அளவு எலுமிச்சம் பழச் சாற்றையும் கலந்து தேயுங்கள் முகம் பளிச்சென புத்துணர்ச்சி பெறும்.

## உங்கள் குழந்தை ஆரோக்கியமாக வளர...

• குழந்தை பிறந்தது முதல் ஒரு வயது வரை ஒவ்வொரு மாதமும் எடை பார்க்க வேண்டும். இரண்டாவது மூன்றாவது வயதில் ஒரு மாதம் விட்டு மறு மாதமாவது எடை பார்க்க வேண்டும். தொடர்ந்து இரண்டு மாதங்கள் எடை அதிகரிக்காமலிருந்தால் அக்குழந்தைக்கு ஏதாவது கோளாறு இருக்கிறது என்று பொருள்.

• முதல் நான்கு முதல் ஆறு மாதங்கள் வரை குழந்தைக்குத் தாய்ப்பால் தான் சிறந்த உணவு. எனவே தாய்ப்பாலைத் தாராளமாகக் கொடுங்கள்.

• நான்கைந்து மாதங்களுக்குப் பிறகு தாய்ப்பாலோடு துணை உணவுகளும் தரலாம்.

• மூன்று வயதாகும்வரை, ஒரு நாளைக்கு ஐந்தாறு முறை உணவு வழங்குங்கள்.

• மூன்று வயது வரை எப்போதும் கொடுக்கும் உணவோடு சிறிதளவு கொழுப்பு, நெய் ஆகியவற்றை தரலாம். எண்ணெயில் செய்யப்பட்ட உணவு தரலாம்.

• விட்டமின் 'ஏ' நிறைந்துள்ள உணவுகளைத் தவறாது அளிக்க வேண்டும்.

• குழந்தை நோய்வாய்ப்பட்டால், சத்து அதிகமான உணவு வழங்கி ஈடுசெய்ய வேண்டும்.

• குழந்தைக்கு உணவு மட்டுமே போதாது.கொஞ்சுதல்,உரையாடுதல், விளையாடுதல் போன்ற செயல்களால் வெளிப்படுத்தப்படும் உங்கள் அரவணைப்பும் தேவை. மனவளர்ச்சிக்கும் உடல் வளர்ச்சிக்கும் அது பெரிதும் தேவை. எனவே, குழந்தை மீது பாசமழை பொழியுங்கள்.


## பட்டுச் சேலை பரிசுப் போட்டி



**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** KK

பெயர்:..............................
முகவரி:..............................
..............................
தொழில்:..............................
கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 24-11-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? மன்னார் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

திருமதி அ.அ. ஞானமலர்
புகையிரத நிலைய வீதி, மன்னார்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


"அதெல்லாம் வேண்டாம்... ரசாபாசமா போய்டும்... பாரு அனி, எனக்கு இதில் தனி அபிப்ராயம் எதும் இல்லை. இது உன் வாழ்க்கை.. உன் விருப்பம்... உன்னை நாங்க எந்த விதத்திலேயும் கட்டாயப்படுத்தலை... கேட்டுக்கோ!"

"அம்மா, நீ என்ன சொல்றே?" என்று சட்டென்று கேட்டாள்.

"அம்மா திடுக்கிட்டாள். அப்பாவைப் பார்த்து "அப்பா சொல்றதுதான் நான் சொல்றதும்" என்றாள்.

அனிதா கெஞ்சலாக "அப்பா, அவா ரொம்ப ரொம்ப ரொம்ப பணக்காராப்பா!" என்றாள்.

"தெரியும்.. அதனால நாம ஏன் பயப்படணும்?"

நினைச்சது எல்லாத்தையும் வாங்க முடியறது... அதுக்கு எந்தவித எதிர்பார்ப்போ, முயற்சியோ இல்லாம அந்தக் கணத்திலேயே கிடைச்சுடறதுன்னா அது பயங்கரம் இல்லையாப்பா?"

"நீ என்ன சொல்ற... எதுக்கு இந்த வயசுல தத்துவம் பேசறே?"

"தத்துவம் இல்லைப்பா.. என் வயத்துக்குள்ள ஒரு பயம்!"

"என்ன பயம்?"

"நான் ரொம்ப ரொம்ப துக்கப்படப் போறேன்னு, என்னவோ அடையாளமில்லாம ஒரு பயம்."

"போடி போடி பைத்தியம்! உன் ஜாதகத்தை நீ பொறக்கறப்ப கணிச்சவன் என்ன சொன்னான் தெரியுமா? அவன் சொன்னது எல்லாம் அப்படியே நடக்கறது! இவளால குடும்பத்துக்கே யோக ஜாதகம்னான்... கேட்டுக்கோ, குடும்பத்துக்கே மகா சுபிட்சம்னு எழுதிக் கொடுத்திருக்கான்."

"எல்லா ஜோஸ்யரும் பொறக்கறப்ப அப்படித்தாம்பா எழுதுவா."

"இப்ப என்ன சொல்றே நீ? நான் போன் பண்ணி வேண்டாம்னு சொல்லிடறேன். எனக்கு அதுல தயக்கமே இல்லை" என்றார் சற்று தழைத்த, ஏமாற்றம் தென்படும் குரலில்.

"அனிதா, "இல்லைப்பா நான் கல்யாணம் பண்ணிக்கறேன் அவரை. சம்மதம்னு சொல்லிடுங்கோ!"

"பாரு, நாங்க ஒண்ணும் கட்டாயப் படுத்தலை!"

"இல்லை... நானாத்தான் தீர்மானிச்சது. பத்து பேர் சந்தோஷத்துக்காக ஒருத்தர் துக்கப்படறது பரவாயில்லை."

மகாதேவன் கமலத்தைப் பார்த்து "என்ன சொல்றா இவ? யாருக்குத் துக்கம்? துக்கமாவது...! கோடீஸ்வரன் எல்லாம் அவனுக்குப் பெண் கொடுக்க காத்துண்டிருக்கான்... என்னவோ பிகு பண்ணிக்கறாளே!"

"அப்பா, உங்களை ஒரே ஒரு கேள்வி கேக்கறேன்... இந்த வைரவனுக்கு அத்தனை பணம் இல்லாம அவர் ஒரு வாட்டர் போர்டு கிளார்க்கா இருந்து உங்களை வந்து பெண் கேட்டா இதே பதில் சொல்வீங்களா!"

"அந்த மாதிரி நிலைமை இல்லையே இப்ப?"

"அப்படி இருந்தா என்ன சொல்வீங்க?"

"இல்லாத சிக்கலை எதுக்காக இப்ப யோசிக்கணும்?"

அப்பாவை அவளால் நேராகப் பார்க்க முடிந்தது. அப்பாதான் அவள் பார்வையைத் தவிர்த்தார். ஆனால், உள்ளுக்குள் உற்சாகம் இருந்ததை உணர முடிந்தது.

அம்மா, அனிதாவை வாத்ஸல்யத்துடன் நெற்றி தடவி, "ரொம்ப படிச்சுட்டா பொம்மனாட்டி குழம்பி போய்டுவா... அதுக்காகத்தான் அந்த நாள்ல எங்களுக்கெல்லாம் பத்தாம் கிளாஸோட நிறுத்திட்டா... தாத்தா சித்தூர்ல தாசில்தாரா இருக்கறப்ப அப்பாவுக்கு என்னைக் கொண்டுவந்து காட்டினா... அவரைத்தான் கல்யாணம் பண்ணிக்கோன்னு சொன்னா. பண்ணிண்டேன். நிமிர்ந்து கூட பார்க்கலை..." என்றாள்.

"இப்பகூட அதேதாம்மா, என்ன நான் கொஞ்சம் நிமிர்ந்து பார்த்திருக்கேன். அவ்வளவுதான்!" என்றாள் அனிதா.

அதன் பின் சம்பவங்கள் யாருடைய கட்டுப்பாட்டிலும் இல்லாமல் கனவுச் சக்கரங்களில் அவர்களுக்குச் சம்பந்தமே இல்லாத வேறு தளத்தில் இயங்கின.

முதலில் அவர்கள் வீட்டில் சிமெண்ட் கலர் சீருடையுடன் மெக்கானிக்குகள் வந்து டெலி:.போன் இணைத்தார்கள். இணைத்த அடுத்த கணம் மணி அடித்தது.

"மே ஐ ஸ்பீக் டு அனிதா ப்ளீஸ்? அனிதா, நான் வைரவன்... பாம்பே 'ஸீராக்'லிருந்து பேசறேன். க்ரேட் க்ரேட்... அப்படியே அடுத்த :.ப்ளைட்டைப் படிச்சுட்டு வரேன்.. உனக்கு என்ன வேணும்? சீதள் :.போன் பண்ணுவா, நிச்சயதார்த்தத்துக்கு மட்டும் தனியா ரெண்டு பார்ட்டி ஏற்பாடு பண்ணுவா. நீ என்ன பண்றே... 'ஈவ்ஸ்' னுட்டு என் கம்பெனியிலிருந்து டிரஸ் டிஸைனர் வருவார். அவர்கிட்ட எல்லா அளவும் கொடுத்துடு... அதுக்கப்பறம் எல்லாம் சீதள் சொல்லுவா. அடுத்த வாரம் 'ஹெக்டிக்' காத்தான் இருக்கும்" என்று மூச்சுவிடாமல் பேசினான்.

"யார் பேசறது..?" என்றாள்.

"மைகாட்! வைரவன். உன் காதலன், :.பியான்ஸி, கணவனாகப் போற, உலகத்திலேயே அதிர்ஷ்டமானவன்..."

"சார்... எனக்கு.."

"சார்'ங்காதே... பேர் சொல்லு...."

"மிஸ்டர் வைரவன்..."

"மிஸ்டராவது? வைரவன், வைரு சொல்லு!"

"கல்யாணம் ஆனப்பறம் கூப்பிடறேன் மிஸ்டர் வைரவன். உங்க வேகம் எனக்குப் பழக்கப்பட கொஞ்ச நாளாகும். அதனால ஏதாவது தேவைன்னா உங்களைக் கூப்பிடறோம், என்ன?"


"ஏதாவது பேசேன்..."

மௌனம்.

"ஏதாவது, நான் உன் குரலை கேக்கணும்... எதுத்தாப்பல ஏதாவது புஸ்தகம் இருக்கா.. கவிதைப் புஸ்தகம்!"

"பாட்டனி புஸ்தகம்தான் இருக்கு..."



## நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா

"அதை எடுத்து ஒரு பாரா படியேன். உன் குரலைக் கேக்கணும்... ஒரு முத்தம் தா!"

அந்தக் கெட்ட வார்த்தையின் சரளம் உறுத்தியது.

"அனி! அனி! நான் உன் மேல பைத்தியம்... பைத்தியம்..."

"சரி, வெச்சுரட்டுமா?"

"வெய்ட்! ஏன் என்னை உதறித் தள்ளறே?" என்றான் சற்று அதட்டலுடன்.

அதற்குள் போனை வைத்துவிட்டாள். வைத்ததும் மறுபடி அது அடித்தது. அதை எடுத்து மெக்கானிக்கிடம் கொடுத்துவிட்டு அறைக்கு வெளியே ஓடினாள்.

"அந்தம்மா புறப்பட்டுப் போய்ட்டாங்களே!"

நிச்சயதார்த்தத்துக்கே தங்கத்திலே அச்சடித்து ஆர்.எஸ்.வி.பி. எல்லாம் போட்டு ஒரு கார்டு வந்தது. அந்த கார்டைத் திறந்ததும் அதனுள் ஒரு 'சிப்' 'டிங்கடிக்டங்' என்று பாடியது. சம்பிரதாயம் பார்த்தால் அவர்கள் எல்லாம் வர மகாதேவனின் வீடு இடம் போதாது என்பதால் அவர்களின் சாந்தோம் வீட்டிலேயே வைத்துக் கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

நிச்சயதார்த்தத்துக்கு என்று அனிதாவுக்கு விதவித டிரஸ்கள் தைக்கப்பட்டன. அதற்காக இன்ச் டேப் மாலை போட்டுக்கொண்ட இரண்டு டெய்லர்கள் வந்தார்கள் போன் ஓயாமல் அடித்துக் கொண்டே இருந்தது. அப்பா நாலா திசைகளிலும பேசிக்கொண்டே இருந்தார். வீட்டுக்கு டிஸ்டெம்பர் அடித்தார்கள். வாசலில் ஒரு அம்பாஸடர், ஒரு டாட்டா எஸ்டேட் கார்கள் எப்போதும் நின்றுகொண்டிருந்தன. இட்லி அரைக்கும் இயந்திரம் வந்தது, 'டாய்லெட் செட்', என்று கொண்டு வந்து வைத்தார்கள். 'மேக்கப்-கிட்' என்று கொண்டு வந்து வைத்தார்கள். பிரபல பட்டுப்புடைவைக் கடையிலிருந்து இரண்டு டிரங்க் நிறைய பட்டுப் புடைவைகள் வந்து இறங்க, "இதில் எது வேணுமோ எடுத்துக்கிடச் சொன்னாங்க" என்றார்கள்.

அனிதாவுக்கு அந்த சந்தர்ப்பத்தில் அணிவதற்காக கழுத்தில் 'சோக்கர்' என்று சொல்வார்களே வைரத்தில் அதுவும்... அதற்குப் பொருத்தமாக வைர வளையலும், இருபத்துநாலு காரட் கனமான வளையல்கள் ஒரு டஜனும்... முத்து செட், பவழ செட், எல்லாக் கல்லும் வைத்த செட் என்று நகைக்கடை போல இருந்தது (வாசலில் செக்யூரிட்டி போட்டிருந்தார்கள்) அனிதாவின் வீடு. வைரம் 'A.V.' என்று எழுதப்பட்ட மோதிரம் ஒன்று சிறிய வெல்வெட் டப்பியில் காத்திருந்தது. ஜிம்பு ரூமில் :.பாரின் சாமான்கள் குவிந்தன. 'கரோகே ஸிடிடேப்' எல்லாம் வைத்த ஜப்பானிய ஆடியோ சிஸ்டம், வெளி நாட்டு மல்ட்டி சிஸ்டம், வி.ஸி.ஆர்.. டி.வி. என அந்தச் சிறிய வீட்டில் சாமான்கள் குவிந்தன. நடக்க இடம் பண்ண வேண்டியிருந்தது. சுகந்தி அவற்றைப் பார்த்துப் பார்த்து எடுத்து வைப்பதிலேயே அம்மாவுடன் பிஸியாக இருந்தாள். புதிய உடைகளில்.. புதிய சூழ் நிலையில்... அவர்கள் எல்லோருமே அந்நியர்கள் போல இருந்தார்கள்.

ஒருவன் சின்னதாக ஒரு கூடை கொண்டு வந்து வைத்தான்.

"அனி... இங்க வந்து பாரு..."

அந்தக் கூடைக்குள் சின்னதாக, வெள்ளையாக ஒரு நாய்க்குட்டி இருந்தது. அதன் கழுத்தில் ரிப்பன் கட்டி 'அனிதாவுக்கு' என்று எழுதப்பட்டிருந்தது.

நாய்க்குட்டி வெள்ளையாக புஸுபுஸு வென்றிருந்தது. மூக்கருகே கொண்டுவந்து வியப்பாகப் பார்த்தபோது அனிதாவைச் சட்டென்று நக்கி வாலைக் கொஞ்சம் ஆட்டியது.

ஜிம்பு "ஒஸ்தி நாய். குட்டியே ரெண்டாயிரம் ரூபா இருக்கும்" என்றான்.

"அதை எதுக்கு அனுப்பிச்சிருக்கார் வைரவன் சார்?" என்றாள் அம்மா.

போன் வந்தது. அதை எடுத்துக் கேட்டு "அனிதா... உனக்குத்தான், அவர்தான்" என்று அம்மா கொடுக்க தயக்கத்துடன் அதைக் காதில் வாங்கிக் கொண்டபோது...

"நாய்க்குட்டி கெடைச்சுதா?"

"ம்."

"உனக்கு நாய்க்குட்டி பிடிக்குமா..?"

"நாய்க்குட்டி யாருக்குப் பிடிக்காது?"

"பிடிச்சா எடுத்துக்க. உங்க வீட்டுல ஆசாரம் கீசாரம்னு எதிர்ப்பு தெரிவிச்சாங்கன்னா விசிறிக் கடாசிடு...என்ன? கல்யாணத்துக்கு குதிரைக்குட்டி!"

"சேச்சே!"

"பத்து நாள் இருக்கு..."

[அனிதா வருவாள்...]

# பாப்பா முரசு சிறுகதை

# எமனை வென்றவர்!

**அ**ரசர் யுதிஷ்டிரருக்கு வேறு ஒரு பெயர் உண்டு. அப்பெயர் தர்ம ராஜன். தருமவழி நின்று எந்த காரியத்தையும் அவர் செய்பவர். அதனால் அவருக்கு தர்மராஜன் என்றும் பெயர் ஏற்பட்டது. அவரை நாடி பலர் வந்து தங்கள் கஷ்டங்களைச் சொல்வார்கள். அதைக் கேட்டு அவர் மனம் இரங்கும். அவர்களுக்கு தேவையானவைகளை



கொடுத்து உதவுவார்.

ஒருநாள் அவர் அவைக்கு ஒரு ஏழை வந்தார். அவர் பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தார். எலும்பும், தோலுமாக இருந்தார். வறுமையில் அவரும் அவர் மனைவி மக்களும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தனர். தம் கஷ்டம் நீங்க அரசர் யுதிஷ்டிரர் பொருளுதவி செய்வார் என்கிற நம்பிக்கையில் அந்த ஏழை அவரைத் தேடி வந்தார்.

அரசர் யுதிஷ்டிரரிடம் தம் வறிய நிலையை எடுத்துச் சொன்னார். அரசரும், அவர் கூறியதை இரக்க உணர்வோடு கேட்டார். பிறகு என்ன தோன்றியதோ அந்த ஏழையை நோக்கி, "ஐயா...! நீங்கள் படும் கஷ்டம் அறிந்தேன். உங்களுக்கு உதவி செய்யவே விரும்புகிறேன். அதனால் நீங்கள் நாளைக்கு வாருங்கள். நீங்கள் விரும்புகிற உதவியை செய்கிறேன்!" என்றார்.

அதைக் கேட்ட ஏழை ஏமாற்றத்தால் வருந்தினான். 'அரசர் உடனே பொருளுதவி செய்வாரென்று எதிர்பார்த்தால் நாளை நம்மை வரச்சொல்லுகிறாரே!' என்றெண்ணியபடி அரசவையை விட்டுச் சென்றான்.

இவைகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பீமன் உடனே அரசவையை விட்டு வெளியே வேகமாகச் சென்றான். தான் உதவி செய்யாததால் அந்த ஏழைக்குத் தன் தம்பி பீமசேனன் உடனே உதவி செய்யவே அவ்வளவு வேகமாக வெளியே செல்கிறான் போலும் என்றெண்ணினார் யுதிஷ்டிரர்.

வெளியில் வேகமாகச் சென்ற பீமன் அந்த ஏழையை நிற்கச் சொல்லிவிட்டு அரண்மனை வாயிலில் கட்டியிருந்த கண்டாமணியின் கயிற்றை இழுத்து, 'டாண் டாண்' என்று மணி அடிக்க ஆரம்பித்தான்.

பெரும் நிகழ்ச்சி ஏதாவது நடந்தாலோ அல்லது பெரும் வெற்றி ஏதாவது கிட்டியிருந்தாலோ மட்டும்தான் அந்த மணியை அடிப்பது வழக்கம்.


என்றுமில்லாத அதிசயமாக அரண்மனை மணி தொடர்ந்து 'டாண் டாண்' என்று அடிக்கிற சப்தம் கேட்டு மக்கள் என்னவோ ஏதோவென்று அரண்மனை வாயிலில் கூட்டம் கூட்டமாக கூடி விட்டார்கள். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பீமசேனன் கை, புஜம் எல்லாம் வலிக்க மணி அடிப்பதை பார்த்தார்கள்.


யுதிஷ்டிரர் காதிலும் மணியோசை விழுந்தது. ஏன் மணி அடிக்கப்படுகிறது என்பதை அறிந்து கொள்ளும் ஆவலில் அவரும் அரசவையை விட்டு அரண்மனை வாயிலுக்கு வந்தார். தன் தம்பி பீமசேனன் மணியடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார்.

"தம்பி! ஏன் மணியை அடிக்கிறாய்?" என்று கேட்டார் அவர்.

மணி அடிப்பதை நிறுத்திவிட்டு உரத்த குரலில், "இன்று நமக்கு ஒரு பெரிய வெற்றி கிடைத்திருக்கிறது! எவராலும் வெல்ல முடியாத எமனை நம் தர்மராஜர் இன்று வெற்றி கொண்டுள்ளார். இன்னும் இருபத்து நான்கு மணி நேரம் வரை எமன் தன்னை அணுக முடியாது என்று அரசர் நம்புகிறார். அதனால் தான் தம் உதவியை நாடி வந்த ஒரு ஏழையை நாளைக்கு வருமாறு உத்தர விட்டுள்ளார். அடுத்த நிமிடம் நடக்கப் போவது என்னவென்று தெரியாது நாமிருக்க அரசர் தாம் இன்னும் ஒருநாள் இருக்க முடியும் என்று நம்புகிறார். இது நமக்கு பெரிய வெற்றியல்லவா?" என்றார்.


இதைக் கேட்டதும் யுதிஷ்டிரர் உணர்வு பெற்றார். தான் செய்த தவறை உணர்ந்தார். தம்மிடம் உதவி கேட்ட ஏழைக்கு உடனே நிறைய பொன்னும், பொருளும் கொடுத்து அவனை சந்தோஷமாக அனுப்பி வைத்தார். ▫





1 முதல் 21 வரையான இலக்கங்களையும், A முதல் Z வரையான ஆங்கில எழுத்துக்களையும் ஏதாவது ஒரு பென்சில் கொண்டு கோடு இழுத்துப்பாருங்கள்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **24.11.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **421**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 419

**பரிசுக்குரியவர்:**
சு.சத்திய தர்ஷன்,
சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், பதுளை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| பாத்திமா றுஸ்கா நளீர், மத்திய கல்லூரி, (தேசிய பாடசாலை) மூதூர். | ஏ.பிரியா செலோமி, அல்-ஹஸ்னா பாடசாலை, ஹபுகஸ்தலாவ. |
| என். சமீனா, இராஜவல தமிழ் தேசிய கல்லூரி, திகன. | பாத்திமா மின்ஹாரா முஸாரிக், புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி, கண்டி. |
| ச. காயத்ரி, நல்லாயன் அரசினர் த.ம.வி.,கொழு.-13. | ஜே.ஜே. ஜினோ, ஹைலன்ட்ஸ் கல்லூரி, ஹட்டன். |
| எம்.எம். றஸ்மி, அல்-அஸ்ஹர் ம.வி.,வெள்ளைமணல், சீனக்குடா. | என். ரூபினி, புனித அன்னம்மாள் மகளிர் ம.வி.,வத்தளை. |
| ரி.தாட்ஷாயினி, புனித அன்னம்மாள் ம.வி., கொழு.-13. | எம். யுவனி, றோயல் ஆங்கில பாடசாலை, மாத்தளை. |

# தெரிந்து கொள்ளுங்கள்

- 18 அக்டோபர் 1922ல் பி.பி.ஸி. வானொலி தொடங்கப்பட்டது.
- ஐ.நா.சபை என்ற பெயரை வைத்தவர் ரூஸ் வெல்ட்.
- ரஷ்யப்புரட்சி நடந்தது 1917 ஆம் ஆண்டு.
- சீனாவின் கம்யூனிஸ அரசு 1949ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
- பிளாட்டினத்தின் உருகு நிலை 3200 டிகிரி ஃபாரென்ஹீட்
- 1901ம் ஆண்டு ஹாப்கின்ஸ் என்பவர் வைட்டமின்களை கண்டுபிடித்தார்.
- முதன் முதலில் ஒலிம்பிக் போட்டி தொடங்கப்பட்டது கி.மு. 776ல்.
- டைட்டானிக் கப்பல் 15.04.1912ம் ஆண்டு மூழ்கியது.
- 1880ம் ஆண்டு பெற்றோல் என்ஜினில் கார் வடிவமைக்கப்பட்டது.
- 1853ல் ஜீன்சை லீவை ஸ்ட்ராஸ் என்பவர் கண்டுபிடித்தார்.
- 1620ம் ஆண்டில் முதன் முதலாக ஃபிரான்ஸ் நாட்டில் ஐஸ்கிறீம் தயாரிக்கப்பட்டது.
- டைனமோவை 1821ல் மைக்கேல் ஃபாரடே கண்டுபிடித்தார்.
- முதல் உலக கால்பந்து போட்டி தென்னமெரிக்காவில் உள்ள உருகுவேயில் நடைபெற்றது.
- தமிழில் சுருக்கெழுத்து முறையை கண்டுபிடித்தவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த ராம் சாகிப் எம் சீனிவாசராவ்.
- 1720ல் டச்சு நாட்டைச் சேர்ந்த கார்னீஸ்வரன் டிரபில் என்பவர் நீர்மூழ்கிக்கப்பலை கண்டுபிடித்தார்.

# இனப்பெருக்கம்



**ஒ**ரு சோடி சுண்டெலி தொடர்ந்து இணைகூடி 2 வருடத்தில் 20 இலட்சம் எலிகளை உற்பத்தி செய்துவிடும்.



**க**ண்ணுக்குத் தெரியாத பக்ரீரியாக்களின் உற்பத்தி வேகம் மிகவும் வியப்புக்குரியது. ஒரு பக்ரீரியா 24 மணி நேரத்தில் ஒரு கோடி பக்ரீரியாக்களாகி விடுகின்றது.



**வ**ளர்ந்த ஒரு போலார்க் கரடியின் நிறை 700 கிலோ வரை இருக்கும். என்றாலும் அது பிறக்கும் போது வெறும் 300 கிராம் நிறையாகவே இருக்கும்.

# விஷம் துப்பும் பாம்பு



**உ**லகில் உள்ள ஜீவராசிகளில் பல, தூரத்திலிருந்தே தமது எதிரிகளைத் காயப்படுத்தவோ, அல்லது கொல்லவோ திறன் கொண்டவை.

அவற்றில் ஒன்றுதான் விஷம் துப்பும் பாம்பு.

இந்தப் பாம்புகள் தமது எதிரிகளின் கண்களைக் குறி வைத்து விஷத்தைத் துப்பும். சுமார் ஆறு அடி தூரத்தில் இருந்து கூட இதனால் அப்படித் தாக்க முடியும்.

இந்த விஷத்தால் பல சிறு விலங்குகள் இறந்து விடும். மனிதர்களுக்குக் கண்களில் வீக்கமும் வலியும் ஏற்படும். பார்வை பறிபோய் விடும்.

# பிரச்சனை

பொன்னுசாமியும் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்து விட்டார். கொஞ்சம்கூட பணம் புரண்ட பாடில்லை!

'இன்னும் ஒரு வாரம்தான் இருக்கிறது' இந்த நினைப்பு வந்ததுமே பயம் நெஞ்சைக் கவ்விக் கொண்டது. துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

இவ்வளவு நாள் சென்று ஒரு ஏற்பாடு ஆகியதே என்று சந்தோஷப் பட்டவருக்கு இப்போது அதுவே ஒரு பிரச்சனையாகிப் போனது!

மற்ற எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட்டது. மொத்தமாய்க் கேட்ட ரூபாய் முப்பதாயிரத்தை புரட்ட முடியாமல் திணறிக்கொண்டிருந்தார் அவர்.

ஏற்பாடு செய்தவர் மிகவும் வேண்டியவர். உறவினர்தான் என்றாலும் பொன்னை வைக்க வேண்டிய இடத்தில் பூவையாவது வைக்கவேண்டும் என்பார்களே, அதைப் போல் முப்பதாயிரம் கேட்ட இடத்தில் ஒரு பதினைந்தாயிரத்தையாவது இப்போது கொடுத்து மீதியை பிறகு தருகிறேன் என்று சொல்லலாம் என்றால், அதையாவது புரட்ட முடிந்தால்தானே!

பொன்னுசாமியே, உறவினர்கள், தெரிந்தவர்கள், நண்பர்கள் என்று பல பேரிடம் கெஞ்சிப்பார்த்துவிட்டார். பணம் கிடைக்கவில்லை.

நெற்றிப் பொட்டில் கை வைத்தபடி சோர்வாக அமர்ந்திருந்தவர் முன் தேனீரை வைத்துவிட்டு,

"போன காரியம் என்னங்க ஆச்சு?" என்று மெதுவாய்க் கேட்டாள் பொன்னுசாமியின் மனைவி பார்வதி.

"என்ன ஆச்சு, எல்லாம் வழக்கம் போலத்தான். இந்த பரசுராமனைத் தான் மலையாய் நம்பியிருந்தேன். கடைசியில அவ னும் கையை விரிச்சிட்டான். எல்லாம் என் நேரம். ரிட்டையர் ஆன பிறகு இப்படி ஒரு சோதனை" மனம் நொந்து கொண்டார் பொன்னுசாமி!

"மற்ற ஏதாவதுன்னா" பரவாயில்லை. இது வாழ்க்கைப் பிரச்சனையாச்சே. யார் கால்ல விழுந்தாவது ஒரு வாழ்க்கையை அமைச்சுக் கொடுத்திட்டோம்னா, பிறகு அதனதன் பாடு" என்று பார்வதி சொல்லவும்,

"இப்ப என்னை என்ன செய்யச் சொல்றே?" என்று எரிச்சலாய்க் கேட்டார் பொன்னுசாமி.

"நான் என்ன சொல்றேன்னா, கௌரவம் பார்க்காம, எங்கட பிள்ளை ரேவதி கிட்ட போய் நிலைமையை விளக்கிச் சொல்லி அவ நகைகளையாவது வாங்கி வாங்க. அவசரத்துக்கு அடகு வச்சிட்டுப் பிறகு மீட்டுக் கொடுத்திடலாமில்லே."



## எம். நடராஜன்

"அவங்க சொன்ன கெடுவுக்கு இன்னும் ஒரு வாரந்தானே இருக்கு. ஏதாவது ஆகி இதுவும் தவறிப் போச்சின்னா பயமா இருக்கு;" கெஞ்சினாள் பார்வதி.

"சரி சரி, நீ சொன்னபடியே செய்யறேன்" என்று சொன்ன பொன்னுசாமி. தனது மகன் சங்கரின் வேலைக்காக, அவர்கள் கேட்டபணம் முப்பதாயிரத்தை தயார் செய்ய, மகள் ரேவதி வீடுநோக்கிப் புறப்பட்டார்!

# கழுத்தில் விழுந்த மாலை!



## பற்குணன் அம்பிகாபதி-மன்னார்

அவசர அவசரமாக மதிய உணவைத் தயாரித்துக் கொண்டிருந்த சுவர்ணாவின் காதில் அவள் பெற்றோர் பேசிய வார்த்தைகள் தெட்டத் தெளிவாகக் கேட்டன,

"என்னங்க எங்கட மகளுக்கும் வயசு ஏறிக்கிட்டே போகுது நீங்க சும்மா இருக்கீங்களே" என்றாள் அம்மா.

"அதுக்கு நான் என்ன செய்ய. போற இடம் வாற இடமெல்லாம் மூணு லட்சம் நாலு லட்சமுன்னு கேக்கிறாங்க பணத்துக்கு நான் எங்கபோவன்" என்றார் அப்பா.

"அதுக்காக எங்கட புள்ளைக்கு நாம ஒரு வாழ்க்கையத் தேடிக் குடுக்காம இப்பிடியே விட்டுர்றதா?" என்று சற்றுக் கடுமையாகக் கேட்டாள் அம்மா.

"இஞ்சபார் பணத்த அள்ளி வீச நீ என்ன உன்ர பிறந்த வீட்டுல இருந்து கொணந்து குவிச்சா வைச்சிருக்க?" என்று அப்பா அம்மா மேல் பாய்ந்து விழுந்தார். வழி தெரியாத அம்மா பெட்டிப் பாம்பாக அடங்கிப் போனாள். இருவருக்குமிடையே சிறு மௌனம். பின் அப்பாவாகவே தொடர்ந்தார்.

"இஞ்சபாரப்பா நாம இப்ப இருக்கிற நிலமையில ஒரு சாதாரண மாப்பிள்ளை கூட பார்க்க ஏலாது அதனால... அதனால.. வந்து நம்மட மு.. தலாளியின்ர மகன் சங்கர இவளுக்கு கட்டி வைச்சா என்ன?" என்றார் அப்பா. அதிர்ந்து போனது அம்மா மட்டுமல்ல சுவர்ணாவும் தான்.

காரணம் சங்கருக்கு ஏற்கனவே திருமணமாகி இரண்டு பிள்ளைகளும் உண்டு. சங்கர் ஒரு குடிகாரன். சங்கருடன் சேர்ந்து வாழ முடியாத அவனது மனைவி குழந்தைகளையும் அவனுடன் விட்டு விட்டு எங்கோ கண்காணாத தேசம் சென்று விட்டாள். சுவர்ணா தனது முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டவள். செவிகளை மேலும் கூர்மையாக்கிக் கொண்டாள். அப்பாவின் வார்த்தைகளுக்கு அம்மா எதிர்வாதமிட்டாள்,

"இல்ல மகள் கலியாணமே கட்டாம இருந்தாலும் பரவாயில்லை, அந்த குடிகாரனுக்கு அதுகும் குழந்த குட்டியோட இருக்கிறவனுக்கு... இது நடக்காது நடக்கவே நடக்காது" என்று அம்மா ஆவேசத்தோடு பேசினாள்.

"இஞ்சபார் நீ தாட்டுப் பூட்டுன்னு நின்னாலும் இந்தக் கலியாணம் நடக்கத் தான் போகுது, நான் காலையில முதலாளி கேட்டதுக்கு வாக்குக் கொடுத்துட்டு வந்திட்டன். முதல் மனைவியின்ர நடத்த சரியில்லாததனாலதான் அவன் இப்பவும் குடிச்சுக்கிட்டு இருக்கிறானாம்.

எங்கட மகளக் கட்டி வைச்சா திருந்திடுவான்னு முதலாளி சொன்னார். அதையும்விட சங்கரே விரும்பித்தான், முதலாளியும் என்கிட்ட கேட்டாரு" என்று அப்பா ஏதேதோவெல்லாம் அடுக்கிக் கொண்டேபோக சம்மதம் தெரிவிப்பதுபோல அம்மா மௌனமானாள்.

அடுப்பிலிருந்த மீன் குழம்பு அடிப் பிடித்து மணக்கவும் சுய நினைவுக்கு வந்த சுவர்ணா அவதியுற்று சட்டியை இறக்கி வைத்தாள்.

ஏழைக் குடும்பத்தில் பிறந்த சுவர்ணா ஏழையாகவே இருந்ததாலோ என்னவோ பெற்றோர் சொல்லுக்கு செவி சாய்த்து சம்மதிக்க சங்கரின் கரங்களால் அவள் கழுத்தில் மாலை விழுந்தது....

பகலவன் பறந்தோட இருள் சூழ்ந்து கொள்ள இருட்டறைக்குள் அடைக்கப் பட்டாள் சுவர்ணா. கற்பனைகள் அவள் கபடமற்ற மனதில் களம் புக அவனது காலடியில் விழுந்து வணங்கி நிமிர்ந்தவள் திடுக்கிட்டாள். சங்கரின் கையில் சாராயப் போத்தல்,

"சுவர்ணா பயப்பிடாத இது இல்லாட்டி என்னால உயிர் வாழவே முடியாது" என்றவன் மட மடவென வாயில் ஊற்றினான். சாராய நெடி சுவர்ணாவின் மூக்கை வந்தடைய சற்றே தள்ளி நின்றாள் அவள். சிவப்பேறிய அவனது கண்கள் காம உணர்வோடு காணப்பட்டது.

மெல்ல மெல்ல அவள் அருகில் வந்து, அவளை அணைக்க முனைந்தான். அணைக்க முடியாத நிலையில் தள்ளாடியபடியே அவளது காலடியில் விழுந்தான். எழும்ப முடியாதவனாய் அப்படியே நிலத்தில் கிடந்தான். செய்வதறியாத சுவர்ணா திகைத்தவளாக சிலையாக நின்றாள்.

# உறவுகள்

ஜீவா மலர்ச்சியாகக் காணப்பட்டான். குழந்தையும், தாயும் நலமாக இருந்தனர். இனம் புரியாத ஓர் உணர்ச்சிக் கூட்டாகக் குழந்தை கண்ணயர்ந்திருந்தது.

ஜீவா, வசுந்தராவின் கைகளைப் பற்றி மனதைத் திறந்து வைத்தான். அவள் அந்தத் தொடுகையில் அவனை முழுமையாக அறிந்து கொண்டாள்.

இது மூன்றாவது குழந்தை. 7, 3 வயசுகளில் ஆணும், பெண்ணுமாக அழகாய் உண்டு. 3வது பெண். டொக்ரைப் பார்த்து வர அவரது அறைக்குள் சென்றான் ஜீவா.

சில விஷயங்களின் பின் அந்தப் பெண் டொக்டர் கேட்டார். "கேக்கிறேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. இந்தப் பிரசவத்தோட குழந்தை பெறுவதை நிறுத்திவிடுவதற்கான ஒபரேசன் செய்திடலாமான்னு கேட்டபோது மறுத்திட்டீங்க. பொதுவா இப்போ மூன்றாவது பிள்ளைக்கு மேல பெத்துக்கிறவங்க குறைவு. அதுவும் உங்களப் போல வசதியானவங்க வீட்டில மூன்று பிள்ளை என்பதே அரிது. என்ன தான் குழந்தை ஒரு பொக்கிஷமாக இருந்தாலும் இன்றைய காலகட்டத்துல ரொம்ப கஷ்டமின்னு நினைக்கின்றேன். இது என்னோட சொந்தக் கருத்து மட்டுமே."



## 'மிர்த்தா'

டொக்டர் சிறிய ஆவல் உணர்வுடன் நிறுத்தினார். ஜீவா சிறியதாய் ஒரு அயர்ச்சி முகத்துடன் சொன்னான்.

"நீங்க சொன்னதில தப்பில்ல டொக்டர். ஆனால் எங்களோட வாழ்க்கை அப்பிடியானது. உங்களுக்கு ஒன்று தெரியுமா டொக்டர். எனக்கோ அல்லது என் மனைவிக்கோ சொந்தக்காரங்க யாருமே இல்ல. எங்க வீட்டுல நடக்கிற ஏதாவது விசேஷத்தில எங்க நண்பர்கள் மட்டும்தான் இருப்பார்கள். சுமார் 10 வருஷத்துக்கு முன்னால எங்க கிராமத்துல நடந்த விமானத் தாக்குதல்ல ஒரே வீட்டில் அடைக்கலமாயிருந்த என்னோடதும் என் மனைவியோடதும் குடும்பத்தினர் எல்லோருமே இறந்திட்டாங்க. நாங்கள் ரெண்டு பேரும் அப்போ கம்பஸில இருந்தபடியாத் தப்பினோம்.

இதுக்குப்பிறகு எங்க இருவருக்கும் நாங்கள் ரெண்டுபேரும் தான் உறவு. வேறு உறவுகளேயில்லை. எங்க வழமையான வாழ்க்கையை இந்த ஏக்கம் பாதிக்கல்லை. இருந்தாலும் எங்களுக்குன்னு நிறைய உறவுகள் வேணும். அந்த உறவுகள் எங்க குழந்தைகள் தான்."

ஜீவா சிறு புன்னகையுடன் வெளியேறினான்.

# ஏயார் மெயில் - 2

## (யாழ்ப்பாணத்திலிருந்து லண்டனுக்கு ஒருதாயின் எயார் மெயில் கடிதம்)

என்றும் அன்பு மறவாத பிள்ளை ஈஸ்வரி அறிவது,

எல்லாம் வல்ல முருகன் துணையுடன் நாங்கள் இங்கு பிரச்சனைகளுக்குள்ளும் பிரச்சனை இல்லாமல் இருக்கிறோம். உங்களையும் என்றும் எல்லாம் வல்ல இறைவன் காப்பானாக.

பிள்ளை! உன்ரை அம்மாதான் இங்கு நான் படுகிற கவலையைக் கண்டுவிட்டு லண்டனிலை உள்ள உன்ரை வீட்டு விலாசத்தைத் தந்தவ. நீங்கள் இப்போது லண்டனிலை நிற்கிற என்ரை மகன் சின்னத்தம்பியின்ரை வீட்டுக்குக் கிட்டத்தானாம் இருக்கிறியள். நேரம் இருக்கிறபோது அவன் உங்கள் வீட்டுக்கு வாறவனாம். நீ 'டெலிபோன்' பண்ணியபோது சொன்னதாக கொம்மாதான் சொன்னவா.

ஈஸ்வரிப் பிள்ளை! உன்னாலைதான் எனக்கொரு காரியம் நடக்க வேணும். அது என்ரை பொடியன் சின்னத்தம்பியின்ரை கலியாண ஒழுங்கு. வேறு ஒன்றும் இல்லை. உவன்ரை கலியாண விஷயமாக கன நாளைக்கு முன் அவனுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தனான். பொம்பிளை பக்கம் அவன்ரை முடிவைக் கேட்டு பெரிய நெருக்குவாரம். மாதக்கணக்காகப் போகிறது நான் கடிதம் போட்டு. அவன்ரை கடிதத்தைத்தான் இன்னும் காணவில்லை.

நானும் பாராத இடமெல்லாம் பார்த்து ஒன்றும் பலன் பொருந்தாத நிலையில் ஒரு நல்ல பெட்டையாய்ப் பார்த்து ஒழுங்குபடுத்திப்போட்டு கடிதம் அனுப்பியிருந்தனான். இன்றுவரை ஒரு பதிலும் இல்லை. 'ஓம்' அல்லது 'வேண்டாம்' என்றால் நானும் அவைக்கொரு முடிவைச் சொல்லலாம். அவனும் ஏதோ ஒரு சலிப்பிலை கடிதம் போடவில்லை என்று நான் நினைக்கிறன்.

பிள்ளை, நீதான் அவனுக்குக் கொஞ்சம் புத்திசொல்லி இந்தச் சம்பந்தத்தை முடித்துத்தர வேணும். நல்ல வடிவான பெட்டை, கொஞ்சம் வசதியில்லாதவை என்றாலும் ஓரளவு படிச்ச அடக்கமான பிள்ளை. கொஞ்சம் செல்வாக்குள்ள குடும்பம். இதற்குமேலை வேறை என்னம்மா வேண்டும்? இதைத் தான் விருப்பங் கேட்டு கடிதம் எழுதியிருந்தனான். அவன் ஏதாவது பதில் எழுதினால்தானே நான் மேற்கொண்டு எதையாவது செய்யலாம்.

என்ரை ஆச்சியெல்லோ, இதை எனக்காக உன்ரை விஷயமாக எடுத்து அவன் பதில் எழுதாவிட்டாலும் நீ அவனை வில்லங்கப்படுத்தியாவது அவன் விருப்பத்தை எழுதியனுப்பச் சொல்லு.

மற்றவை யாவும் அவன் கடிதம் கண்டபின்.

இப்படிக்கு,
என்றும் அன்புள்ள ஆச்சி,
சின்னத்தங்கம்.



## (லண்டனிலிருந்து தாய்க்கு மகன் எழுதும் பதில் எயார் மெயில் கடிதம்)

என்றும் அன்புமறவாத அம்மாவிற்கு,

ஈஸ்வரியக்கா நீ தனக்கெழுதிய கடிதத்தைக்காட்டினா. நீ முதலில் எனக்கனுப்பிய கடிதமும் ஏற்கனவே கிடைத்தது. ஆனால் உடனே அதை வாசிக்க முடியவில்லை. அதற்குக்காரணம் நீ என்மேல் வைத்திருந்த அதிக பாசம்தான். என்றாலும் அது பொய்யில்லை என்பதை நான் இப்போது அனுபவித்து உணர்ந்து கொண்டேன். உன்னுடைய அன்புக் கடிதம் என்னைப் பெரிய சிக்கலில் மாட்டியது பெரிய கதையம்மா.

நான் லண்டன் 'பொலிஸ்' பாதுகாவலில் இருந்து நேற்றுத்தான் விடுதலையாகி வெளியேவந்து இதை எழுதுகிறேன். நல்ல காலம் இங்கேயென்றபடியால் இவ்வளவு சொற்ப நாட்களுக்குள் விளக்கத்தையும் முடித்துக் கொண்டு என்னையும் விட்டு விட்டார்கள்.

ஒரு நாள்காலை, எங்களது வழமையான தபால்காரனுடன் இரண்டு 'பொலிஸ்'காரர்கள் வந்தார்கள். 'பொலித்தீனால்' நன்கு 'கவர்' செய்யப்பட்ட ஒரு கடிதத்தைக்காட்டி "இது உங்களுக்கு வந்ததுதானே?" என்றார்கள். நான் பார்த்தேன் உனதுகையால் எனக்கு விலாசமிடப்பட்ட கடிதமது. நானும் 'ஓம்' என்று சொல்லவும் "சரி நீ எங்களுடன் வந்து அங்கே கடிதத்தைப் பெற்றுக்கொள்" என்று சொன்னார்கள். எனக்கு ஒன்றுமே விளங்காமல் அவர்களுடன் சென்றேன்.

அங்கு சென்ற என்னைப் பல 'பொலிஸ்' அதிகாரிகள் கேள்விகள் மேல் கேள்விகள் கேட்டுத் துளைத்தெடுத்தார்கள். "இது எனது அம்மா தன் கையால் விலாசமிட்டு எனக்கு எழுதி வந்த கடிதம்". என்பதை நானும் அழுத்தம் திருத்தமாகச் சொன்னேன். அப்படியிருந்தும் அந்தக் கடிதம் எனது கைக்குத் தரப்படவில்லை. ஆனால் அதை ஒரு பாதுகாப்பான கண்ணாடி அறையுள் வைத்து யார் யாரோ எல்லாம் வந்து ஏதேதோ வெளிச்சங்களைப் பாய்ச்சி ஆராச்சி செய்தார்கள்.

அன்று பிற்பகல்தான் கடிதத்தை ஏன் இப்படிச் சோதிக்கிறார்கள்? அதில் என்ன தான் அப்படியிருக்கும்? என்பதனை ஓரளவு என்னால் ஊகிக்க முடிந்தது.

மறுநாள், கடமையிலிருந்த அதிகாரியிடம் நான் துணிந்து கேட்டேன். "ஐயா என்னை என்ன காரணத்திற்காக எனக்கு எனது அம்மா அனுப்பிய கடிதத்தையும் தராமல் தடுத்தும் வைத்திருக்கிறீர்கள்? நான் அறிந்து கொள்ளலாமா"? என்று துணிந்தே கேட்டுவிட்டேன்.

அதற்கு அவர்களில் ஒருவர் "உனக்கு வந்துள்ள கடிதத்துள் ஏதோ 'பௌடர்' போன்ற வஸ்து வந்திருக்கிறது அது 'வைரஸ்'களைக் கொண்ட 'அந்த்ரக்ஸ்' ஆக இருக்குமோ? என்ற சந்தேகத்தில்தான் இவையெல்லாம். பரீட்சித்ததில் அது அப்படியானதொன்றல்ல என்றாகிவிட்டாலும் வேறுவிதமான 'வைரஸ்' ஆக இருக்குமோ? என்பதுதான் இப்போதைய பிரச்சனை" என்றார்.

## எம்.எஸ்.கமலநாதன் - நீர்கொழும்பு

முதள்நாள் பிற்பகல் ஏற்பட்ட எனது சந்தேகம் ஓரளவிற்கு ஊர்ஜிதமானது. நானும் அவரை விடவில்லை. "ஐயா! அதில் அப்படி ஒன்றும் நீங்கள் நினைப்பதுபோல் 'வைரஸ்' கலவைகள் எதுவும் இருக்காது. எனது அம்மா இடைக்கிடை எனக்கு ஏதாவது நல்ல விஷயங்கள் நடக்க வேண்டுமென்று எண்ணி எங்கள் ஊர்க் கோவிலில் பூசையில் வைக்கப்பட்ட திருநீற்றை (HOLY ASHES) இப்படித்தான் வழமையாக அனுப்புவா. அதனால் அதனுள்ளிருப்பதும் நிச்சயமாக அதாகத்தான் இருக்க வேண்டும்." என்று என்னால் முடிந்தளவு விளக்கங்கள் சொன்னேன்.

எனது பேச்சைத் தற்காலிகமாக அவர்கள் ஏற்றுக் கொண்டாலும், தங்கள் ஆராய்ச்சிகளையெல்லாம் செய்தேதான் தீர்வார்கள். இது இவர்களிலுள்ள குணம். ஐயோ.. அம்மா! விளக்கத்தில்கூட எனக்காகப் பரிந்து பேசிய எங்கள் ஊர்ச் சட்டத்தரணிகளும் வெள்ளைக்காரனுக்கு திருநீறு பற்றியும், அதை ஏன் இலங்கையிலிருந்து லண்டனுக்கனுப்ப வேண்டும் என்றது போன்ற பல எமக்கு அதிர்ச்சி தரும் கேள்விகளுக்கும், குறுக்கு விசாரணைகளுக்கும், விளக்கங்களும் உதாரணங்களும் சொன்னதிலை வேண்டாம் வேண்டாமென்று போச்சு.

நாங்கள் என்னத்தைத்தான் செய்தாலும் நீதிமன்றத் தீர்ப்பு வந்த பின்னர்தான் என்னை விடுதலை செய்ததோடு உன் கடிதத்தையும் என் கையில் தந்தார்கள். அதன்பின் வீட்டுக்கு வந்தபின்தான் ஈஸ்வரி அக்காவும் நீ அவவுக்கு அனுப்பியிருந்த கடிதத்தையும் தந்தா. அவைக்கும் நான் விடுதலையாகி வரும்வரை எனக்கு நடந்தவை ஒன்றுமே தெரியாது. என்னுடன் 'ரூமிலை' இருந்த பொடியங்கள்தான் ஓடியாடி முழு அலுவல்களையும் பார்த்தார்கள். கவலைப்படாதையம்மா. இதுதான் இங்கத்தைய வாழ்க்கை. இது எங்களுக்குப் பழகிப்போச்சு.

நிற்க; எனது கலியாண விஷயமாக ஈஸ்வரியக்காவும் எவ்வளவோ எல்லாம் வற்புறுத்திச் சொன்னா. உன் பேச்சுக்கு நான் எப்பவாவது மறுப்புச் சொல்வதுண்டா? கடைசியாக நீ பார்த்து கடிதத்தில் எழுதிய பெண்ணை உன் விருப்பப்படியே பேசி முடி. உனது விருப்பம் தான் எனது விருப்பமும்.

எல்லாம் வல்ல இறைவன் எல்லோரையும் காக்க என்றும் வேண்டும் உன் அன்பு மகன்.

சின்னத்தம்பி.

# ஓடாதே! ஒளியாதே!

அசத்தல் தொடர் 11

க்ரைம் சக்கரவர்த்தி

ராஜேஷ்குமார்

நகரத்துச் சந்தடியை விட்டு ஒதுங்கியிருந்தது அந்த பங்களா.

காய்த்ரியும், நிவாஸும் அங்கே போய்ச் சேர்ந்த போது நேரம் ஆறரையைக் கடந்திருந்தது. வானம் போட்டோ நெகடிவ்வைப் போல ஆங்காங்கே திட்டுத் திட்டாய் வெளிச்சமும், இருட்டும் கலந்திருந்தது.

பங்களாவின் பெரிய கிராதி கேட்டை தயக்கத்தோடு தள்ளினான் நிவாஸ்.

"நிவாஸ், இந்த பங்களாவைப் பார்த்தா மனசுக்குள்ளே ஒரு நல்ல அபிப்ராயமே தோண மாட்டேங்குது."

"பெயிண்ட் உதிர்ந்து போய் பழைய மோஸ்தர்ல இருக்கு பங்களா. அதனால தான் அப்படித் தோணுது காயத்ரி."

"அது மட்டுமல்ல. பங்களாவைச் சுத்தி செடி, கொடிகள் புதர் மாதிரி மண்டிக் கிடக்கு பாருங்க. பராமரிப்பே இல்லாத வீடு மாதிரி இருக்கு."

போர்டிகோவை இருவரும் நெருங்கினார்கள். திடீரென்று இரண்டு ஆசாமிகள் பக்கவாட்டிலிருந்து முளைத்து வந்தார்கள்.

"யார் நீங்க... உங்களுக்கு என்ன வேணும்?"

"இது ... டாக்டர் லீமாவோட வீடு தானே..."



"ஆமா..."

"பதினைஞ்சாம் தேதி ஹோட்டல் சவேராவில் அவங்க நடத்தின இன்டர்வியூவில் என்னோட அண்ணன் முரளி கலந்துகிட்டார். அவர் இன்டர்வியூவில் செலக்ட் ஆயிட்டதாகவும் சொன்னாங்க. அவரைப் பார்த்துட்டுப் பொறதுக்காக வந்திருக்கேன்."

அந்த ஆசாமி சட்டென நெற்றி சுருங்கினான். இருவரில் ஒருத்தன் உள்ளே நழுவிப் போனான்.

நெற்றியைச் சுருக்கியவன் கோபத்தோடு சொன்னான். "அவரைப் பார்க்கறதுக்கு இங்கே வந்தா என்ன அர்த்தம்? இது அம்மாவோட பங்களா!"

"எங்கே போனா அவரைப் பார்க்கலாம்? அதைத் தெரிஞ்சிக்கத்தான் வந்திருக்கோம்..."

"ஏதோ இன்டர்வியூங்கறிங்க. அண்ணன்ங்கறீங்க. நீங்க கேக்கற விபரமெல்லாம் எனக்கு எதுவும் தெரியாது."

"அப்படின்னா அம்மாவை நாங்க பார்க்கறோம். விபரத்தை அவங்ககிட்ட கேட்கிறோம்."

"அவங்களை நீங்க பார்க்க முடியாது."

"ஏன்..."

"அம்மா இல்லை."

"எங்கே போயிருக்காங்க?"

"வெளியூர் போயிருக்காங்க. எப்ப வருவாங்கன்னு எனக்குத் தெரியாது."

அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே உள்ளே சென்றவன் வேகமாய்த் திரும்பி வந்தான். அவனிடம் நெருங்கிக் கிசுகிசுத்தான்.

"முத்து... லீமா அம்மாகிட்டே விபரம் சொன்னேன். முரளியைத் தேடி வந்திருக்கற இவங்களை வெளியே அனுப்பறது ஆபத்து. நைசாப் பேசி உள்ளே கூட்டிட்டு வாங்கன்னு அம்மா சொன்னாங்க."

"அப்ப சரி." தலையாட்டினவன் நிவாஸ், காயத்ரி இருந்த பக்கம் திரும்பி, "யாரை பார்க்கணும்னு சொன்னீங்க? முரளியா?"

"ஆமா."

"உள்ளே வாங்க. ஏதோ ஞாபகத்துல தெரியாதுன்னு சொல்லிட்டேன்."

உள்ளே போனார்கள்.

சில அறைகளைக் கடந்ததும் லீமா எதிர்கொண்டாள். கையமர்த்தி நிறுத்தினாள். நிவாசையும், காயத்ரியையும் ஏற இறங்கப் பார்த்தாள். பின் காயத்ரியிடம் கேட்டாள்.

"நீதான் முரளியோட தங்கச்சியா?"

"ஆமா."

"நீ...?" நிவாஸை ஏறிட்டாள்.

"எம் பேர் நிவாஸ். முரளியோட ஃபிரெண்ட்.

"உங்களுக்கு என்ன வேணும்?"

நிவாஸ் சொன்னான். "முரளி இன்டர்வியூக்கு வந்த நாளிலிருந்தே அவனைப் பத்தின விபரமெல்லாம் ஒரே மர்மமா இருக்கு. அவன் எங்கே வேலை பார்க்கிறான்னு தங்கச்சிக்குக்கூட தெரியாத நிலைமை. இடையில் புவன்யான்னு ஒரு பொண்ணு வந்து முரளி பாரின் போயிருக்கான்னு... நம்பவே முடியாத ஒரு பொய்யை சொல்லிட்டுப் போயிருக்கு. ஒரு வருஷ கான்ட்ராக்ட்ங்கறிங்க. வீட்டைக் கூட எட்டிப் பார்க்க முடியாதுன்னு சொல்றீங்க. எல்லாமே ரொம்ப குழப்பமா இருக்கு... அதான் பார்த்து விபரம் தெரிஞ்சுட்டு போலாம்ன்னு வந்தோம்."

"இப்ப நீங்க முரளியைப் பார்க்கணுமா?"

"ஆமா. அவன்கிட்டே பேசணும்."

"ரொம்ப துடிப்பா இருக்கியே நிவாஸ்! வா என் கூட. முரளியைப் பார்க்கலாம்"

இறுகிய முகத்தோடு சொன்ன லீமா... காயத்ரியையும், நிவாஸையும் லெபாராட்டரிக்குக் கூட்டிப் போனாள்.

அங்கே- தலை முழுவதும்-வயர்களாய் செருக்கப்பட்டு-நீளமாய்ப் படுக்க வைக்கப்பட்டிருந்த முரளியைப் பார்த்து அதிர்ந்தாள் காயத்ரி.

"அண்ணா... ஆ..ஆ..."

லீமா அமைதியாய்ச் சொன்னாள். "பயப்படாதே காயத்ரி! ஒரு பரிசோதனைக்கு உன்னோட அண்ணன் உதவி பண்ணிட்டிருக்கார்."

"நோ.. இது பரிசோதனை மாதிரி தெரியலை. கொஞ்சம் கொஞ்சமா என்னோட அண்ணனை கொன்னுடுவீங்க போலிருக்கு." கத்திக்கொண்டே முரளியிடம் போக முயன்றவளை தடுத்து-

லீமா ஒரு கத்தைப் பேப்பரை முன்னால் போட்டாள். "இதப் பார்த்தியா? நாங்க கொடுத்த பணத்தை வாங்கிகிட்டு- தன் மீது எந்தப் பரிசோதனையும் பண்ணலாம்னு உன்னோட அண்ணன் கையெழுத்துப் போட்டுத் தந்திருக்கார். அக்ரிமென்ட் பாருங்கள்."

நிவாஸ் கோபமாய் லீமாவைப் பார்த்தான்.

"இது ஒரு மோசடி மாதிரி தெரியுது. உன்னோட பணத்தை திருப்பி குடுத்துடறோம்... முரளியை அனுப்பி வைச்சுடு.."

லீமா உதடு பிரியாமல் சிரித்தாள்.

"முரளி இப்போ சூழ்நிலை மயக்கத்தில் இருக்கான்.. இன்னும் சில மணி நேரத்தில் அவன் மூளையைத் திறந்து- ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆபரேஷன் நடத்தப் போறோம். அவனை நீ கூட்டிட்டுப் போக முடியாது.அதே போலே நீயும், காயத்ரியும் கூட இந்த பங்களாவை விட்டு வெளியேறிப் போக முடியாது."

நிவாஸ் அதிர்ந்து சுற்றும் முற்றும் பார்க்க-

லீமா தொடர்ந்தாள். "நிவாஸ், இந்த பங்களாவைச் சுத்தியும் நவீன துப்பாக்கிகளோட ஆட்கள் காவலுக்கு இருக்காங்க. இங்கே இருந்து தப்பிச்சுப் போகலாம்னு நீ கனவு கண்டாக்கூட உன்னை சுட்டுத் தள்ளிடுவாங்க."

"இந்த மிரட்டலுக்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன்."

சொல்லிக் கொண்டே நிவாஸ் லீமாவின் மேல் பாய முற்பட-

அவள் தன் இடுப்பருகே கையை வைத்து சட்டென ஒரு பிஸ்டலை வெளிப்படுத்தினாள்.

நிவாஸின் முகத்துக்கு நேரே நீட்டினாள்.

"கெட் பேக்.."

காயத்ரி பயத்தில் விக்கித்துப் போய்க் கண்களில் கலவரமானாள்.

லீமா கொஞ்சம் தள்ளி நாற்காலியில் தெரிந்த சந்திரமோகனைப் பார்த்து சிரித்தாள். "டாக்டர்... முரளி செத்துப் போயிருவான்னு கவலைப்பட்டிங்களே! பரிசோதனைக்கு ஆட்களா இல்லை. தானாகவே வந்து மாட்டியிருக்காங்க பாருங்க. வரிசையா உபயோகிக்கலாம்! முரளி... நிவாஸ்... காயத்ரி..."

லீமா சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்த அந்த விநாடி- அந்த ஆள் வேகமாய் ஓடி வந்தான்.

"மேடம்...!"

"என்ன..?"

"போ.. போலீஸ் மேடம்."

"போலீஸா?"

"ஆமா மேடம் பங்களாவுக்குள்ளே நுழைஞ்சு வந்திட்டிருக்காங்க."

லீமா அதிர்ந்து போய் எழுந்தாள்.

"போலீஸ் எப்படி வந்தாங்க?"

"தெரியலை மேடம்."

"நான் சென்ஸ்..."

லீமா கத்திக் கொண்டே வெளியேற முயன்ற விநாடி-

தபதபவென்று அறை வாசலில் போலீஸ் யூனிபார்ம்கள்.

சட்டென்று லீமா மயக்கத்தில் இருக்கும் முரளியின் நெற்றியருகே துப்பாக்கியை வைத்தாள்.

உள்ளே நுழைய முற்பட்ட இன்ஸ்பெக்டரை எச்சரித்தாள்.

"இன்ஸ்பெக்டர்! நீங்க உள்ளே ஒரு அடி எடுத்து வெச்சாலும் இந்த அப்பாவி இளைஞனோட தலை சிதறிப் போயிடும்."

அவர் நிதானித்து நிமிர்ந்தார்.

"பங்களாவைச் சுத்தியும் போலீஸ் நிக்குது. துப்பாக்கியைக் கீழே போட்டுட்டு சரணடையறதுதான் உனக்கு நல்லது."

"நீங்க வெளியே போறதுதான் நல்லது."

"லீமா! இனி நீ தப்ப முடியாது. வெளியே இருக்கிற உன்னோட ஆட்களை எல்லாம் கைது பண்ணிட்டோம்."

"இந்த இளைஞனின் உயிருக்காகவாவது நீங்க பின்வாங்கித்தான் தீரணும்!"

"புவன்யா!"

"மேடம்."

"நீ போய்-போர்டிகோவில் காரைத் தயாரா எடுத்து நிறுத்து. உனக்கு போலீஸ் இடைஞ்சல் தந்தாங்கன்னா ஒரு குரல் குடு. அடுத்த நிமிஷம் முரளியின் தலைக்கு தோட்டாவைக் குடுத்துடறேன்.

புவன்யா வெளியேறினாள்.

இன்ஸ்பெக்டர்க்குப் பின்னாலிருந்து நிவாஸும் காயத்ரியும் நடப்பவற்றைக் கலவரமாய்ப் பார்த்தார்கள். **(வரும்)**

# ஒசாமாவின் வாழ்க்கை வரலாறு



உலகம் முழுவதும் தற்போது உச்சரிக்கப்படும் பெயருக்குச் சொந்தக்காரரான ஒசாமா பின்லாடனின் வாழ்க்கை வரலாறு புத்தகமாகத் தயாராகி விட்டது.

ஒசாமாவின் வாழ்க்கை வரலாற்றை எழுதியிருப்பவர் பாகிஸ்தானில் இருந்து வெளியாகும் உருது தினசரிப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியரான ஹமீட் மிர். (ஒசாமாவின் அருகில் அமர்ந்திருப்பவர்)

ஒசாமாவின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவதற்காக அவரைப் பலமுறை சந்தித்த ஹமீட் ஒசாமாவைப் பற்றிக் கூறிய சில சுவாரஸ்யமான தகவல்கள்.

பின்லாடனுக்கு 25 சகோதரர்கள், 3 மனைவிகள், 16 பிள்ளைகள் உண்டு. இந்த 16 பிள்ளைகளும் தற்கொலைப் படையில் சேர்ந்துள்ளனர்.

பின்லாடனுக்குத் துப்பாக்கி மட்டுமல்ல பேனாவும் பிடிக்கத் தெரியுமாம். இவர் கவிதைகளும் எழுதுவார்.

பின்லாடனுக்கும் பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி நவாஸ் ஷெரீப்புக்கும் ஆகாது. காரணம் அமெரிக்காவுக்கு எதிரான புனிதப்போர் நடத்துவதற்கு பின்லாடன் கோடிக்கணக்கான பணத்தை ஷெரீப்பிடம் கொடுக்க, ஷெரீப் அதைச் 'சுட்டு' விட்டாராம். இதனால் ஷெரீப் மீது ஏக கடுப்பில் இருக்கிறாராம் பின்லாடன்.

இந்த விவகாரத்தைப் பற்றி ஒசாமாவிடம் ஹமீட் சில கேள்விகளைக் கேட்டுள்ளார். பதில் கிடைத்ததும் ஒசாமாவின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகங்கள் கடைகளில் கிடைக்கும் என்கிறார்கள். ■

# ஹொலிவூட் டும் டும் டும்

ஹொலிவூட் அரவிந்தசாமி என்று அழைக்கப்பட்டுவரும் 'மிஷன் இன்பொஸிபிள்' உட்பட பல படங்களின் நாயகனுமான டொம் குரூஸ் தனது மனைவியான நடிகை நிக்கோல் கிட்மனை விட்டுப் பிரிந்திருந்தார்.

இப்போது இவர்கள் இருவரும் இரண்டாவது திருமணம் செய்ய எண்ணியிருக்கின்றனர். 'வெனிலா ஸ்கை' என்ற படத்தில் நடித்தபோது ஸ்பானிய நடிகையான பெனிலோப் குரூஸின் மேல் காதல் வயப்பட்டார் டொம்.

அண்மையில் டொம்-பெனிலோப் இருவரும் ஃபிஜித்தீவிற்குப் போய் தனியாகப் பொழுதைக்போக்கினார்கள்.


இதேவேளை, நிக்கோல் கிட்மன், 'கிளாடியேட்டர்' படத்தின் நாயகனுடன் ரஸ்ஸல் குரோவைக் காதலித்து வருகிறார்.

டொம்-பெனிலோப், ரஸ்ஸல்-நிகோல் ஜோடிகள் விரைவில் தமது இரண்டாவது திருமணங்களைச் செய்யவுள்ளனர். ■

# உடைகளை ஊடுருவிச் சென்று மனிதர்களை நிர்வாணமாகக் காட்டும் நவீன கமரா

உலகெங்கிலும் திரைமறைவு வாழ்க்கை நடத்தும் சமூக விரோதிகளையும் போதைப்பொருள் மன்னர்களையும் அடையாளம் காண்பதற்காக நைட் விஷன் டெக்னோலொஜி(என்.வி.ரி.) என்னும் புதிய தொழில்நுட்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழில் நுட்பத்தைக்கொண்டு இருளில் நடப்பவற்றைத் தெளிவாகப் பார்க்கும் வல்லமையை கமராவுக்கு அளித்தார்கள். ஆனால் இப்போது அதைப் பாதுகாப்புத்துறையினர் பயன்படுத்துவதை விட அதிகமாக, வக்கிரமான மன நிலையில் உள்ளவர்கள் பயன்படுத்துகிறார்கள்.



இதை அண்மையில் அமெரிக்காவில் பிரபல காலைத் தொலைக்காட்சித் தொடரான 'குட் மோனிங் அமெரிக்கா' அம்பலப்படுத்தியுள்ளது.

இந்த இரவில் படம்பிடிக்கும் கமராவைக் கொண்டு, இருண்ட பிரதேசங்களை தொலைக்காட்சிப் பிரிவினர் படம் பிடித்தனர். அப்போது அந்த கமராவின் கோணத்தை எதிரில் இருந்த பெண்நிருபரிற்கு எதிராகத் திருப்பினர்.

பெண் நிருபரின் ஆடைகளை ஊடுருவிச்சென்று உள்ளாடைகள் தெரிய ஆரம்பித்தது படத்தில்.

கிரக் என்ற நிருபர்தான் இந்தப் புதிய தொழில்நுட்பம் தவறாகப்பயன்படுவதைச் சுட்டிக்காட்டினார்.

இவர் ஒரு சாதாரண கமராவில் இந்த விசேட ஃபில்டரைப் பொருத்திப் படம் எடுத்தார். ஐ.பி.எஃப். எனப்படும் இதன் விலை 700 அமெரிக்க டொலர் (நம்நாட்டு மதிப்பில் சுமார் 63 ஆயிரம் ரூபாய்).

இன்டர் நெட் மூலம் விற்பனையாகும் இதை வாங்குவது மிகச் சுலபம்.

நிருபர் கிரக், நிர்வாணமாக மனிதர்களைக் காட்டும் இந்த கமரா ஃபில்டரை உலகிற்குக் காட்ட இரண்டு மொடல்களை அழைத்து இதைப் பற்றிக் கூறி அவர்களிடம் சம்மதம் வாங்கினார். பின் அவர்களைப் படமெடுத்தார்.

பெண் மொடல் ஆடைகள் இல்லாமல் உள்ளாடைகளுடன் இருந்தது படத்தில் பதிவானது. ஆண் மொடல் தனது உள்ளாடைக்கு அருகில் பச்சை குத்தியிருந்தது பதிவானது.

சிரித்துக் கொண்டே செல்லும் கல்லூரி மாணவ, மாணவிகள், அமெரிக்காவில் அதிகளவான மக்கள் கூடும் இடங்களில் மக்கள் நடமாடும் காட்சிகள் சிலரால் விசேட கமரா மூலம் நிர்வாணமாகப் பதிவுசெய்யப்பட்டு சில இணையத்தளங்களில் வெளியிடப்பட்டிருந்தன.

இந்தப் படங்களையும் நிருபர் கிரக் தான் படமாக்கியவற்றையும் வெளியிட்டு மக்களுக்குக் காட்டியதன் பின் அமெரிக்கா முழுவதும் அதிர்ந்தது.

அமெரிக்காவில் உள்ள மிகப் பிரபலமான பெண்கள் இயக்கத்தைச் சேர்ந்த தலைவரான மார்த்தா டேவிஸ் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்:

"உலக வர்த்தக மையத்தின் மீது நடைபெற்ற தாக்குதலை விட மோசமான தாக்குதல் இது. அந்தத் தாக்குதலிலாவது எதிரி யார் என்று தெரியும். இந்தத்தாக்குதலில் எதிரிகள் நம்முடனேயே இருக்கக் கூடியவர்கள். இவர்களை அடையாளங் காணக்கூடிய வழிமுறைகள் எம்மிடம் இல்லை. நம் வீடுகளிலும் அலுவலகங்களிலும் நம்மை மறந்து நாம் வேலைகளில் ஈடுபட்டிருக்கும் போது, நம் ஆடைகள் களையப்படுவது மனித நாகரிகத்திற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட போர்" என்கிறார்.

இதைத் தடுப்பதற்கான வழிமுறைதான் என்ன?

எப்படி ஆபாசப் புத்தகங்களையும் நீலப்படங்களையும் சட்ட ரீதியாக ஒழிக்க முடியவில்லையோ அதுபோலத்தான் இதுவும். ■

# எஸ்.டி.எஸ். தொடர் 74

## பட்டிருப்புத் தொகுதியில் தமிழரசுக் கட்சி

கல்லோயா திட்டத்தில் தமிழர்களையோ முஸ்லீம்களையோ குடியேற்ற வேண்டும் என்ற எண்ணம் அப்போது அரசாங்கத்திற்கு இருக்கவே இல்லை. குடியேற்றத் திட்டங்களை அணித்தாக இருந்த தமிழ்க் கிராமங்களில் இருந்து எதிர்ப்புகள் வராமல் தடுத்து நிறுத்துவதற்கேற்ற அரண்களாக அமையட்டும் என்ற நோக்கில் 38, 39, 40ம் குடியேற்றப் பிரிவுகளில் ஓய்வுபெற்ற இராணுவத்தினரையும், பொலிசாரையும், கொண்டு வந்து குடியேற்றுவதற்காக அரசாங்கம் வகுத்திருந்த இரகசியத்திட்டம் எப்படியோ வெளியே தெரிந்து விட்டது.


அப்போது பட்டிருப்புத் தொகுதியின் ஆளுங்கட்சி உறுப்பினராக பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த திரு.சி மு.இராசமாணிக்கம் அவர்கள் தலைமையில் பட்டிருப்புத் தொகுதியில் உள்ள தமிழ்க் கிராமங்களில் உள்ள விவசாயிகள் பலரையும் ஒன்று திரட்டி மேற்படி மூன்று குடியேற்றத் திட்டங்களிலும் பலாத்காரமாகக் கொண்டு போய்க் குடியேற்றுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன

இந்த அந்தரங்க திட்டத்தில் பெரிய போரதீவில் அமைக்கப்பட்டிருந்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பெரும் பங்கெடுத்துக் கொண்டனர். திட்டமிட்டபடி, பல சிரமங்களுக்கு மத்தியில் காணியற்ற விவசாயிகளைத் தேடிக் கண்டு பிடித்து அம்மூன்று குடியேற்றங்களிலும் கொண்டு போய்க் குடியேற்றினர்.

தங்கள் தங்கள் கிராமங்களை விட்டு வெளியிடங்களுக்கு போய்க் குடியேறுவதை குறிப்பிட்ட விவசாய மக்கள் விரும்பவில்லை. எனவே இவர்கள் பெரும்பாலும் முழுமனதுடன் குடியேற்ற வாசிகளுக்கான குடிசைகளில் தொடர்ந்து இருக்க விரும்பவில்லை 'எங்கே பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த, ஏனைய குடியேற்றங்களில் வசித்து வந்தவர்களால் தங்களுக்கு உயிராபத்து ஏற்பட்டு விடுமோ என்று பயந்த வண்ணமே காலம் கழித்தனர். அநேகமானோர் இப்பயப் பிராந்தியினால் அவ்விடங்களை விட்டு திரும்பி ஓடி விட்டனர். அவ்விடங்களை நிரப்புவதற்கு வேறு விவசாயிகளை திரட்டி எடுப்பது பெரும் பிரயத்தனமாகவே இருந்தது.

இதே காலகட்டத்தில் மேற்படி குடியேற்றக் கிராமங்களுக்குரிய காணிகளுக்கு போதிய நீர்ப்பாசனம் அளிக்கவும் நீர்ப்பாசன இலாகா மறுத்து விட்டது. அதேவேளை பெரும்பான்மை இன மக்கள் குடியேறிய பகுதிகளில் உள்ள காணிகளுக்கு போதுமான அளவு நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

ஆரம்ப காலத்தில் எடுத்துக் கொண்ட பிரயத்தனங்களினால் அக்



திரு.பூ.ம. செல்லத்துரை

குடியேற்றங்களில் நிலையாக வாழ்ந்தோர் இன்று நல்ல பலன்களைப் பெற்ற விவசாயிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

இதற்கிடையில் 1956ம் ஆண்டு தமிழ் விவசாயிகளுக்கும் சுற்று வட்டாரக் கிராமங்களில் வாழ்ந்த தமிழ் மக்களுக்கும் ஏற்பட்ட பெரும் சோதனைதான் இந்த நாட்டில் ஏற்பட்ட முதலாவது இனக் கலவரமாக வெடித்தது. (இந்த கலவரத்திற்கு உரிய சம்பவங்களைத் தொகுத்தளிப்பதற்கு முன்னர் பட்டிருப்புத் தொகுதியில் தமிழரசுக் கட்சி எவ்வாறு வளர்ச்சி அடைய ஆரம்பித்தது என்பதைப் பற்றி சற்று விரிவாகக் கூறுவது பொருத்தமாகும்.)

பட்டிருப்புத் தொகுதியில் 'படுவான் கரையில்' (மட்டக்களப்பு வாவியின் மேற்கே உள்ளது) பெரிய போரதீவு மிகமுக்கியமானதொரு கிராமமாகும். இங்குள்ள பத்திரகாளி அம்மன் ஆலயம் மிகச் சிறப்பு வாய்ந்தது. இலங்கையின் தலை சிறந்த தங்க ஆபரணங்களை வடிவமைக்கும் பொற் தொழிலாளர்கள் பெரும்பாலானோர் இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள நகை மாளிகைகளின் பின்புறத்தில் உள்ள பட்டறைகளில் பெரும்பாலானவற்றில் பெரிய போரதீவு, கோயில் போரதீவு, ஒந்தாச்சி மடம், மற்றும் முனைத்தீவு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இளைஞர்களும் தங்கநகை வடிவமைப்பில் மிகவும் பிரசித்தி பெற்ற கலைஞர்களாக பணிபுரிந்து வருகின்றனர். செட்டியார் தெருவில் மட்டுமல்லாமல் இலங்கையின் பல பாகங்களிலும்கூட இப்பணியில் இவர்கள் ஈடுபட்டு உழைத்து வருகின்றனர்.

பெரிய போரதீவில் உள்ள ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய ஆண்டுத் திருவிழாக்கள் நடைபெறும் காலங்களில் இவர்கள் அனைவரும் ஒன்றாக வந்து சேர்வது அருங்காட்சியாக அமைவதுண்டு.

தமிழ் நாட்டில் தோன்றிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிச்சுவற்றைப் பின்பற்றி பெரிய போரதீவில் வாழ்ந்த இளைஞர்கள் ஒன்று கூடி திரு.பூ.ம.செல்லத்துரை அவர்கள் தலைமையில் பகுத்தறிவு இயக்கத்தை ஆரம்பித்தனர். இந்தப் பகுத்தறிவு இயக்கமே 1953ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பட்டிருப்புத் தொகுதி தமிழரசுக் கட்சிக் கிளையாக மாற்றமடைந்தது.

பட்டிருப்புத் தொகுதியில் அதுவரை கட்சி அரசியல் என்ற பேச்சுக்கே இடமிருக்கவில்லை.1947ம் ஆண்டு இத்தொகுதியின் பாராளுமன்ற உறுப்பின



திரு.சி.மு.இராசமாணிக்கம்

ராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் திரு.எஸ்.யு.எதிர்மன்னசிங்கம் அவர்கள். இவருடன் சுயேச்சையாகப் போட்டியிட்டு திரு.சி.மு.இராசமாணிக்கம். தோல்வி அடைந்தார். ஆனால் 1952ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் திரு. இராசமாணிக்கமே வெற்றி பெற்றார். 1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் இந்நாட்டின் அரசியல் மொழியாக சட்டமாக்கப்பட இருப்பதை முன்னதாகவே அறிந்து கொண்ட திரு.இராசமாணிக்கம் 1956ம் தேர்தலில் தோல்வியைத் தழுவிக் கொண்டார்.

பட்டிருப்புத் தொகுதியைப் பொறுத்தமட்டில் அங்கு சில காலம் வரை அரசியல் கட்சி எதுவும் செல்வாக்குப் பெறமுடியவில்லை. குறிப்பாக சாதி அடிப்படையிலேயே தேர்தல் வெற்றி தோல்விகள் நிர்ணயிக்கப்பட்டன. இதனால் திரு.இராசமாணிக்கமும் திரு.எதிர்மன்னசிங்கமும் மாறிமாறி பாராளுமன்றப் பிரதிநிதிகளாக வர நேர்ந்தது.

பட்டிருப்புத் தொகுதியில் ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக்கட்சியில் இளைஞரான திரு.பூ.செல்லத்துரை தலைவராக விளங்கினார் திருவாளர்கள் கா.கோபாலபிள்ளை, க.விஸ்வலிங்கம், இ.நமசிவாயம், செ.மாணிக்கம், வே.சிவசம்பு, இ.சாமித்தம்பி நா.மயில்வாகனம், சீனித்தம்பி, க.கேதாரம், ஆகியோர் பிரதான பங்கெடுத்துக் கொண்டனர்.

பெப்ரவரி 4ம் திகதி சுதந்திர தினத்தை துக்க தினமாக முதல்முதலாக பட்டிருப்பு தொகுதி தமிழரசுக் கட்சியே அனுஷ்டித்தது.

திரு.செல்லத்துரை அவர்கள் இளமையிலேயே தனது சமுகத்திற்கும் தமிழ் பேசும் மக்களின் முன்னேற்றத்திற்குமாக இன்றுவரை உழைத்து வருகிறார். தமிழரசுக் கட்சியின் சகல அறப்போராட்டங்களிலும் ஈடுபட்டிருக்கிறார். இதன் பயனாக தமிழரசுக் கட்சியின் தலைமையில் செயற்குழு உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டு சீரிய தொண்டாற்றி வந்திருக்கிறார். தனக்கென ஒரு குடும்ப வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ளாமல் கடந்த 50 ஆண்டுகளாக பிரம்மச்சாரியாக இன்று வரை வாழ்ந்து வருகிறார்.

தங்க ஆபரணத் தொழிலில் ஈடுபட்டுழைத்துவரும் பொற்றொழிலாளர்களுக்கான சங்கம் ஒன்றினை அமைத்து அவர்களுக்குரிய வழிகாட்டியாகவும் விளங்கி வருகிறார்.

1955 ஆம் ஆண்டு 'தாயகம்' என்ற ஒரு பத்திரிகையையும் தொடங்கி நடத்தினார். வரலாற்று நூல்களை ஆராய்ந்து பல அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை இலங்கையின் பல

### இரா.பத்மநாதன்

பத்திரிகைகளுக்கும் பிரசுரிப்பதற்கேற்ப வழங்கி வருகிறார். திரு.செல்லத்துரை அவர்களுடைய 'தாயகம்' பத்திரிகையை கண்ணுற்ற எழுத்துல ஜாம்பவனான திரு.எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் இவ்வாறு பாராட்டுரை வழங்கியுள்ளார்.

"தம்பி செல்லத்துரை உன் 'தாயகம்' கண்டேன். உன்போன்று உணர்ச்சியுள்ளோர் ஆயிரம் பேர் உண்டானால் அவர்களை நம்பி ஈழம் பெற்றிடலாம்!"

**(வளரும்)**

# வாரம் ஒரு வார்த்தை!

### தென்கச்சி – கோ.சுவாமிநாதன்

## 41.கொட்டாவி

நீங்க சிரிச்சா இந்த உலகமும் சிரிக்கும்! அப்படின்னு சொல்றது உண்டு. அதே மாதிரி இன்னொன்னும் சொல்லலாம்.

"நீங்க கொட்டாவி விட்டா இந்த உலகமும் கொட்டாவி விடும்!" ஆமாம் சார்! இது உண்மைதான்!

இது ஒரு தொற்று வியாதி மாதிரி... ஒருத்தர் வாயைத் திறக்கறதைப் பார்த்துட்டா... உடனே நமக்கும் ஒரு உந்துதல் வந்துடுது... கொட்டாவி விடறோம்!

"இந்த கொட்டாவியை பத்தி நினைச்சாவே கொட்டாவி வந்துடுது"ங்கறார் ஓர் ஆராய்ச்சியாளர். அவரு பேரு Dr.Provine அவரு தன்னுடைய ஆராய்ச்சிக்குன்னு எடுத்துக்கிட்ட விஷயம் கொட்டாவி!

கொட்டாவியைப் பத்தி படிச்சாவே கூட கொட்டாவிவந்துடுதுங்கறார் அவர்.

ஒரு கூட்டத்துலே பலபேருகிட்டே கொட்டாவி சம்பந்தமான விஷயத்தை குடுத்து படிக்கச் சொல்லியிருக்கார்.

அப்படி படிக்கறப்பவே 75 சதவீத பேரு கொட்டாவி விட்டாங்களாம். மத்த விஷயத்தை படிக்கறப்போ 20 சதவீத பேருதான் கொட்டாவி விட்டாங்களாம்! இந்த தகவலைக் கேக்கறப்போ எத்தனை பேரு கொட்டாவி விடறீங்களோ? யாருக்குத் தெரியும்?

இது ஒரு வினோதமான செய்கையாதான் இருக்கு! இதுபத்தின முழு விவரமும் இன்னமும் நம்மாலே கண்டுபிடிக்க



முடியலே! ஏன்னா இதைப் பத்தின ஆராய்ச்சியே ரொம்ப குறைச்சல்!

எத்தனையோ முக்கியமான விஷயங்கள் இருக்கறப்போ... இதைபத்தி யாரு சார் அவ்வளவு அக்கறையா ஆராய்ச்சி பண்ணப் போறாங்க! இருந்தாலும் ஒரு சில பேர் இதுலே ரொம்ப மும்முரமா இருக்காங்க! Dr.Provine மாதிரி!

பொதுவா கொட்டாவியைப்பத்தி இதுவரைக்கும் எல்லாரும் நம்பிக்கிட்டிருக்கிறது என்ன தெரியுமா?

ரத்தத்துலே ஆக்சிஜனை அதிகப்படுத்தறதுக்கோ அல்லது ரத்தத்துலேயிருந்து அதிகப்படியான கார்ப்பன்டை ஆக்ஸைடை வெளியேத்தறத்துக்கோ உண்டான ஒரு சுவாசப் பயிற்சிதான் கொட்டாவி இப்படித் தான் எல்லாரும் நினைக்கிறாங்க... அது கொஞ்சம் பொருத்தமாவும் தெரியிது.

ஆனா Dr. Provineம் இன்னொருத்தரும் இதைப் பத்தி சில சோதனையெல்லாம் பண்ணி பார்த்துட்டு... இந்த கருத்து அவ்வளவு சரியா தெரியலே-ன்னுட்டாங்க! ஏன்னா..

சுத்தமான ஆக்ஸிஜனை சிலபேரு சுவாசிக்கிற மாதிரி செஞ்சி பாத்திருக்காங்க... அவங்கள்லாம்கூட அதிகமா கொட்டாவி விடறாங்களாம்.

அப்படின்னா ஆக்ஸிஜன் தேவைக்காக அவங்க கொட்டாவி விடறாங்கன்னு நினைக்கறது தப்புதானே!

மனுஷன் பொறந்து 5 நிமிஷத்துலேயிருந்து இதை ஆரம்பிச்சுடறான். அது மட்டுமா? மிருகம். பறவை மீன்லாம் கூட கொட்டாவி விடுது!

மனுஷன் விடற கொட்டாவியும்- மாடு விடற கொட்டாவியும் ஒண்ணா? இது ஒரு முக்கியமான கேள்வி.

தூண்டுதல் உணர்வு (Stimulation) குறைவா இருக்கறப்போ மனுஷன் கொட்டாவி விடறான்.

முக்கியமான ஒண்ணு நடக்கப் போவுதுங்கற எதிர்பார்ப்புலே மிருகங்கள் கொட்டாவி விடுது!

மிருகங்களை பொருத்தவரைக்கும் இது உறுதியா தெரியிது! எப்படின்னா... அதுலாம் கொட்டாவி விடறப்போ இதய துடிப்பு அதிகமாவது! ரத்த அழுத்தம் அதிகமாவது! இது அந்த மிருகத்தை செயல்பட தயார் நிலைக்குக் கொண்டு வந்துடுது!

மனுஷன் எப்படின்னா... சாவகாசமான சூழ்நிலையிலே கொட்டாவி விடறான். இப்ப உதாரணத்துக்கு ஒருத்தர் கூட்டம் குறைவா உள்ள டிரெயின்லே நேரம் கழிச்சி வீடு திரும்பிக்கிட்டிருக்கார்; அந்த சமயத்துலே வாயை திறப்பார்!

சிங்கம் எப்படி தெரியுமா? சாப்பாட்டு நேரம் நெருங்கறப்போ கொட்டாவிடும்!

Siamese fighting fish எப்படின்னா.. அது தனியா இருக்கறப்போ கொட்டாவி விடறதில்லே! கூட்டமா இருக்கறப்போ கொட்டாவி விடுது!

தூண்டுதல் உணர்வு குறைவனாலே கொட்டாவி விடறோம்ங்கறது ஒரு கருத்து. அதே மாதிரி இன்னொரு கருத்து; முழிச்சிக்கிட்டிருக்கணும்ங்கற சூழ்நிலையிலே ஒரு உந்துதலை குடுக்கறதுக்காக உடம்பு செய்யற உதவி கொட்டாவி! அதுக்கு உதாரணம்: படுக்கையிலே இருக்கறவங்க கொட்டாவி விடறது குறைச்சல். ஆனா அதே நேரத்துலே... நடுராத்திரி தாண்டி கார் ஒட்டிக்கிட்டிருக்கறவங்க அதிகமா கொட்டாவி விடறாங்க!

இந்த கருத்துலேயும் ஒரு குழப்பம் இருக்கு. எப்படின்னா ஏற்கனவே தயார் நிலையிலே இருக்கறவங்களுக்கும் கொட்டாவி வருதாம்! உதாரணம் பரீட்சை எழுத உக்காந்தா சில பிள்ளைங்களுக்கு கொட்டாவிதான் முதல்லே வருது... அதுக்கப்புறம்தான் Answer வருது!

ஆகையினாலே 'கொட்டாவி'யைப் பத்தி இதுதான் உண்மை அப்படின்னு உடல் ரீதியான ஒரு விளக்கத்தை இன்னமும் கொடுக்க முடியலே! ஏன்னா அது எந்த நேரத்துலே வரும்ன்னு உறுதியா சொல்ல முடியலே சார்!

அடிக்கடி கொட்டாவி வருதுன்னு சொல்லிக்கிட்டு ஒருத்தர் டாக்டர்கிட்டே போனார்.

அவரு இவரை நாற்காலியிலே சாய்ச்சி உட்கார வைச்சு வாயைத்திறங்கன்னார். இவரு திறந்தார். ஏதோ கொஞ்சம் மருந்தை வாயிலே போட்டு மூடிக்கிங்கன்னு சொல்லிபுட்டு போயிட்டார். கொஞ்ச நேரம் கழிச்சி திரும்பி வந்தார். இவரு திறந்த வாயை மூடவே இல்லை! இன்னும் அகலமாக தொறந்துட்டார்.

"ஏன் சார்... பெரிய கொட்டாவியா வருதா"ன்னு கேட்டார் டாக்டர். இவரு ரொம்ப சிரமப்பட்டு வாயை அசைச்சு பதில் சொன்னார்.

"கொட்டாவி எப்பவோ போயிட்டுதுங்க.. இப்ப நான் வாயைத் திறந்தது உங்க கையிலே இருக்கிற பில்லைப் பார்த்துட்டு!"ன்னார்!

**(வார்த்தைகள் தொடரும்)**

# ஸ்போர்ட்ஸ்

## இங்கிலாந்தைவிட இந்தியா பாதுகாப்பானது "என்கிறார் மார்க்ராம்பிரகாஷ்



இங்கிலாந்தை விட இந்தியாவே பாதுகாப்பானது என்று இந்திய சுற்றுப் பயணம் குறித்து இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் மார்க் ராம்பிரகாஷ் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இங்கிலாந்து, அங்கு 3 டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் போட்டித் தொடர்களில் விளையாடவுள்ளது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கத் தாக்குதலைத் தொடர்ந்து இங்கிலாந்து வீரர்கள் சிலர் இந்தியப் பயணத்தின் போதான பாதுகாப்புக் குறித்துக் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் மார்க் ராம்பிரகாஷ் பாதுகாப்பு குறித்து கவலை தனக்கு எதுவுமில்லை என்றும் இங்கிலாந்தை விட இந்தியாவே பாதுகாப்பாக இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

இங்கிலாந்தின் சர்ரே அணியைச் சேர்ந்த வலதுகைத் துடுப்பாட்ட வீரரான ராம்பிரகாஷிற்கு 4 வயதில் குழந்தை உள்ளது. இவரது மனைவி தற்போது கர்ப்பமாக இருக்கிறார்.

## மிகப் பெரிய உலகக் கோப்பைப் போட்டி

**தெ**ன்னாபிரிக்காவில் 2003ம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கோப்பைப் போட்டி, இதுவரை நடத்தப்பட்ட போட்டிகளைவிட மிகப் பெரிய உலகக் கோப்பைப் போட்டியாகக் கருதப்படும்.

இந்த உலகக் கோப்பைப் போட்டியானது 43 நாட்கள் நடைபெறவுள்ளது. இந்த 43 நாட்களில் 54 போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் 14 அணிகள் கலந்து கொள்கின்றன.

கடைசியாக உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி 1999ம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்றது. இப்போட்டியைக் காட்டிலும் அடுத்த உலகக் கோப்பைப் போட்டியில் 2 அணிகள் அதிகமாக விளையாடுகின்றன. இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கோப்பை போட்டியில் மொத்தம் 42 ஆட்டங்கள் மட்டுமே நடைபெற்றிருந்தன.

அடுத்த உலகக் கோப்பைப் போட்டியில் முதல் ஆட்டத்தில் போட்டியை நடத்தும் தென்னாபிரிக்காவும் மேற்கிந்தியத் தீவுகளும் மோதுகின்றன.

அடுத்த உலகக் கோப்பைப் போட்டியின் போது இலங்கை தனது முதலாவது ஆட்டத்தில் நியூஸிலாந்தையும், இந்தியா தனது முதலாவது ஆட்டத்தில் பலம் குறைந்த நெதர்லாந்தையும் பாகிஸ்தான் தனது முதல் ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான அவுஸ்திரேலியாவையும் எதிர்த்தாடுகின்றன.

## கங்குலியின் விரக்திப் பேட்டி

**தெ**ன்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் செய்திருக்கும் இந்தியா அங்கு தென்னாபிரிக்கா, கென்யா ஆகிய அணிகளுடன் முத்தரப்பு ஒருநாள் போட்டியில் கலந்து விளையாடியது.

இறுதிப் போட்டியில் தென்னாபிரிக்காவிடம் கோப்பையைப் பறிகொடுத்ததன் மூலம் தொடர்ச்சியாக 9வது முறையாக இறுதிப்போட்டியில் கோப்பையைக் கோட்டை விட்டுச் சாதனை படைத்துள்ளது இந்தியா.




தென்னாபிரிக்காவுடனான இறுதிப் போட்டியில் இந்தியா தோல்வியடைந்ததற்குக் காரணம் தான் தான் எனப் பேட்டி யொன்றில் கூறியுள்ளார் இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் சௌரவ் கங்குலி. அந்தப் பேட்டியில் கூறியதாவது:

"இந்தியாவின் தோல்விக்கு முழுக்க முழுக்கக் காரணம் நான்தான். கிரிக்கெட் சபையிடம் பேசி பல இளைஞர்களுக்கு வாய்ப்பளித்தேன். அவர்கள் அதைக் கோட்டை விட்டுவிட்டார்கள்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் செவாக், ரிதீந்தர் சிங் சோதி, யுவ்ராஜ் சிங் ஆகிய பேட்ஸ்மன்கள். இளம் துடுப்பாட்ட வீரர்களுக்கு வாய்ப்புக் கொடுத்ததைவிட, இளம் பந்து வீச்சாளர்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்க வேண்டும்.

ஶ்ரீநாத், கும்ப்ளே, பிரசாத் ஆகியோருக்கு வயதாகி விட்டது. இங்கிலாந்து அணியுடன் விளையாடும் போது கப்டனாக இருக்க எனக்கு விருப்பமில்லை" என்று விரக்தியுடன் தெரிவித்துள்ளார்.



"**இ**ன்றைக்குப் பின்னேரம் சித்தப்பா வீட்டுக்குப் போய் வருவோம்" என்றாள் விஜயா.

அவள் அப்படித் தீர்மானமாகக் கூறிவிட்டு நகர்ந்தது வாசனுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. நமக்கு என்ன வேலை இருக்கிறது என்பதையே விசாரிக்காமல் முடிந்த முடிவாகச் சொல்லிக் கொண்டு போகிறாள் என்பதை நினைக்கக் கோபமாக வந்தது.

"ஏன் இப்ப திடீரென்று?" என்றான்.

"கன நாளாய்ப் போகவில்லை. நாங்கள் கடைசியாகப் போய்வந்த பிறகு சித்தப்பாவும் சித்தியும் இரண்டு முறை இங்கே வந்து போய்விட்டார்கள். நாங்கள் வருவதில்லை என்று அவவுக்கு ஒரே குறை. இன்றைக்கு நாங்கள் எப்படியும் போகவேணும்."

அவள் முஞ்சை நீட்டி வைத்துக் கொண்டு சொல்லியது அவனுக்கு மேலும் கோபத்தை ஏற்படுத்தியது. "இப்படித் திடீரென்று போகவேணும் என்றால், எனக்கு என்ன வேலை இருக்கு என்று பார்க்க வேண்டாமே? இன்னொரு நாளைக்குப் போகலாம். எனக்கு இன்றைக்கு ஏலாது."

"இன்றைக்குப் பின்னேரம் உங்களுக்கும் ஒரு வேலையும் இல்லைத்தானே... இன்றைக்குத்தான் போகவேணும்."

அவள் மீண்டும் பிடிவாதமாகச் சொல்ல, இவனுக்குச் சினம் எகிறியது. அவளுக்கு வசதியான ஒரு நாளில் அவளே எங்க போவது என்பதைத் தீர்மானித்துக் கொள்கிறாள் என்பதைவிட, யார் வீட்டுக்காவது போக வேண்டும் என்பதைத் தண்டனையாக உணருகிற தன் மனநிலைதான் சினமாக வளர்கிறது என்பதை அவன் உணர்ந்திருந்தான்.

"எனக்கு ஏலாது. நீ போவதென்றால் போ..." விஜயாவுக்குச் சட்டென்று கண்களில் நீர் கோர்த்தது. கோபத்தில் உதடுகள் துடித்தன. "உங்களுக்குச் சுயநலம். என்னுடைய ஆட்கள் என்றால் வரமாட்டீர்கள்... உங்களுக்கு உங்களுடைய விஷயங்கள்தான் முக்கியம்..." மேலும் பேசமுடியாமல் அவள் விக்கினாள்.

அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவளுடைய ஆட்கள், தன்னுடைய ஆட்கள் என்ற எந்தப் பிரிவினையும் அவன் மனதில் இருக்கவில்லை. ஒருவேளை, தானறியாமல் தன் செய்கைகளில் அப்படி ஒரு பிரிவினை வெளிப்படுகிறதோ என்ற பயம் வந்தது. உண்மையில், அவள் என்றால், வாசனுடைய சொந்தக்காரர்களிடம் போவதில் எந்தத் தயக்கமும் காட்டுவதில்லைத்தான். ஆனால் அவனைப் பொறுத்தவரை தன் சொந்தக்காரர்கள் என்றாலும் சரி, அவளுடைய சொந்தக்காரர்கள் என்றாலும் சரி, வீடுகளுக்குப் போவது உறவு கொண்டாடுவது என்பவற்றில் ஒதுங்கித்தான் இருப்பான். அவளுடைய குற்றச்சாட்டு அவளைப் பொறுத்தவரை நியாயமானதுதானோ என்று யோசிக்க, இவனது இயலாமை இன்னும் ஆத்திரத்தைக் கொடுத்தது.

"ஓம் நான் சுயநலக்காரன்தான். ஒரு இடமும் வர ஏலாது போ" என்று கத்தினான்.

அவளும் பதிலுக்கு, "நான்தான் பிழைவிட்டிட்டன். தெரியாமல் வந்து மாட்டுப் பட்டிட்டன். பெரிய தப்புச் செய்துபோட்டன்" என்று அழுதுகொண்டே ஓடிப்போய்க் கட்டிலில் குப்புற விழுந்தாள்.

இவனுக்கு உடனடியாக ஆத்திரம்தான் பெருகியது. என்னுடைய விருப்பம் என்ன, இயலாமை என்ன... எதையுமே எண்ணிப் பார்க்கிறவளாக இல்லை. தன்னுடைய விருப்பத்துக்கு இசைந்து போகாவிட்டால் உடனே குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசுகிறாள்... இவளோடு தொடர்ந்து எப்படிக் குடும்பம் நடத்துவது? சே..! என்று சலித்துக் கொண்டான்.

சிறிது நேரம் சென்றது.

தன்னை நம்பி வந்தவள் குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருப்பதைப் பார்க்க மனது வெடித்தது. தான்தான் பிழைவிட்டுவிட்டதாக எண்ணிக் கழிவிரக்கம் கொண்டான். ஆனாலும் சென்று அவள் முதுகைத் தடவி, "வா, எழும்பு சித்தப்பா வீட்டுக்குப் போய்வரலாம்" என்று சொல்லமுடியவில்லை. அப்படிப் போனால்கூட, இப்படியே அழுது அடம்பிடித்தால், எந்நாளும் நினைத்த இடத்துக்கு இவனைக் கூட்டிச் சென்றுவிடலாம் என அவள் எண்ணிவிடுவாள் என்பது இவனுக்குத் தயக்கத்தைக் கொடுத்தது. 'எனக்கு விரும்பாததைச் செய்ய அவள் என்னை வற்புறுத்தக்கூடாது. அதுபோல நானும் அவளை வற்புறுத்தக் கூடாது... அதுதானே சுதந்திரம்?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டான்.

அழுதுகொண்டே அவள் யோசித்தாள். 'அவன் அப்படிப் பிரிவு காட்டி யோசிக்கிறவனில்லைத்தான். நான் அப்படிக் குத்தலாகப் பேசியிருக்கக்கூடாது. ஆனால், அவன் விருப்பப்படி எல்லாவற்றையும் செய்ய நான் தயாராயிருக்கும்போது, என் விருப்பத்துக்கு வர அவன் ஏன் தயங்க வேணும்? இப்பகூட வந்து 'போகலாம் வா' என்று எழுப்ப அவனுக்கு மனமில்லை. எதுக்கும் கடைசியில் நான்தான் விட்டுக் கொடுக்க வேணும்..." அவள் எழும்ப மனமின்றிப் படுத்திருந்தாள்.

## சிக்கல் ஏன்?

தூரத்தில் யாரோ பாடுவது கேட்டது.

வாசன் வீட்டுக்கு வெளியே வந்தான். 'என்னால் முடியாததை எல்லாம் இவள் ஏன் வேறுமாதிரி விகல்பமாக எடுத்துக்கொள்கிறாள். கோபமாகப் பதில் சொல்லக் கூடாது என்று எவ்வளவுதான் யோசித்தாலும், அவள் கேட்கும்போது ஏன் எனக்குப் பொறுமையாக விளக்க முடியவில்லை. என்னால் இயலாததைத் தயவு செய்து கேளாதே என்று ஏன் அவளுக்குப் புரிய வைக்க முடியவில்லை. இப்படி வார்த்தையால் குத்திக் குதறி அவளை அழவைப்பது என்ன ஒரு குரூரம்! உண்மையில் நான் இத்தனை குரூரமானவனா?

ஏன் சாதாரணமானவர்கள் போல நம்மால் வாழ முடியவில்லை. ஒருவரையொருவர் புரிந்துகொள்வது ஏன் இத்தனை சிக்கலாக இருக்கிறது? இயல்பாக வாழ ஏன் நமக்குக் கொடுத்துவைக்கவில்லை? இப்போது அந்தப் பாடல் தெளிவாகக் காதில் விழுந்தது. மனதில் எந்த விகல்பமுமில்லாமல் பறவைகள் போலவும் பூக்கள் போலவும் அந்த எளிமையான வாழ்க்கை வாழும் மனிதர்களும் இருக்கிறார்களே...

அதோ அந்தப் பாடல்.

**குட மல்லிகை பூத்தது போல்**
**கொத்துக் கொத்தாய்**
**பூத்திடுவோம்**
**முள்ளும் முறிந்திடாமல்**
**முறிந்த கொப்பும் வாடிடாமல்**
**கல்லு முள்ளு குத்திடாமல்**
**கட்டழகாய் வாழ்ந்திடுவோம்...**

**(நாட்டார் பாடல்)**

## சிந்தியா பதில்கள்

**★ இவ்வளவு கால அனுபவத்துக்குப் பின்னும், அரசாங்கம் மாறிவிட்டால் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சனைகள் தீர்ந்துவிடும் என்பது மாதிரியல்லவா எல்லாத் தனியார் பத்திரிகைகளும் ஊடகங்களும் செய்தி வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன?**

எம்.எம்.எம்.இர்ஃபான், புத்தளம்.

அந்தந்த நேரப் பரபரப்புக்காக மக்களை ஆவேசப்படுத்த எழுதிக் கொண்டிருப்பவர்கள் அவர்கள். அவர்களிடம், "என்ன தீர்வைத்தான் நீங்கள் மக்களுக்குச் சிபார்சு செய்கிறீர்கள்?" என்று கேட்டுக் குளறுபடியையெல்லாம் உண்டாக்கி விடாதீர்கள். மக்களின் அவலங்களை நம் பத்திரிகையாளர்களும்கூட எப்படிப் பார்க்கிறார்கள் என்பதை அறிவதற்கு ஓர் மேற்கு உதாரணம்: கொங்கோ யுத்தம் நடந்தபோது, தப்பிப்பதற்காகக் காத்துக் கொண்டிருந்த பெல்ஜிய அகதிகளிடம் பி.பி.சி. டெலிவிஷன் நிருபர் சத்தமாகக் கேட்கிறார், "இங்கே யாரும் இங்கிலீஸ் தெரிந்த கற்பழிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்களா?"

⊙⊙⊙

**★ நால்வரின் கூட்டு எப்படி?**

வி.திலோத்தமை, கொழும்பு-13.

ஒருவர் அடுத்தவன் மனைவியைத் தொட்டு, அவன் துரத்தி வர காருக்கடியில் ஒளிந்திருந்து உயிர் தப்பியவர்... அடுத்தவர், நம்மவனையே யாராவது கொலை செய்தால் நமக்குப் பாராளுமன்ற வாழ்வு கிடைக்கும் என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்து அதற்குப் பாட்டுப் பாடிக் கொண்டிருப்பவர்... இன்னொருவர், குண்டு வைக்கக் கொழும்பு வந்தவனை ஆமிக்குக் காட்டிக் கொடுத்துக் கொலை செய்த பாவத்திற்காக வன்னியாற்று நீரைத் தலைக்குத் தெளித்துப் புனிதமடைந்து கொண்டிருப்பவர்... மற்றவர், ஒரு இன்டர் கூலரை எடுத்து முடிப்பதற்குள் அடுத்த இன்டர் கூலருக்கு வழிகாட்ட வல்ல வன்னிக்காட்டின் மகாசக்தியை திடீர் வாழ்வு கிடைத்த திக்பிரமையோடு தெண்டனிட்டு நிற்பவர்...

உங்களுக்குச் சொந்தமாக அறிந்து கொள்ள ஆர்வமிருந்தால், இவர்கள் யார் யார் என்று கண்டுபிடிக்க முயற்சி செய்யலாம். அல்லாமல், காலையில் பேப்பர் படித்துவிட்டு அலுவலகம் போய், பின்னேரம் ரி.வி. நாடகங்கள் பார்த்துவிட்டுத் தூங்குகிறவராக இருந்தால், உங்களுக்குப் பெரும்பாலான தமிழ்ப் பத்திரிகைக்காரர்கள் வழிகாட்டுவார்கள். 'நாடு நலம் பெற நால்வர் கூட்டுக்கே எங்கள் ஓட்டு!' மீண்டும் அடுத்த தேர்தலில் சந்திக்கலாம்.

⊙⊙⊙

**★ முன்னணி நடிகர்களில் பிரசாந்த் எப்படி? அவர் நடித்த 'சாக்லெட்' படம் பார்த்தீர்களா?**

எம்.ஜெயகாந்தி, கண்டி.

நன்றாக ஆடுகிறார், அடிதடி செய்கிறார், அழகாக இருக்கிறார். சாக்லெட் படம் ஓடுவதென்னவோ மும்தாஜின் 'மல மல மல மலை'க்காகவல்லவா...!

⊙⊙⊙

**★ சிந்தியா, "பெண்கள் உலகமே நரகமே" என்று ஒரு பாடலின் அடி இருக்கிறதே. இதன் மூலம் யாது விளங்குகிறீர்?**

மு.பரமநாதன், அக்கரப்பத்தனை.

மூடனின் கதை அப்படித்தான் இருக்கும்!

⊙⊙⊙

**★ எனக்கு யாரேனும் துரோகம் செய்துவிட்டதாக நான் உணர்ந்தால், எனக்குள் கோபமும், பழிவாங்கும் வெறியும் மிகுதியாக ஏற்படுகின்றன. அதே நினைப்பிலேயே பல நாட்கள், மாதங்களாகத் தத்தளிக்கிறேன். இதிலிருந்து மீள பலவழிகளில் முயற்சித்தும் பழிவாங்கும் வெறியை என்னால் குறைத்துக் கொள்ள முடியவில்லை. இதை எவ்வாறு குறைப்பது?**

என். நாகேந்திரன்-திருகோணமலை.

'எனக்குள் இருக்கும் இது கெட்டது' என்று உணர்ந்து கொண்டிருக்கிறீர்களே. அதுவே நாளடைவில் உங்களிடம் மாற்றத்தைக் கொண்டுவந்துவிடும். கவலை வேண்டாம். இப்படியான சிக்கல்களுக்குப் பரிகாரம் சொல்வதில் கில்லாடி, நம்மில் பலரும் தவறாகவே புரிந்து வைத்திருக்கும் ரஜனீஸ் என்ற அந்த 'செக்ஸ் சாமியார்'தான். கோபமோ, துக்கமோ, பழிவாங்கும் உணர்ச்சியோ, எது ஏற்பட்டாலும் அதனுடன் முழுமையாக உணர்வுபூர்வமாக இருங்கள். அப்பொழுதுதான் அதைக் கடந்து செல்ல முடியும் என்கிற அந்த செக்ஸ் சாமியர் (ஓஷோ தான் அவர் விரும்பும் பெயர்) அதற்குத் தன் பாணியிலேயே தரும் சிரிப்புத் துணுக்கு இது:

அலுவலகத்திலிருந்து இடையில் திடீரென்று திரும்பிய கோல்ட் பேர்க், தன் மனைவி பக்கத்துவீட்டு கோஹன் என்பவருடன் படுக்கையில் ஒன்றாக இருப்பதைக் கண்டு திடுக்கிடுகிறார். ஆத்தரமும் கோபமும் அடைந்து, பக்கத்துவீட்டுக்கு ஓடி, கோஹனின் மனைவியைக் கூப்பிட்டு, "இதோ பார், இப்பொழுது உன் கணவனும் என் மனைவியும் என் வீட்டில் சேர்ந்து படுத்திருக்கிறார்கள்" என்று கத்தினார். அதற்கு அவள், "பொறுமை, பொறுமை, சற்று அமைதியாக இருங்கள். முதலில் அமர்ந்து, ஒரு கப் டீ குடியுங்கள்" என்று உபசரித்தாள். பிறகு டீயைக் குடித்துக் கொண்டே, அவள் முகத்தைப் பார்த்தார். அதில் ஒரு குறும்பு தெரிந்தது. பிறகு அவள் மெல்ல, "கோஹன் செய்த செயலுக்கு, நாம் இருவரும் சேர்ந்து பழிவாங்கினால் என்ன?" என்று வித்தியாசமாகக் கேட்டாள். உடனே, இருவரும் தனி



அறைக்குச் சென்று, காதல் செய்தார்கள். பிறகு களைப்பாற டீ குடித்துவிட்டு, பிறகு மறுபடியும்... பிறகு டீ... பிறகு மறுபடியும்... இப்படியாக அவர்களை மீண்டும் மீண்டும் பழிவாங்கினார்கள்! பிறகு, கடைசியாக டீ குடிக்கும்பொழுது, அவள் மீண்டும், "ஏன் அவர்களை இப்பொழுதும் பழிவாங்கலாமா?" என்று ஆவலோடு கேட்டாள், அதற்கு அவர், "உண்மையைச் சொன்னால், இப்பொழுது எனக்கு அந்த பழிவாங்கும் உணர்ச்சியே போய்விட்டது!" என்றார்.

⊙⊙⊙

**★ காதலைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?**

எச்.எம்.றிபாஜி, திருகோணமலை.

புதுமைப்பித்தனின் 'செல்லம்மாள்' கதையை தேடிப் படிக்கவும்.

**★ சிந்தியா, கொள்ளையர்கள் கூட்டுச் சேர்வது நமக்குப் பலமானது இல்லை என்று ஒரு பதிலில் சொல்லியிருந்தீர்கள். கூட்டுச் சேர்வதன் மூலம் நல்லது நடக்குமென்றால் அது நல்லதில்லையா?**

இரா.சிவனேசன், யாழ்ப்பாணம்.

நீங்கள் சொல்வது சரி. கொள்ளைகள் அடித்தும், அதுவும் முடியாதவர்கள் சும்மா தத்துக்கல்லாக இருந்தும் தத்தம் முகங்களைக் கெடுத்துக் கொண்டவர்கள், ஒற்றுமை முகத்தைக் காட்டிக் கொண்டு உலா வர வேண்டியது நல்லதுதான், அவர்களுக்கு!

⊙⊙⊙

**★ தங்களுடைய தோல்விகளுக்கு மற்றவர்களைக் குறை கூறுபவர்களைப் பற்றி...?**

மார்க்கண்டு வாணி, கிரான்.

விளையாட்டைப் பொறுத்தவரையில் மற்றவர்களின் திறமையால்தான் நாம் தோல்வியடைந்தோம் என்றுசொல்வதற்குப் பெருந்தன்மை வேண்டும். மற்றைய நாட்டு அணித் தலைவர்களெல்லாம் பெருந்தன்மையாகப் பேசும்போது நம்நாட்டுக் கிரிக்கெட் அணித் தலைவர்கள் அவ்வாறு பேசுவதில்லையே என்பது என்னை உறுத்தும் விஷயம். "நம் இடைநிலை துடுப்பாட்டவீரர்கள் சரிவர விளையாடவில்லை" என்றோ, "ஓடிப் பந்து பிடிக்க முடியாமல் நம் சீருடைகள் இறுக்கமாக இருந்தன" என்றோதான் சொல்கிறார்கள். மற்றவர்களைக் குறை கூறுவது மட்டுமல்ல; மற்றவர்கள் திறமையைப் பாராட்டாமலிருப்பதும் அவ்வளவு சரியல்ல என்றே நினைக்கிறேன்.

⊙⊙⊙

**★ உங்களுக்குப் பிடித்தமான பொன்மொழி ஏதாவது..?**

ஷகிலா வேலுப்பிள்ளை, நானுஓயா.

*"எனக்கு முன்னால் நடக்காதே*
*என்னால் பின்பற்ற முடியாது*
*எனக்குப் பின்னால் நடக்காதே*
*என்னால் வழிநடத்த முடியாது*
*என்னுடன் நடந்து என் நண்பனாக*
*மட்டும் இரு"*

அதைச் சொன்னவர் எழுத்தாளர் ஆல்பர் காம்யு.

உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்தை இரவு வேளையில் சென்றடைந்த விக்கிரமாதித்த மன்னனும் அமைச்சர் பட்டியும் நேராக அந்தப்புரத்தை அடைந்தனர். ஏலக்கரம்பையின் சயன அறைக்கு முன்புறம் வந்த போதே அவளுடைய அறைக்குள் இருந்து ஆண் குரல் கேட்டது. அமைச்சர் பட்டி மூலமாக அறிந்து கொண்ட தகவலின்படி அக்குரலுக்குரியவன் ஏலக்கரம்பையின் ஆசை நாயகனான அரக்கனாகத்தான் இருக்க வேண்டும் என்று நிச்சயித்த விக்கிரமாதித்தன் அவ்வறையின் கதவை முட்டி மோதி உடைத்தார்.

அவர்கள் நினைத்தபடி ஏலக்கரம்பையுடன் அரக்கன் சல்லாபித்துக் கொண்டிருப்பதைக் கண்டனர். அரக்கனைப் பிடித்து நிலத்தில் தள்ளிவிட்டு தனது உடைவாளால் மன்னன் விக்கிரமாதித்தன் அரக்கனை வெட்டிப் பிளந்தார். சற்று நேரத்திற்கெல்லாம் இரு துண்டுகளும் ஒன்றாக ஒட்டப்பட்டு அரக்கன் உயிர்பெற்றெழுந்தான். விக்கிரமாதித்த மன்னன் மீண்டும் மீண்டும் அவனைப் பிளந்து போட அவன் உயிர் பெற்றெழுந்த வண்ணமே இருந்தான்.

இக்கட்டத்தில் பட்டி இரு கூறாக வெட்டப்பட்டுக் கிடந்த அரக்கனின் உடற்பகுதிகளை அடிதலைமாறிப் போட்டார் அப்போது அரக்கனால் உயிர்பெற்றெழுந்திருக்க முடியவில்லை.

அங்கு நடைபெற்ற சம்பவங்களையெல்லாம் பார்த்த ஏலக்கரம்பை பயந்து நடுங்கி ஒரு மூலையில் பதுங்கியிருந்தாள். அவளை என்ன செய்யலாம் என்று அமைச்சர் பட்டியிடம் விக்கிரமாதித்தன் வினவினார். அவளை உடனடியாக நாடு கடத்துவதே அவளுக்குரிய தண்டனையாகும். என்று

விக்கிரமாதித்தனுடைய காடாறுமாதம், நாடாறுமாதம் நடவடிக்கைகளை விஜயன் நன்றாக அவதானித்து வந்தான். விக்கிரமாதித்தனை விட்டு பட்டி பிரிந்திருக்கும் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மன்னருடன் நெருக்கமாக பழகும் வாய்ப்பைப் பெறுவதற்கு முயற்சி எடுத்தான். விக்கிரமாதித்தன் தங்கியிருந்த சத்திரத்தை தேடிப்பிடித்து அவரைக் கண்டு கொண்டான். விக்கிரமாதித்தனும் தன்னுடன் சேர்ந்து பொழுதைக் கழிப்பதற்கு துணைவன் ஒருவன் கிடைத்து விட்டானே என்று மகிழ்ச்சி அடைந்தார். விஜயனும், விக்கிரமாதித்த மன்னன் தனிமையில் சத்திரத்தில் தங்கியிருக்கும் காலம் முழுவதும் தானும் அவருடன் தங்கியிருக்கப் போவதாக கூறினான்.

செலுத்தினார்.

கபடம் நிறைந்த விஜயன் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் தனது நண்பனிடம் கற்றவித்தையை உடனேயே பரீட்சித்துப் பார்க்க நினைத்து உரிய மந்திரங்களைச் சொல்லி தனது உயிரை விக்கிரமாதித்த மன்னனுடைய உடலுக்குள் செலுத்தினான். விக்கிரமாதித்த மன்னன் உடலை எடுத்துக் கொண்ட விஜயன் பெரும் மகிழ்ச்சி அடைந்தான்.

காலதாமதம் செய்யாமல் விஜயன் தன்னுடைய சொந்த உடலை தீயிலிட்டு சாம்பலாக்கினான். தானெடுத்த மன்னரின் உடலுடன் உடனடியாக உஜ்ஜயினி மாகாண பட்டணம் செல்லப் புறப்பட்டான்.

உஜ்ஜயினி மாகாண பட்டண எல்லையில்

## கூடுவிட்டுக் கூடுபாய்ந்த விக்கிரமாதித்தன்

இருவரும் ஒரு நாள் காட்டில் வேட்டையாடச் சென்றனர். வேட்டையாடிக் களைத்து போய் இருவரும் ஓர் ஆலமரத்தின் நிழலில் படுத்துறங்கினர்.

விக்கிரமாதித்தனுக்கு கூடுவிட்டுக் கூடுபாயும் தந்திரம் தெரிந்தது. இவ்வித்தையை தனக்கும் கற்றுத் தரும்படி விஜயன் விக்கிரமாதித்தனிடம் கேட்டுக் கொண்டிருந்தான். ஆலமரத்தடி நிழலில் இருவரும் படுத்துறங்குவதற்கு முன்னர் விஜயன் இதுதான் சரியான சந்தர்ப்பம் என்று கருதி கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையைக் கற்றுத் தரும்படி கேட்டுக் கொண்டான். அவ்வித்தைக்குரிய மந்திரத்தையும், எவ்வாறு அதனைப்

நின்றிருந்த காவலர்கள் தங்கள் மன்னர் நகருக்குள் பிரவேசிப்பதைக் கண்டு உரிய மரியாதை செய்துவிட்டு அமைச்சர் பட்டியிடம் தகவல் சொல்ல ஓடிச் சென்றனர்.

காடாறு மாதம், முடிவதற்கு இன்னும் பல நாட்கள் இருக்கும் வேளையில் மன்னர் விக்கிரமாதித்தன் நகருக்குள் பிரவேசிக்கிறார் என்பதை அறிந்த அமைச்சர் பட்டி துணுக்குற்றார். ஏதோ சூழ்ச்சி நடைபெற்றிருக்கிறது என்று அவர் உள்மனம் கூறியது.

அரண்மனைக் காவலர்களை ஒன்று கூட்டிய பட்டி "நகருக்குள் பிரவேசித்திருப்பது உண்மையான விக்கிரமாதித்த மன்ன

# மன்னாதி மன்னன் 81

கூறினார். வேதாளத்தை அழைத்து ஏலக்கரம்பையை கானகத்தில் விட்டுவிடும் படி மன்னர் விக்கிரமாதித்தன் கூறினார்.

காளிகாம்பாளின் அனுக்கிரகப்படி விக்கிரமாதித்தன் காடாறு மாதம் முடியாமல் உஜ்ஜயினி மாகாணப்பட்டணத்தை வந்தடைந்தது குற்றமாகும் என்பதனால், அமைச்சர்



பட்டியையும் அழைத்துக் கொண்டு, அரக்கனைக் கொன்ற தோஷம் நீங்குவதற்கான கிரியைகளை இரவோடு இரவாக செய்து முடித்து விட்டு காளிகாம்பாளின் ஆலயம் சென்று இருவரும் வணங்கினார்கள். உரிய காலக்கெடு முடிவடைவதற்கு முன்னர் நகருக்கு வந்தமைக்காக மன்னித்தருளும்படி விக்கிரமாதித்த மன்னர் வேண்டிக் கொண்டார்.

பட்டி விக்கிரமாதித்தனிடம், காடாறு மாதம் முடிவடைய இன்னும் 5 மாதங்கள் இருக்கின்றன. எனவே தாங்கள் மீண்டும் காட்டுக்குச் செல்ல வேண்டும் தாங்கள் திரும்பும்வரை நான் உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்திற்குச் சென்று அரச பரிபாலனம் செய்கிறேன் அண்ணா" என்று கூறினார். விக்கிரமாதித்த மன்னனும் அமைச்சர் பட்டியினுடைய யோசனையை ஏற்றுக் கொண்டார். இருவரும் காட்டுப்பாதையில் நடந்து அடுத்த ஊரின் எல்லையை அடைந்தனர். அங்கிருந்த சத்திரம் ஒன்றில் விக்கிரமாதித்த மன்னனை விட்டு விட்டு பட்டி மட்டும் அண்ணனிடம் விடைபெற்றுக் கொண்டு நாடு திரும்பினார்.

விக்கிரமாதித்த மன்னன் குருகுலத்தில் படிக்கின்ற காலத்தில் அவருடன் விஜயன் என்ற பொற் கொல்லர் வகுப்பைச் சேர்ந்த ஒருவனும் படித்தான். இருவரும் இணை பிரியாத நண்பர்களாக வாழ்ந்து வந்தனர். ஆனால் ஏனோ விஜயனைப் பற்றி பட்டிக்கு நல்லெண்ணம் கிடையாது. எனவே அவர்கள் இருவரும் ஒன்றாகப் பழகுவதை பட்டி தடுத்து வந்தார்.

பிரயோகிக்க வேண்டும் என்ற முறையினையும் கபடமறியாத மன்னன் விக்கிரமாதித்தன் விஜயனுக்கு சொல்லிக் கொடுத்தார்.

விக்கிரமாதித்தன் நன்றாக தூங்கிக் கொண்டிருந்த போது ஆலமரக் கிளையொன்றில் ஆணும் பெண்ணுமான இரு கிளிகள் சல்லாபித்துக் கொண்டிருந்தன. இதைக்கண்ட விஜயன் ஒரு கல்லை எடுத்து ஆண்கிளியைக் குறிவைத்து வீசினான். கல்லெறி பட்ட ஆண்கிளி தரையில் வீழ்ந்து துடிதுடித்துச் செத்தது. பெண்கிளியோ பரிதாபமாக அலறிய வண்ணம் ஆண்கிளியின் உடலை சுற்றிச் சுற்றி வந்து அழுது புரண்டது.

கிளியின் அழுகுரலைக் கேட்ட விக்கிரமாதித்தன் விளித்துக் கொண்டார். ஆண் கிளியைப் பறிகொடுத்த பெண்கிளி படும் துயரத்தைக் கண்டு விக்கிரமாதித்தனால் பொறுத்திருக்க முடியவில்லை. அப்பெண் கிளியின் துயரத்தை துடைப்பதற்கு ஒரே வழி தன்னுடைய உயிரை ஆண்கிளியின் உடலுக்குள் செலுத்தி சில நாட்களாவது அப்பெண்கிளியை மகிழ்ச்சியூட்ட விரும்பினார். விஜயனுக்கு தான் கற்றுக் கொடுத்த கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையை நேரடியாக பரீட்சித்துக் காட்ட நல்ல சந்தர்ப்பம் இதுதான் என்று விஜயனிடம் தனது எண்ணத்தை விக்கிரமாதித்த மன்னன் கூறினார். விஜயனிடம் தான் திரும்பி வந்து தனது உயிரை தன் உடலுக்குள் செலுத்தும் வரை தனது உடலைப் பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருக்கும்படி கூறினார். அதன் பின்னர் தன் உயிரை ஆண்கிளியின் உடலுக்குள்

ரல்ல. இதில் ஏதோ மர்மம் இருக்கிறது.

எனவே இந்த மர்மம் துலங்கும் வரை விக்கிரமாதித்தன் வேடத்தில் அங்கு வந்துள்ள போலி நபருடன் கவனமாக நடந்து கொள்ள வேண்டும்? என்று எச்சரித்தார். அந்தப் புரத்திற்கும் சென்று அரசிகளையும் எச்சரித்தார். விக்கிரமாதித்தன் என்ற பெயரில் வரும் நபர்மீது தனக்கு நம்பிக்கை இல்லை என்று கூறி அந்நபரை அந்தப்புரத்துக்குள் அனுமதியாமல் பார்த்துக் கொள்ளும் படி கூறினார்.

இத்தகைய எச்சரிக்கைகளை விடுத்த பின்னர் விக்கிரமாதித்தனை அழைத்துவர அமைச்சர் பட்டி ஊரின் எல்லையை அடைந்தார். தான் உண்மையைத் தெரிந்து கொண்டவர் என்று காட்டிக் கொள்ளாமல் வெறும் சம்பிரதாய பூர்வமாக விக்கிரமாதித்தன் உருவில் வரும் விஜயனை வரவேற்று அரண்மனைக்கு அழைத்து வந்தார்.

அரண்மனைக்கு வந்ததும் விக்கிரமாதித்தன் உருவில் இருந்த விஜயன் உடனடியாக தான் அந்தப்புரம் செல்ல வேண்டும் என்று அவசரப்பட்டான். இதற்கிடையில் அமைச்சர் பட்டியின் எச்சரிக்கையை ஏற்றுக் கொண்ட ராணிமார் தாங்கள் பன்னிரண்டு மாதங்

## இராஜகுமாரன்

களுக்கு நோன்பு நோற்றிருப்பதாகவும் எக்காரணம் கொண்டும் மன்னர் அந்தப்புரத்துக்கு வரக்கூடாது என்றும் அறிவித்து விட்டனர். போலி விக்கிரமாதித்தன் அந்தப்புரத்திற்கு செல்ல முயன்றபோது அந்தப்புரத்துத் தோழிகள் அரசர் அங்கு செல்லவிடாமல் தடுத்தும், ராணிகள் நோன்பிருப்பதாகவும் கூறி அவரை திருப்பியனுப்பிவிட்டனர்.

ஏமாற்றமடைந்த போலி விக்கிரமாதித்தன் அரச அலுவல்கள் எதனையுமே செய்ய முற்படாமல் மதுபானம் அருந்தியும், மாதர்களுடன் சல்லாபித்த வண்ணமும், காலத்தைக் கழித்தான். இதனால் பட்டியே சகல அலுவல்களையும் கவனித்துக் கொண்டார்.

இக்கால கட்டத்தில் ஆண்கிளி உருவெடுத்து ஏனைய கிளிகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்த விக்கிரமாதித்தன் கிளிக் கூட்டங்களை எத்தீங்கும் அணுகாமல் பாதுகாத்து வைத்துக் கொள்வதற்கு சில தந்திரோபாயங்களை வகுத்தார். காட்டில் இருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிளிகளை ஒன்று சேர்த்து அத்தனை கிளிகளுக்கும் தானே அரசனாக இருந்துவழிகாட்டப்போவதாகக் கூறினார். கிளிகளும் அவரை ராஜ கிளி என்று ஏற்றுக் கொண்டன. (தொடரும்)

# காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

**சத்தியக் கடதாசி:**

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:............... பெயர்:.................... ஒப்பம்:..................

**அபிமான வாசகர் போட்டியில் பத்தாவது:**
**தேர்தல் கூட்டுக்கும் கள்வர் கூட்டுக்கும் அடிப்படை ஒற்றுமை என்ன?**
**முடிவுத் திகதி நவம்பர் 30**

**நாலு** திருடர் சேர்ந்தால் பொலிஸ்காரராயிட முடியாதெண்டு சொன்னது சரிதானெண்டது எங்கட தேர்தல் கூட்டுக்கூத்தணியப் பார்த்தால் தெரியுதுங்கோ. இந்தக் கூட்டு நாடகத்த அப்பிடியே ஒரு நாட்டுக் கூத்தாக்கிப் பாக்க ஆசைப்பட்டு எழுதத் தொடங்கிட்டன். தொடங்கின பிறகுதான் அந்தக் கூத்த ஒரு இதழில முடிக்க ஏலாதெண்று கண்டன். அதிண்ர தொடர்ச்சி இது. போன தடவை அழுக்கர் தன்ர அறிமுகப் பாட்டப் பாடினார். இந்த முறை மற்றவை பாடினம் கேளுங்கோ.

கூத்தின் மற்றொரு கதாநாயகன் வினையுறு மூர்த்தியார் வினைஞசபடியே மேடைக்கு வாறார். வந்தபடியே கேக்கிறார் "என்னப்பா என்ர முஞ்சிய யாருக்கும் தெரியாதே. நான் கோட்டயும் பார்லி மென்டையும் தவிர வேற எங்கயும் விசிட் பண்ணிறதில்லையெண்டதால அப்பிடிப் புதினமாப் பார்க்கிறியள் போல. எண்டாலும் அடிக்கடி அறிக்கை விடுறனான் தானே. அட அதிலை என்ர முஞ்சி விளங்காதென்ன? சரி இப்ப கேளுங்கோ நான் யாரெண்டு. (சொன்ன வீச்சில அப்பிடியே கோட்டு பறக்க ஒற்றக்காலில சுழண்டுட்டு தலையச் சாய்த்தபடியே ஒரு லுக்விட்டுட்டு எடுத்து விட்டார் இந்தப் பாட்டை)

வினையுறு மூர்த்தி யது நானே-பெரு
வினையாய் வந்து சேர்ந்தேனே
வினை விதைத்து வைத்து விட்டு
திணை யருக்கும் வித்தை கண்டீரோ-
வீரா வேசம் கொண்ட இளைஞர் சாக -நான்
பாராளு மன்றம் செல்லக் காண்பீர்
நாலாறு மாசமாக நானும்- படு
ஜோரான அறிக்கை விட்டு வந்தேனே
நோகாமல் என்பேனா எழுதித் தள்ளும்-சனம்
நொந்து நொந்தே செத்து மடியும்-அந்தச்
சாவையும் அரசிய லாக்கி வித்து-நான்
சேர்ந்துக் கொண்டன் பெரும் சொத்து
சனத்துக்கு எதுவமே செய்யாமல்-சதக்
காசு கூட ஈ யாமல்
அரசியல் செய்வ தென்தன் ஆற்றல்-அதை
அசிங்க மெனக் கருதாதீர்
வினையுறு மூர்த்தி யது நானே-பெரு
வினையாய் வந்து சேர்ந்தேனே
வினை விதைத்துத் திணை யறுக்கும்
வித்தை காட்ட வந்தேனே-அந்த
வினையுறு மூர்த்தியது நானே
சாட்சாட் அது நானே!
அது நானே!
சர்வமுமே யிங்கு நானே!

வினையுறு மூர்த்தியார் தலையச் சிலுப்பி மேடையை உலுப்பிக் கொண்டிருக்க, அவரை கொலரில் பிடித்து கொறவை இழுவையாய் இழுத்து மேடையால் தள்ளி விழுத்திவிட்டு அடைகாத்த நாதர் கோபாவேசம் கொண்டு தான்தோன்றித் தனமாக ஆடுகிறார்.

ஆரடா நீ கூறடா வடுவா -இந்தக்
கூட்டுக்கே இங்கு நானெல்லோ தலைவா.
பாரடா என் காலிலே விழடா-பெரும்
பேச்செலாம் பேசி ஆசனம் பெற
நானெல்லாம் ஒரு பேடியா மடையா

இந்த நேரத்தில் நாடக இயக்குநர் ஓடிவந்து அடைகாத்த நாதரின் கையைப் பிடித்து சாந்தப்படுத்தி கோபப்படாதே நாதா, இது ஒரு கூத்துக்கு நடத்திற நாடகம். அடிதடியில இறங்கிடாமல் உன்ர அறிமுகப்பாட்டப் பாடிடு ராசா.

அடை: அதென்ன அவங்களெல்லாம் என்ர முதுகில ஏறிக்கொண்டு தங்களப் பற்றிப் பாடுறது? விடடா கைய. இயக்குநர் கெஞ்சுகிறார்! அது அவங்க பாட்டில கத்திட்டுப் போறாங்க நீ ஒம்பாட்டப் பாடு ராசா, பாடைய்யா பாடு! என் செல்ல மெல்லே ஒருவாறு சாந்தப்பட்டு அடைகாத்தவர் தன் அறிமுகப் பாட்டைப் பாடுகிறார்.

ம்!
ஊஹிம்!
ம்! ம்!
அடை, அடடடை அடை, அடிடா,-அட
அடைகாத்த நாதனென்பது நானே!
அனைவரு மெனை யறி வாரே
ஆசையாசையாய் ஒரு கூட்டு-அரும்
பாடுபட்டுக் கட்டி வைத்தேனே
காக்கை கட்டிய இக்கூட்டில்-கள்ளக்
குயில்கள் முட்டையிடப் பார்த்தால்-அடை
காக்க நானொரு முட்டாள் என
மொட்டையடிக்க முனைந்திட்டார்.
கப்பம் வரிகளின் பெயரால்-என்
கையிலிருக்கின்ற கறையை
சுத்தம் செய்யவெனப் பார்த்தால்-எனைச்
சுத்தி விழுங்கிட வாறார்.
அடைக்காத்த நாதனது நானே-எனை
ஆரும் மேய விடு வேனோ?
அடே! அடைகாத்த நாதனது நானே!

அடைகாத்த நாதன் பாடிவிட்டுப் போக சுரக்காப் பிரட்டர் மெதுவாக மேடையை எட்டிப் பார்க்கிறார். இயக்குநர் "போபோ போய் உன்ர பாட்டப் பாடு கெதியா கூட்டமெல்லாம் மன போயிட்டு எண்டு உந்தத் தள்ள தொப்பென்று வந்து மேடையில் விழுந்து எழும்பிப் பாடுகிறார்.

சுரக்காய் பிரட்டர் வந்தேனே
எனக்காய் இயக்க மிழந்தேனே
சுருக்காய் புகழ் பதவி எய்த
இடுக்கால் நுழைந்து வந்தேனே
சுரக்காய் பிரட்டர் வந்தேனே!

சரிசரி போதும் நிப்பாட்டெண்டு கூட்டில இருக்கிற மற்றவையளும் இயக்குநரும் கத்த, ஒரு நிமிஷம்.. ஒரே ஒரு நிமிஷ மெண்டு கேட்டுக் கொண்டு தொடர்ந்து பாடினார்.

பீ. பீ. ஸி, ஐ.பீ.சி இங்குண்டோ, உமக்கு
இப்போதே என் பேட்டி தந்தேன்.
கூட்டைக் கட்டியது நானே-என்
கூடவே செல்வமும் தானே!
தலைப்புச் செய்தியாய் நீர்போட்டால்-நான்
தலைவணங்கி வாக்குக் கேட்பேன்!
நாடெனைப் போற்றுதல் வேண்டும்-நான்
பாராளுமன்றம் செல்ல வேண்டும்.

உள்ளேயிருந்து அழுக்கரும் வினையறு மூர்த்தியும் கத்துகிறார்கள். நிறுத்து நிறுத்து. யாரது பேட்டி கீட்டியெண்டு தன்ர பெயரப் பித்திறது. யோவ்! கிழிஞ்சுது கூட்டு! என்று பார்வையாளர்கள் கத்துகிறார்கள். இயக்குநர் அவசர அவசரமாய திரையை மூடுகிறார். திரைக்குப் பின்னால் பெருத்த அமளி துமளி

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)






# வைரம்

செல்லிடப்பேசி எனப்படும் செல்ஃபோன்கள் இப்போது எல்லோரது கைகளிலும் இருக்கும் வண்ணம் செலவதிகம் இல்லாமல் எங்கும் பரவி விட்டன.

பல்வேறு விதமான செல்ஃபோன்கள் வகைகளில் படத்தில் காணப்படும் இந்த ஃபோனும் ஒரு வகை. இந்த வகை ஃபோனில் இது ஒன்று மட்டுமே உலகில் உள்ளது.

காரணம் பெரும் பணக்காரர் ஒருவருக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஃபோன்தான் இது. இதன் பெறுமதி 62 ஆயிரம் ஸ்டேர்லிங் பவுண்கள். நம் நாட்டு மதிப்பில் 81 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய்.

இந்த ஃபோனில் அப்படியென்ன விசேஷம் என்கிறீர்களா? இந்த ஃபோனின் வெளிப்புறம் வைரக்கற்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இதை இலண்டனைச் சேர்ந்த 'டி கிரிஷோ கோனோ' ஆபரண வடிவமைப்பாளர்கள் வடிவமைத்தனர்.






# புகைப்படங்கள்

இலண்டனில் உள்ள சௌத்தாம்டனைச் சேர்ந்த பீட் பெள்ஹாம் என்பவர் ஒரு புகைப்படப்பிடிப்பாளர். இவர் சிறு வயது முதலே கண்களில் காணும் காட்சிகளை கமெராவில் பதிவு செய்து விடுவார்.

அந்தப் படங்களை எல்லாம் தொகுத்து தனது அறையின் சுவர்களை எல்லாம் அலங்கரித்து விட்டார். அதுமட்டுமன்றி தான் பயன்படுத்தும் மேசை, இருக்கை, தரைகளில் அந்தப் புகைப்படங்களைக் கொண்டு அலங்காரம் செய்து விட்டார்.

இவைபோதாதென்று தன்னுடைய ஆடைகளையும் புகைப்படங்களைக் கொண்டே உருவாக்கி அணிந்து கொள்கிறார்.





# ஒட்டக ஓட்டம்

குதிரைப்பந்தயம் போல் ஒட்டக ஓட்டப் பந்தயங்களும் நடந்து வருகின்றன. அண்மையில் அகில உலக ஒட்டக ஓட்டப்பந்தயம் கென்யாவில் உள்ள யோப்பக் பார்பரா நகாவா என்ற மைதானத்தில் நடைபெற்றது.

12வது தடவையாக நடந்த இந்த ஒட்டக ஓட்டப் பந்தயத்தில் ஆபிரிக்க நாடுகளுடன் நோர்வே மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும் பங்கேற்றன.

இருப்பினும் அதிக தடவைகள் வென்ற கென்ய நாட்டு ஒட்டகமே இந்த முறையும் உலகக் கோப்பையை வென்றது. மேலுள்ள படத்தில் பந்தயத்திற்குத் தயாராகும் ஒட்டகங்களும் கீழுள்ள படத்தில் முதலாவதாக வந்த ஒட்டகமும் அதை ஓட்டிச் சென்றவரும் உள்ளனர்.



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி ஷெஹானி சகாயராஜா 17. 1.2001

[illegible]



# மரக் கவிதை

கண்ணில் காண்பதைச் சிலர் தமது கைவண்ணத்தால் கலையாக்கி விடுவார்கள்.

படத்தில் பாதி புதையுண்ட மனிதத் தலைபோல் இருப்பது மரம் என்று சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். பூங்கா ஒன்றில் வேருடன் சாய்ந்த மரம் ஒன்றைக் கொண்டு ஒரு தோட்டக்காரர் வடிமைத்திருக்கும் மனிதத்தலைதான் இது. இராட்சத மனிதன் ஒருவன் பூமியில் புதையுண்டிருப்பது போல் இருக்கும் இந்த மரக்கவிதை அருகில் உள்ள செடி கொடிகளின் உதவியுடன் அழகுற வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

# 1வது பிறந்தநாள் வாழ்த்து



யோய் சுரேஸ் அஷர் 10.11.2001

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோய் சுரேஷ்-தர்சினி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் அஷர் தனது 1வது பிறந்த தினத்தை 10.11.2001 அன்று தனது இல்லத்தில (Nederland) வெகு விமர்சையாகக் கொண்டாடினார்.

இவரை வாழ்த்துவோர் அன்புள்ள அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமன்மார், அத்தைமார், மச்சான், மச்சாள், அண்ணன்மார் மற்றும் அம்மம்மா அம்மப்பா, மாமன்மார், மாமிமார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் ஆண்டவன் அருள் பெற்று பல்லாண்டு காலம் சகல செளபாக்கியத்துடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

தகவல் சித்தப்பா-உதயன், நெதர்லாந்து



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவையில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் நவ.18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.